# தமிழ் உலகம்

London

அனைத்துலக தமிழ் சஞ்சிகை

இல. 9 July 2004

Free Issue

International Tamil Magazine



முதலில் இடைக்கால தீர்வு!



பாராளுமன்ற
தாக்குதல் எதிரொலி!



கறுப்பு ஜூலையாகிய
சிவப்பு ஜூலை....!



## இறைமையை மீறாத இடைக்கால நிர்வாகம்?

## உலகை உலுக்கிக் கொண்டிருக்கும் 'அபுகிறைப்' சிறை சித்திரவதைகள்...!

'உலகத்தமிழர் பொருளாதார உயர்வை ஊக்கிடுவோம்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# futture homes
Mortgage Specialist



- Residential Mortgages
- Remortgages
- Commercial Mortgages
- Secured Loans
- Life Insurance
- Building Insurance
- Public Liability Insurance
- Personal Loans

We also do finance to purchase properties in Sri Lanka, Portugal, Spain, France etc.

குறைந்த வட்டியுடன் 95 வீதத்திற்கும் மேற்பட்ட வீட்டுக் கடன்களை (Mortgage) மிக இலகுவான வழிமுறைகளில் செய்துதரப்படும்,

போதிய வருமானம் குறைவு!
நிரந்தர முகவரி இன்மை!!
நீதிமன்றப் பதிவுகள்!!!
வங்கிகள் கடன் வழங்க மறுப்பு!!!!
அனைத்தையும் இலகுவாக்க காத்திருக்கிறோம்.

வெளிநாடுகளில் இருந்து வந்து பிரித்தானியாவில் வீடுவாங்க விருப்புகிறீர்களா, அனைத்து விடையங்களையும் எங்களிடம் விட்டுவிடுங்கள் : வீடு உங்களது ஆகிவீடும்.

மேலதிக விபரங்களுக்கு:- முரளி

**Futture Homes Ltd**
**Imex House, Oxgate Lane, London, NW2 7HJ**
**Tel: 0845 126 0622 / 020 8438 0615**
**Fax: 020 8438 0651** info@futturehome.com

# TRAVEL EXPRESS
we care in the air..

**Travel Agents & Foreign Exchange Worldwide**

- Cheapest fares worldwide
- Tickets delivered to your doorstep
- Select your seats while booking
- PTA/TOD available
- Air Sea Cargo/Hotel & Car hire
- Worldwide Tour Arrangements
- Emergency Travel Arrangements
- Inbound Tickets arrangements

Agent for ATOL Holder
Major Credit Cards Accepted
subject to conditions
5 Sheaves Hill Parade
Colindale
London NW9 6RS
Fax 0870 085 3000
E-mail: bobby@travelchoose.com
vgptrade@hotmail.com

SriLankan

Book and Confirm your tickets on-line through our website
**www.travelchoose.com**

**020 8537 1555**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தமிழ்உலகம்
London

தமிழ்உலகம்
இலண்டன்
அனைத்துலக தமிழ் சஞ்சிகை

Published by
TAMILULAGAM
Global Lanka Publications Ltd.
The United Kingdom

நிர்வாக / பொறுப்பாசிரியர்
சுப்பிரமணியம் கிருஷ்ணதாசன்

பிரதம ஆசிரியர்
வேலுப்பிள்ளை தர்மலிங்கம்

உதவி ஆசிரியர்
பிரதீபா சபாநடேசன்

இணை ஆசிரியர் & வடிவமைப்பு
ஷர்மிலா ரெட்ணசிங்கம்

Head Office:-
TAMILULAGAM
899-901 Finchley Road
London NW11 7PE
The United Kingdom

Tel: 0044 20 8455 9001
Fax: 0044 20 8731 7870
E.Mail: tu@globallanka.co.uk

Sri Lanka Office:-
TAMILULAGAM
Meewella Building, 7th Floor
329, Galle Road,
Colombo - 04, Sri Lanka

Tel: 0094 112 59 1000
Fax: 0094 112 59 1003
E.Mail: tugloballanka@sltnet.lk

Printed by
Professional Systems Integrated Ltd.

தமிழ்உலகம் வெளியாகும் நாடுகளுக்கான
வருட சந்தா முற்பதிவு கட்டணங்கள்
(12 இதழ்களுக்கு அஞ்சல் கட்டணம் உட்பட)
(Annual subscription including postage)

FOR 12 ISSUES

| | |
|---|---|
| Australia | : $ 30 |
| Canada | : $ 25 |
| Denmark | : Kr125 |
| France | : 20 € |
| India | : Rs. 500/= |
| Germany | : 20 € |
| Italy | : 20 € |
| Malaysia | : MYR 75 |
| Netherland | : 20 € |
| New Zealand | : 30 NZD |
| Norway | : Kr140 |
| Singapore | : SGD 30 |
| Sri Lanka | : Rs. 600/= |
| Sweden | : Kr 150 |
| Switzerland | : SF 25 |
| United Kingdom | : £ 12 |
| USA | : $ 20 |
| All other country | : US$20 |


**July 2004**

# சக பக்கங்களில்


### அரசியலும் தற்கால நிகழ்வுகளும்

தாயகம் - இறைமையை மீறாத இடைக்கால நிர்வாகம் ........ 2
புலம் பெயர் மண் - 'யூரோ 2004' கால்பந்து தொடர் ........ 5
உலகநோக்கு - இந்தியா சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொள்ளாது ........ 6
- உலகையே உலுக்கும் 'அபுகிறைப்' சிறை சித்திரவதைகள் ........ 7

### பொருளாதாரமும் அதன் வலிமையும்

தாயகம் - பலாலி விமான தளம் - நெஞ்சில் ஓர் முள் (தொடர்ச்சி)........ 8
- கறுப்பு ஜூலையாகிய சிவப்பு ஜூலை ........ 9
உலகம் - பொருளாதார வலுவில் ஐரோப்பிய ஒன்றியம் ........ 10

### கலையும் கலாசாரமும்

நாட்டாரியல் - கலாபூஷணம் தேவதாசன் (தொடர்ச்சி)........ 12

### சமூகமும் சூழலும்

நேர்முகம் - பிரபல ஓவியர் புகழேந்தி ........ 14
மருத்துவம் - இரத்தமேற்றாமல் அறுவைச்சிகிச்சை ........ 15
மகளிர் பகுதி ........ 16

### காலமும் மாற்றமும்

இராசி பலன் - பிரம்மஸ்ரீ சோ.சிவகடாட்ச சர்மா ........ 18
விசேட தினங்கள் - கொழும்பில் ஆடிவேல் விழா ........ 19
Woman & Children ........ 20

### கருத்தும் கணிப்பும்

வாசகர் எண்ணங்கள் ........ 22
சந்தா ........ 23

### காட்சியும் கானமும்

திரைவலம் ........ 24

### எண்ணும் எழுத்தும்

தொடர்கதை - திக்கம் சிவயோகமலர்........ 26
மழலைகள் மன்றம் ........ 28
கவி வலம் ........ 30
குறுக்கெழுத்துப்போட்டி ........ 31
சிறுகதை - தாரா ........ 32

### பொழுதும் ஓய்வும்

ஓவியர் புகழேந்தியின் கருத்தாழமிக்க ஓவியங்கள் ........ 34
சித்திரத்தொடர்கதை ........ 35
விளையாட்டு ........ 36
தேர்வுக்கு தயாராகுபவர்களுக்கு ........ 37
வர்த்தக நேர்முகம் - பொது முகாமையாளர் - 'குளோபல் ரவர்ஸ்'........ 38
நாட்டுப்பற்றாளர் நடேசன் ........ 39

### விளம்பரமும் வியாபாரமும்

மணமக்கள் தேடல் ........ 40
வர்த்தக விளம்பரங்கள் ........ 41


2004-07-10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

# இறைமையை மீறாத இடைக்கால நிர்வாகம்?

சண்டைக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் தத்தளித்தது போலவே தென்னிலங்கை இப்பொழுது சமாதானத்திற்கும் தாக்குப்பிடிக்க முடியாமல் திணறுகின்றது. தவிர்க்க முடியாதபடி விஸ்வரூபம் எடுத்துள்ள இரண்டு முக்கிய விடயங்களை தீர்த்து முன்னேற வேண்டிய இக்கட்டான நிலையை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்கு வரலாறு நிர்ணயித்துள்ளது. ஒன்று, உறுதியான அரசாங்கத்தை அமைத்துக்கொள்ள வேண்டும். மற்றது உறுதியான சமாதானத்தை அடைந்து விடவேண்டும். கிழக்கில் உருவாகி வரும் அசாதாரண சூழ்நிலை இதனைக்குழப்பாமல் பார்த்துக் கொள்ளவே வேண்டும். ஒன்றுக்கொன்று துணையாக இருக்கக்கூடிய இவ்விரண்டையும் நிறைவேற்றுவதற்கு ஏற்ற தளத்தை, முக்கியமாக தென்னிலங்கை சக்திகள் மத்தியில் உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும். இதுவே இன்று ஆட்சியிலுள்ள அல்லது ஆட்சயில் அமர நினைக்கும் எந்த அணிக்குமான வரலாற்று நிர்ப்பந்தம் ஆகும். இந்தச்சவாலை சமாளிக்கும் உறுதி நிலைப்பாடு அரசாங்கத்திடம் அல்லது எதிரணியினரிடம் இருக்கின்றதா?



ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க

உறுதியான பெரும்பான்மையுடனான ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் நிறைவேற்று அதிகாரத்தினால் அடிக்கடி அச்சுறுத்தலுக்குள்ளாகி வந்தது. சமாதானத்திற்கு அத்தியாவசியமான பாதுகாப்பு அமைச்சு உட்பட சில அமைச்சுக்கள் வலிந்து பிடுங்கியெடுக்கப்பட்டன. பின்னர் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு வலிந்து ஒரு பொதுத் தேர்தலும் நடத்தப்பட்டது. அரசமைப்பதற்கு தேவையான அறுதிப்பெரும்பான்மையை தேர்தலில் சுதந்திர முன்னணிக்கு வழங்க மக்கள் மறுத்துவிட்டனர். ஆடத்தெரியாதவள் மேடை மீது தவறு கண்டது போல இதற்குக் காரணம் ஜே.ஆர்.ஜயவர்த்தனாவினால் அறிமுகம் செய்யப்பட்ட தேர்தல் முறை என்று குற்றச்சாட்டுக்களை கூறியபடி சிறுபான்மை அரசாங்கமொன்று வலிந்து அமைக்கப்பட்டது. அது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி கொடுக்கும் முண்டில் தங்கி நொண்டி நொண்டி நடந்து கொண்டிருக்கின்றது. இதனைத்தூக்கி நிறுத்துவதற்கு தேவையான பெரும்பான்மையை எதிர்க்கட்சி எம்.பிக்களின் மத்தியில் தேடும் முயற்சியிலும் சுதந்திர முன்னணிக்கு வெற்றி கிடைக்கவில்லை. ஹெல உறுமய, முஸ்லிம் காங்கிரஸ், இ.தொ.கா. ஆகியவற்றின் எம்.பிக்களை வசப்படுத்தும் முயற்சிகள் வெற்றி தரவில்லை.

அடுத்து தமிழ் அரசுக்கட்சியின் 22 எம்.பிக்கள் மீது கண் வைக்கப்பட்டிருக்கின்றது. இவர்களது ஆதரவையும் ஒரு குறிப்பிட்ட மட்டத்திலேனும் பெறும் ஆசையும் இருக்கின்றது. இறைமை மீறாத இடைக்கால நிர்வாகம் என்னும் சொற்சிலம்ப வலைக்குள் வைத்து இவர்களையும் இவர்களுக்குப் பின்னாலுள்ளவர்களையும் சமாளிப்பது எப்படி? நாட்டின் இறைமை என பேரினவாதிகளால் கருதப்படுவது தமிழ் தேசிய இனத்தின் வாழ்வு தொடர்பான விடயங்களில் இறுதி முடிவு எடுக்கும் உரிமை சிங்களவர் கைகளில் இருக்க வேண்டும் என்பதையே. இந்த நிலைப்பாட்டிலிருந்து பேரினவாத தலைமை பிடிவாதமாக மாறாதிருப்பதானது தமிழ் தேசிய இனம் தன்னைத்தான் ஆள வேண்டும் என்னும் தனது பிடிவாதத்தை தளர்த்துவதற்கு விரும்புவதானாலும் கூட அதற்கு இடமளிப்பதாக இல்லை என்ற நிலை இருக்கின்றது. இரு இனங்களுக்குமிடையில் பிரதான ஆப்பாக இது இருப்பதனால் 22 எம்.பி.க்களின் ஆதரவு தொடர்பில் உடனடி முடிவுகளுக்கு இடமில்லை.

இந்த இலட்சணத்தில் உறுதியான சமாதானம் பற்றிய பேச்சுக்களே அர்த்தமற்றவையாகி விடலாம். ஆனாலும், அந்த விடயத்தின் காத்திரம் காரணமாக மீண்டும் மீண்டும் பேச்சுக்கள் அது பற்றியதாகவே அமையப் போகின்றது. எம்.பிக்களின் தலைகளை எண்ணிக்கணக்கிட்டு ஒரு பெரும்பான்மையை சேர்த்துக் கொள்ளும் முயற்சிகள் மட்டுமன்றி ஒரே அணியாக இனங்காட்டி மக்களின் ஆணையை கோரிய கட்சிகளிடையே தோன்றியிருக்கும் கருத்து வேறுபாடுகள் சமாதான பாதையில் ஒரு அடியையாவது முன்னெடுக்க வைக்க உதவப் போவதில்லை என்ற நிலை வலுவடைந்து வருகின்றது. ஏற்கனவே அரசிற்கு இருக்கும் எம்.பிக்களின் எண்ணிக்கை உடைந்து சிதறி விடுமோ என்னும் அச்சத்தையும் இது ஏற்படுத்துகின்றது. இதே வேளை, ஜே.வி.பியை பழக்கியெடுத்து இனப்பிரச்சினைத் தீர்வுக்கு உடன்பட வைக்கலாம் என்னும் நம்பிக்கை ஒரு புறம் ஜனாதிபதியின் வட்டாரங்களிலிருந்து வெளிவிடப்படுகின்றது. இவ்வாறு துணிச்சலாக நம்புவதற்கு ஜே.வி.பியிடம் என்ன பலவீனங்களை இவர்கள் கண்டார்களோ தெரியவில்லை. மூன்று மாதங்களில் நிறைவேற்றுவதாகக் கூறிய தேர்தல்கால சொற்சிலம்பங்களிலிருந்து மிகவும் சுலபமாக தம்மை விடுவித்துக்கொண்டு, ஆட்சியின் நிர்வாகப்பணிகளில் இறங்கி விட்டிருப்பது போன்று ஜே.வி.பியும் காலப்போக்கில் புதிய யதார்த்தங்களை புரிந்து கொள்ளும் என்று எதிர்பார்க்கின்றார்களா? பாம்பின் கால் பாம்பறியும் என்று அதனை விட்டு விடலாம். ஆனால் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை விடயத்தில் ஜே.வி.பி தனது அறிக்கைப்போரை மேலும் தீவிரப்படுத்தி வருவது தெரிகிறது.

விடுதலைப்புலிகள் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனைகளில் உறுதியாக நிற்பதுதான் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் தடைக்கல்லாக இருக்கின்றது என்று ஜே.வி.பி பிரகடனம் செய்திருக்கின்றது. தனது இந்தக் கொள்கையை இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் தூதுவர்களுக்கு விளக்கும் முயற்சியிலும் இறங்கியுள்ளது. ஜே.வி.பியின் இந்த நிலைப்பாடு விசித்திரமானது. இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை பேச்சுக்களுக்கான அடிப்படையாகக் கொள்ளப்போவதாக 22 தமிழ் எம்.பிக்களிடம் ஜனாதிபதி கூறியிருப்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது தனிப்பட்ட அபிப்பிராயம் என்று ஜே.வி.பி விமர்சித்திருக் கின்றது. கூட்டாக சிந்தித்து, கூட்டாக செயற்படுவதற்கான கூட்டு உணர்வின் மைக்காக அது சுதந்திர முன்னணி தலைமையை கண்டித்திருக்கின்றது. தீர்மானம் மேற்கொள்ளும் நடைமுறை கள் ஒருதலைப்பட்சமானதாக இருக்கின் றன. ஜனாதிபதியே தீர்மானங்களை எடுத்து தன்னிச்சையாக வெளியிட்டு வருகின்றார் என்று ஜே.வி.பியின் குற்றச் சாட்டுக்கள் உள்ளன. இதன் பின்னணி யிலேயே இடைக்கால தன்னாட்சி தொடர்பில் ஜனாதிபதி தனிப்பட்ட அபிப்பிராயத்தை வெளியிட்டதாக கிண் டல் செய்யப்பட்டிருக்கின்றது போலும். ஆனாலும் விடயம் தாற்பரியமானது. அடிப்படை விவகாரங்கள் தொடர்பில் கூட்டணிக்கட்சிகளின் உடன்பாடின்றி எதனையும் அமுல் செய்ய முடியாதென்பதே இதனால் தெரியப்படுத் தப்படும் எச்சரிக்கையாகும். கட்டிப்

மாகாணங்களின் அபிவிருத்தியை பொறுத்து குறுகிய கால, உடனடி யாக செய்யப்படவேண்டிய ஆற்றுப் படுத்தல் நடவடிக்கைகள் அங்கீக ரிக்கப்பட்டுள்ளன. இவற்றை அப் பிரதேச மக்களின் நிர்வாகமே மேற்பார்வை செய்யும் என்னும் கொள்கையும் மாகாண சபைகள் ஆரம்பிக்கப்பட முன்னிருந்தே சம்பந்தப்பட்டவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. கடந்த தேர் தலின்போது ஐ.ம.சு.மு. தலைவர்கள் கொடுத்த வாக்குறுதிகள் யாவை? மூன்று மாதங்களுக்குள் 60,000 பேர் களுக்கு வேலை வாய்ப்பு. 70 சதவீதம் சம்பள உயர்வு என்பவை தானே! இந்த உடனடி நிவாரணங்களின் அடிப் படை என்ன? அபிவிருத்தியை அடைய நீண்ட காலம் எடுப்பதால் மக்களை ஆற்றுப்படுத்தும் இடைக்கால நிவார ணங்கள் வேண்டுமே என்ற ஆவல்லவா?


புலிகளின் அரசியற்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

அத்தகைய ஒன்றினை தன் னாட்சி அதிகார சபையை இன்றே நிராகரிப்பதன் மூலம் உடனடியாகவே ஏற்படுத்த முடியும் என்று பேரினவாதி கள் நம்புவது தெரிகின்றது. இந்தத்


தமிழ்க்கூட்டமைப்பு எம்.பிக்கள்

பிடித்து இழுத்தேனும் மேலும் ஒரு எம்.பியையாவது தம்முடன் வைத்துக் கொள்ள முடியாத அரச தரப்பு, ஜே.விபியின் 39 எம்.பிக்கள் உள்ளி ருந்தபடியே காட்டக்கூடிய எதிர்ப்பை எவ்வாறு சமாளிக்கப்போகின்றது. அதற்கும் அப்பால் இனப்பிரச்சினைத் தீர்வு மக்களின் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்புக்கு விடப்படும் ஒரு கட்டம் வரும்போது ஜே.வி.பி. செய்யப்போகும் பிரச்சாரம் என்னென்ன விளைவுகளை உற்பத்தி செய்யும்? வீடு வந்து சேர முடியாத விளைபொருளுக்காக இத்தனை பாடா? என்றே தமிழ் மக்கள் எண்ணுவர்.

ஜே.வி.பியின் தமிழர் தொடர்பான நிலைப்பாடு மார்க்சிச- லெனினிச நிலைப்பாடல்ல. பௌத்த, சிங்கள பேரினவாத நிலைப்பாடேயாகும். மரத்தி லிருந்தோ மலையிலிருந்தோ வீழ்ந்து கிடப்பவனுக்கு முதலில் முதலுதவிச் சிகிச்சையை அளிக்க வேண்டுமென்று கேட்பதால் நிரந்தரச்சிகிச்சைக்கான ஏற்பாடுகள் செய்ய முடியாமலிருக் கின்றது என்று ஜே.வி.பி கட்சியினர் தமிழர்களின் தன்னாட்சிக் கோரிக்கை பற்றி விளக்கம் தருவது போலிருக்கின்றது. போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு

இதனையே தமது அபிமானம் பெற்ற தலைமையின் ஆசிகள் பெற்ற, இடைக் கால நிர்வாக சபையொன்றினூடாக அடைவதற்கு பொருத்தமான நிறுவன ஏற்பாடாக தமிழர்கள் எதிர்பார்க்கின்றார் கள். அவ்வளவு தானே! இதனை அமெ ரிக்க, பிரிட்டிஷ், இந்திய தூதரகங் களுக்கு விளக்க வேண்டும் என்பது,

திசை நோக்கிய ஆரம்ப பிரசாரத் தையே இ.த.அதி. சபைக்கெதிரான பிரச்சாரமாக ஜே.வி.பி முன்னெடுக் கின்றது. யுத்தத்தின் மீது விருப்பங் கொண்டவர்களின் நடவடிக்கைகள் இவை என்பதை இவற்றின் மூலம் இனங்காண முடிகின்றது. அரசின்

**தமிழ் மக்களின் நம்பிக்கையை பெறும் முயற்சிகளில் இறங்காது நிற்பதுடன் தன்னை ஒரு உறுதியான அரசாங்கம் என்று வெளிக்காட்டாமலும் இருக்கும் நிலையில் அரசு சமாதானத்தை நோக்கி நகர்கின்றதா? யுத்தத்தை நோக்கி நகர்கின்றதா? என்னும் சந்தேகம் எழுகின்றது.**

காலங்கடத்தும் பேரினவாத நிலைப் பாடல்லவா? நிரந்தரத்தீர்வுக்கான பேச் சுக்கள் சண்டைக்குப்போன்றே இரண்டு தசாப்தங்களை எடுப்பதாகவும் சிக்கல் கள், பிரச்சினைகள் நிறைந்ததாகவும் இருக்கலாம் என்ற ஊகங்களின் அடிப் படையிலும், இதற்கான பேச்சுக்களில் இரண்டு கருத்து முரண்பட்ட தரப்பினரே கலந்து கொள்வதாலும், பிறகாரணங் களாலும் இது தோல்வியுறுமானால் தவிர்க்க முடியாதபடி ஏற்படப்போவது சண்டையே என்பதும் நிச்சயமானது.

படைத்துறை சார்ந்த நடவடிக்கைகள் அரசின் போக்கும் இத்தகையது தான் என்பதை உணர்த்துகின்றன. புரிந்து ணர்வு உடன்பாட்டில் கூறப்பட்டதான இராணுவ சமநிலை பேணுதல் என்னும் நிலைப்பாட்டையும் கடந்து படைத்து றையை தீவிரமாக பலப்படுத்த அரசு முன் வந்திருப்பது சந்தேகங்களை எழுப்புகின்றது.தமிழ் மக்களின் நம்பிக் கையை பெறும் முயற்சிகளில் இறங் காது நிற்பதுடன் தன்னை ஒரு உறு தியான அரசாங்கம் என்று வெளிக்காட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாமலும் இருக்கும் நிலையில் அரசு சமாதானத்தை நோக்கி நகர்கின்றதா? யுத்தத்தை நோக்கி நகர்கின்றதா? என்னும் சந்தேகம் எழுகின்றது. பட்டும் படாமலும் சமாதானம் என்னும் சொல் உச்சரிக்கப்படுகின்றதேயன்றி உறுதியான வெளிப்பாடுகள் இல்லாமலிருக்கின்றது. புலிகளுடன் பேசக்கூடாது. நோர்வே அனுசரணை தேவையில்லை. ஒற்றையாட்சிக்குள் தீர்வு, இடைக்கால தன்னாட்சி சபை வேண்டாம். என்பன ஜே.வி.பியின் அடிப்படையான கொள்கைகள். அரசு அமைக்கப்பட்ட பின் சில தளர்வுப்போக்குகள் தெரிந்தாலும் இடை. தன்.அதி.சபை விடயத்தில் அது கடும் தொனியில் எதிர்க்க முற்பட்டுள்ளது. அது உண்மையில் ஹெல உறுமயவுடன் சிங்கள தேசியத்தலைமைக்காக போராடி வருகின்றது என்பதன் பின்னணியை யாரும் மறுப்பதற்கில்லை.

இன்றைய சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்கு காலம் கடத்தும் தேவையொன்று இருக்கவே இருக்கின்றது என்பது பலரும் அறிந்தது. அது சிறுபான்மையரசாங்கமாயிருந்து கொண்டு நிறைவேற்று ஜனாதிபதி பதவியினால் முண்டு கொடுக்கப்பட்டு நிமிர்த்தி நிற்க வைக்கப்பட்டிருக்கின்றது. தன்னை வலுப்படுத்திக் கொள்வதற்கு மேலும் ஒரு ஏழு எம்.பிக்களையாவது எதிர்க்கட்சிகளிடமிருந்து பிடுங்கி எடுத்தோ எக்கட்சியை ஏமாற்றியாவது ஆக வேண்டிய பரிதாப நிலை. உயிர் வாழ்வதை உறுதிப்படுத்திக் கொள்வது மட்டுமல்ல, தன் இயலாமைக்கு அப்பாற்பட்ட ஆசைகளையும் நிறைவேற்றும் தீவிரம் அதனிடம் உள்ளது. அரசியலமைப்பு சீர் திருத்தத்தைச் செய்து நிறைவேற்றுப் பிரதமர் பதவியை உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும். அதனையும் கூட இன்னுமுள்ள ஒரு வருடத்தினுள் செய்து கொள்ள வேண்டும். அதாவது 2005 பிற்பகுதியில் நடக்கக்கூடிய அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் அது நிறைவேறினால் மட்டுமே இன்றைய ஜனாதிபதியினால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமராக ஆகி அரசியலிலும் தொடர வாய்ப்பு ஏற்படும். சுமக்க முடியாத இந்த சுமைகளை தலையில் வைத்தபடி தள்ளாடி நிற்கும் சுதந்திர முன்னணி அரசு சில மாதங்களையாவது ஓட்டிச்செல்ல பெரும் பிரயத்தனங்களில் ஈடுபட்டிருக்கின்றது. இத்தகைய பின்னணியில் தான் 22 தமிழ் எம்.பிக்களுடன் சந்திப்பு நடைபெற்றது.

காலங்கனிய வைத்து காரியங்களை முடித்துக்கொள்ளும் சாணக்கியம் கடந்த காலங்களில் பரீட்சிக்கப்பட்டதுடன் வெற்றியும் அடையப்பட்ட அனுபவம் ஜனாதிபதி தலைமைக்கு உண்டு. சற்று பின்னோக்கி பார்த்தால் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு உகந்த நேரம் வருவதை எதிர்பார்த்து காத்திருந்த ஜனாதிபதி அதுவரை ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுக்கள் நடத்துவது போல ஒரு நாடகத்தையே நடத்திக் கொண்டிருந்ததை நாடறியும். உலகமே அறியும்.இது போன்ற ஒன்றே 22 எம்.பிக்களுடனான பேச்சுக்கள் வைத்துக்கொள்ளும் முயற்சிகளுமாகும்.

ஒவ்வொன்றாக எதிரணியிலுள்ள ஒவ்வொரு கட்சியுடனும் பேசியாயிற்று. பேரங்கள் தோல்வியடைந்துள்ளன. மாகாண சபைத்தேர்தல்கள் முடிந்தால் மலையக கட்சிகளின் நிலைப்பாடு மாறலாம் என்ற நப்பாசையும், அதுவரையிலான காலத்தை தமிழரசுக் கட்சியை கனிய வைக்கும் நடக்க முடியாத முயற்சிகளில் செலவு செய்யும் எண்ணமும் உள்ளது. தன்னாட்சி அதிகார சபை பற்றியும் சமாதானம் தொடர்பிலான அரசின் நிபந்தனைகள் பற்றியும் பட்டும் படாமலும் வெளியிடப்படும் அறிக்கைகள், ஒரே அணியிலுள்ள கட்சிகளுடன் இறுக்கமான கொள்கைக்கட்டப்பாடுகளை ஒரு புறம் வைத்துக்கொண்டு மறுபுறம் தமிழ் எம்.பிக்களுக்கு வாக்குறுதிகளை

**கலைவாணன்**

வழங்குதல் என்பன இவற்றின் பின்னணியில் ஒரு உண்மை தலைநீட்டி நிற்கின்றது. அதாவது பல்லாயிரம் மக்களின் உயிர்களின் நல்வாழ்வும் எதிர்காலமும் கூட உள்ளடக்கப்பட்டுள்ள சமாதானத் திட்டங்கள் மிகவும் மலினப்படுத்தப்பட்ட நிலையில், வெறும் கட்சி அரசியலின் அனுகூலங்களுக்காக ஒரு அற்ப பொருளாக கணிக்கப்படுகின்றன.

## தென்னிலங்கையில் மக்களியக்கம்

சமாதானம் என்பதும் ஐக்கிய இலங்கையென்பதும் தென்னிலங்கையின் தீர்மானம் என்னும் சிக்கல் பொறியினுள் சிக்கி நிற்கின்றது என்பதே உண்மை நிலை. ஆட்சியைப்பிடிக்கவும், பகிர்ந்து கொள்ளவும் கூட்டுக்கள் அமைப்பதும், முன்னணிகள் உருவாக்குவதும் என்ற நிலைப்பாட்டிற்கு சற்று அப்பால் சென்று தென்னிலங்கை தலைமைகள் ஐக்கிய இலங்கையைக் காப்பாற்றுவதற்காக சமாதான இயக்கத்தை நடத்த முன் வரவேண்டும். இதில் காணப்படக்கூடிய



ஒரு வெற்றியானது நிலையான ஆட்சியையும் உறுதி செய்வதாக இருக்கும். மாறாக ஜே.ஆர். ஜய வர்த்தனவின் விகிதாசார பிரதிநிதித் துவத்தை சாடியபடியும் நிறைவேற்று அதிகாரத்தை வேறு ஒரு பதவிக்கு கைமாற்றி விட்டால் பிரச்சினைகள் தீர்ந்து விடும் என்று நம்பிக்கையூட்டியபடியும், பாராளுமன்றத்தை பாதாளமன்றமாக்கிக் கொண்டு அது மக்களை பிரதிபலிக்கின்றது என்று நம்ப வைத்துக் கொண்டும் இருப்பதிலிருந்து விலகி தென்னிலங்கையானது சமாதானத்திற்கான மக்களியக்கம் நடத்த ஆயத்தமாக வேண்டும்.

1994 இல் சமாதானத்திற்கான மக்கள் இயக்கம் சந்திரிக்கா தலைமையில் அரும்பியது உண்மை. நாம் தமிழர்களைக்கொன்று குவித்தபடி எமது நாட்டை பௌத்தநாடு என்று அழைக்க முடியுமா? என்ற கேள்வியை பௌத்த பிக்குகளிடம் நேரில் கேட்கவும், தமிழர் பிரச்சினை இந்தளவு தூரம் முற்றிவிட்டதற்கு எனது தந்தையாரும் கூட காரணமாயிருந்தார் என்பதை வருத்தத்துடன் கூறிக் கொள்ள விரும்புகின்றேன் என்று மக்கள் முன் தோன்றி விமர்சிக்க இருந்த ஆண்மையும் கொண்ட மக்களியக்கம் தென்னிலங்கையின் இன்றைய தேவை. இவ்வழியே தான் முதலில் ஐக்கிய இலங்கையையும் அதன் வெற்றியின் அடிப்படையில் உறுதியான அரசையும் முழு இலங்கையையும் பெற வேண்டும்.

உறுதியானதும் இறுதியானதுமான பேச்சுக்கள் மூலமான தீர்வுக்கு இதனை நம்பி ஏற்றுச்செயற்படும் தலைமையே வரலாற்றுத்தேவை. இடைக்கால தன்னாட்சி சபையொன்று நிறுவப்பட்டு நடைமுறையில் அதன் செயற்பாடுகளை அவதானித்து, தென்னிலங்கை மக்களின் மனமாற்றத்தில் திருப்தியடைவதற்கு தமிழ் மக்கள் காத்திருக்கின்றார்கள். இதனைத் தொடர்ந்தே நிரந்தர சமாதானம் ஏற்பட முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'யூரோ 2004' கால்பந்து தொடர்




ஐரோப்பா கண்டத்தைச் சேர்ந்த நாடுகள் பங்கேற்கும் கால்பந்து ரசிகர்களுக்கான அற்புதமான கால்பந்து திருவிழா 'யூரோ 2004 கால்பந்து சம்பியன்ஷிப்' தொடர் தற்போது நடைபெற்று வருகின்றது. கடந்த மாதம் (ஜுன்) 12 ஆம் திகதி போர்த்துக்கலின் லிஸ்பென் நகரில் போட்டிகள் ஆரம்பமாகின. தொடரில் மொத்தம் 16 அணிகள் பங்கேற்றன. இவை 'ஏ', 'பி', 'சி','டி' என நான்கு பிரிவுகளாகப்பிரிக்கப்பட்டு போட்டிகளில் பங்கேற்றன.'ஏ' பிரிவில் போர்த்துக்கல், ஸ்பெயின், ரஷ்யா, கிரீஸ் ஆகிய நாடுகளும், 'பி' பிரிவில் பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து, குரோஷியா ஆகிய நாடுகளும், 'சி' பிரிவில் ஸ்வீடன், டென்மார்க், பல்கேரியா, இத்தாலி ஆகிய நாடுகளும் 'டி'பிரிவில் செக் குடியரசு, ஜேர்மனி,லத்வியா, ஹொலந்து ஆகிய நாடுகளின் அணிகளும் இடம்பெற்றன.

'ஏ'பிரிவைப்பொறுத்தவரை வல்லமை மிக்க அணிகளாக ஸ்பெயின் போர்த்துக்கல் ஆகியவை விளங்கின. போர்த்துக்கல் தனது வெற்றிக்கு மிட் மத்தியகள வீரரான லூயிஸ் பிகோவையே நம்பியிருந்தது.

'பி'பிரிவில் அதிக பட்ச ரசிகர்களைக் கவர்ந்தது இங்கிலாந்து - பிரான்ஸ் அணி மோதலாகும். இதில் பிரான்ஸ் அணி 2-1 என்ற ரீதியில் இங்கிலாந்தை வென்றது.

'சி'பிரிவில் இத்தாலி, டென்மார்க் ஆகியவை வலுவான அணிகளாகக்கருதப்பட்டன. 'டி'பிரிவில் ஜேர்மனி, ஹொலந்து அணிகள் பலம் மிக்க அணிகளாகத்திகழ்ந்தன. முதல் லீக் சுற்றுப்போட்டிகள் ஜுன் மாதம் 23 ஆம் திகதியுடன் முடிவடைந்து காலிறுதிப்போட்டிகள் 24 ஆம் திகதி ஆரம்பமாகியிருந்தன. முதல் லீக் சுற்றுப் போட்டிகளில்,* ஜுன் 12 ஆம் திகதி போர்டோவில் நடைபெற்ற முதல் போட்டியில் களமிறங்கின போர்த்துக்கல் - கிரீஸ் அணிகள். இப்போட்டியில் கிரீஸ் அணி 2:1 கோல் என்ற விகிதத்தில் போர்த்துக்கல் அணியை வீழ்த்தியது.

அன்றைய தினம் பரோவில் ரஷ்ய - ஸ்பெயின் அணிகள் விளையாடின. உலகின் முன்னணி அணிகளுள் ஒன்றான ஸ்பெயின் ரால், கோன்சலேஸ் ஆகிய நட்சத்திர வீரர்களுடன் களமிறங்கியது. ஆனால் அதனுடன் மோதிய ரஷ்ய அணி வீரர்களின் கூட்டு முயற்சியுடன் தான் களமிறங்கியது. இப்போட்டியில் 1:0 என்ற வித்தியாசத்தில் ஸ்பெயின் ரஷ்யாவை வீழ்த்தியது.

* ஜுன் 13 ஆம் திகதி இங்கிலாந்து - பிரான்ஸ் நாடுகளுக்கிடையில் லிஸ்பெனில் நடைபெற்ற போட்டியில் பிரான்ஸ் வெற்றி பெற்றது. கால்பந்து விளையாட்டின் எதிரிகள் என்று அழைக்கப்படும் இந்த இரு நாடுகளும் விளையாடுவதை ரசிக்க கிட்டத்தட்ட 64,000இற்கும் மேற்பட்ட இருநாடுகளையும் சேர்ந்த ரசிகர்கள் அன்றைய தினம் குழுமியிருந்தனர்.

* ஜுன் 17 ஆம் திகதி காய்ம்பராவில் நடைபெற்ற இங்கிலாந்து - சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளுக்கிடையிலான போட்டியில் 3:0 என்ற விகிதத்தில் இங்கிலாந்து வெற்றியீட்டியது.

* ஜுன் 19 ஆம் திகதி செக் குடியரசு - ஹொலந்து ஆகிய நாடுகள் அவிரோவில் விளையாடின. இதில் செக் குடியரசு 3:2 என்ற கோல் அடிப்படையில் காலிறுதிக்கு தெரிவாகியது.

* ஜுன் 21 ஆம் திகதி குரோஷியா - இங்கிலாந்து ஆகிய நாடுகள் லிஸ்பெனில் விளையாடின. இங்கிலாந்து 4:2 என்ற விகிதத்தில் காலிறுதிக்கு தெரிவாகியது.

அன்றைய தினம் பிரான்ஸ் - சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளுக்கிடையில் காய்ம்பராவில் நடைபெற்ற போட்டியில் 3:1 என்ற கோல் அடிப்படையில் பிரான்ஸ் காலிறுதிக்கு தெரிவாகியது.

ஒரு பிரிவில் முதல் இரு இடங்களையும் பிடிக்கும் அணிகளே காலிறுதிக்கு தகுதி பெற முடியும். இதன்படி 'சி' பிரிவில் 3 அணிகளுமே தலா 5 புள்ளிகள் பெற்றிருந்தன.

இதை அடுத்து கோல் அடிப்படையில் சுவீடன் (8 கோல்) , டென்மார்க் (4 கோல் ) காலிறுதிக்கு முன்னேறின. 3 கோல்கள் மட்டுமே அடித்திருந்த இத்தாலி வெளியேறியது. முதல் காலிறுதிப்போட்டியில் இங்கிலாந்து - போர்த்துக்கல் அணிகள் மோதின.

**அரையிறுதியில் வெற்றிபெறும் அணிகள் ஜுலை 4 ஆம் திகதி நடைபெறும் இறுதிப் போட்டியில் விளையாடவுள்ளன.**

இம்முறை யூரோ கோப்பையை போர்த்துக்கல், செக் குடியரசு, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் ஒன்று கைப்பற்றும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**ஷாம் - இலண்டன்**

# பிறன்ற் தமிழ்ச்சங்கத்தின் புத்தாண்டு வெள்ளி விழா




பிறன்ற் தமிழ்ச் சங்கத்தின் புத்தாண்டு வெள்ளி விழாக்கொண்டாட்டம் கடந்த வைகாசி மாதம் 29 ஆம் திகதி வெம்பிளியிலுள்ள பிறென்ற் நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.



நாடகம், கிராமிய நடனங்கள், நகைச்சுவைக்கதம்பம் உட்பட பல்சுவை அம்சங்களுடன் பிறன்ற் தமிழ்ப்பாடசாலை மாணவர்களின் விசேட கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அறங்காவலரும் பிறன்ற் தமிழ்ப்பாடசாலை முன்னாள் ஆசிரியை, அதிபரான திருமதி கமலாசினி கெங்காதரன் உரையாற்றுகையில்," சங்கத்திலோ முதற்சங்கம், இடைச் சங்கம், கடைச்சங்கம் என தழிழை வளர்த்தனர் ஆன்றோர். ஆனால் சீமைதனில் நாமோ பிறென்ற் தமிழச்சங்கம் அமைத்து தமிழை வளர்த்து வருகின்றோம். புலம் பெயர்ந்து வாழும் நம்மவர், பிள்ளைகளின் கலாசாரத்தைப் பேணும் முயற்சியில் தொடர்ந்தும் பாடுபடுவோம்" என்றார்.

மானிப்பாய் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சிய கிளையின்

# 'பொங்கும் பொழுது 04'

மானிப்பாய் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சிய கிளையின் 'பொங்கும் பொழுது-04' நிகழ்ச்சி மே மாதம் 29 ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு இல்போட் நகர மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. சுமார் 400 வரையான மக்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக டாக்டர் செல்லத்துரை ஆனந்தவரதன் கலந்து கொண்டு சிறப்பித்தார். விஷேட விருந்தினராக கலந்து கொண்டு திரு.செல்வராஜா உரையாற்றினார்.




மேற்படி நிகழ்வில் திருமதி மாதினி ஸ்ரீஸ்கந்தராஜா மகன் அருணனின் கர்நாடக இசைக்கச்சேரியும், லூஸ் மாஸ்டர் ஐசாக் இன்பராஜாவின் நகைச்சுவை நாடகமும் ஐரோப்பாவின் முதற்தர இசைக்குழு என்னும் பட்டம் பெற்ற பிரகாஸ் இசைக்குழுவினரின் 'இசைத்தென்றல்' நிகழ்ச்சியும் இடம்பெற்றது. மானிப்பாய் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் லண்டனிலுள்ள தமிழப்பாடசாலை ஒன்றுடன் இணைந்து இம்மாதம் (ஜுலை) விளையாட்டுப்போட்டி ஒன்றை நடாத்த திட்டமிட்டு வருகின்றது.

இவ்வாறு மாணவர் சங்கம் தமிழ்ப்பாடசாலை ஒன்றுடன் இணைந்து விளையாட்டுப்போட்டியை நிகழ்த்துவது ஒரு புது முயற்சி எனவும் இதன் மூலம் லண்டனிலுள்ள தமிழ்ப்பாடசாலைகளை நாம் ஊக்குவிப்பதுடன் அங்குள்ள எமது பாடசாலைகளுக்கு சிறிய பண உதவியையும் வழங்க முடியுமென சங்கத்தின் தலைவர் திரு.ரவீந்திர மோகன் தெரிவித்துள்ளார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொள்ளாது


இந்திரா காந்தி

ஆசியாவின் முக்கிய வல்லரசான இந்தியா முக்கிய அரசியல் மாற்றத்தை நிகழ்த்தியிருக்கின்றது. சுதந்திர இந்தியாவின் சிம்மாசனத்தை மிக நீண்ட காலம் ஆதிக்கத்தில் வைத்திருந்த பின் ராஜீவ் காந்தியின் மறைவுடன் எதிர்க்கட்சி வரிசைக்கு அனுப்பப்பட்ட இந்திரா காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வந்து விட்டமையை விடவும் முக்கிய திருப்பமொன்று நிகழ்ந்திருப்பது குறிப்பிடத்தக்கதாயுள்ளது. நீண்ட போராட்டம் நடத்தி வெள்ளையனை வெளியேற்றிய இந்தியா வெள்ளை இனத்தவர் ஒருவரை பிரதமராக ஏற்பதற்கும் தயாராகிய நிலை ஒருபக்கமிருக்க, மதசார்பின்மையை மதித்து சீக்கிய மதத்தவரை பிரதமராக தேர்ந்தெடுத்திருப்பதுடன், சீக்கிய இனத்தவர் ஆயிரக்கணக்கில் படுகொலை செய்யப்பட்டதாலெழுந்த குரோதங்களையும் இந்தியர் என்னும் உணர்வினால் மறந்து விடவும் தயாராகியுள்ளமை இந்தியாவின் ஐக்கியத்திற்கான சிந்தனையை உன்னத நிலைக்கு உயர்த்தி விட்டுள்ளது. இதுவே இலங்கைகையைப் பொறுத்தவரை மிகவும் வேண்டப்படும் ஒரு சிந்தனையும் இப்பொழுது மிகவும் பரவலாகப்பேசப்பட்டு வருவதுமாகும்.


ராஜீவ் காந்தி

தமிழர்கள் என்ற வகையிலும், இலங்கைத்தமிழர்கள் என்ற வகையிலும் மனதை அரித்துக்கொண்டிருக்கும் இன்னுமொரு விவகாரம் உள்ளது. ராஜீவ் காந்தி கொலை விவகாரத்தில் புலிகள் இயக்கத்தின் மீதும் அதன் தலைவர்கள் பிரபாகரன், பொட்டு அம்மான் ஆகியோர் மீதும் இந்திய அரசாங்கத்திற்கு பலத்த சந்தேகம் எழுந்தது. அதன் பேரில் புலிகள் இயக்கம் இந்தியாவில் தடை செய்யப்பட்டது. அந்தத் தடை இரண்டு ஆண்டுகளுக்கொரு தடவை புதுப்பித்துக் கொள்ளப்பட்டும் வருகின்றது. இதனை வைத்துக்கொண்டு பல அரசியல் முரண்பாடுகளும் தோற்றுவிக்கப்பட்டு தத்தமது கட்சி நலன்களும், முன்னெடுக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. இனக்குரோதங்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இனப்பிரச்சினைக்கான சமாதானத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதிலும் முட்டுக்கட்டைகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் பழைய பாணியில் பிரபாகரன் நாடு கடத்தப்படுவது பற்றிய கதைகளைப் பரப்பி புளகாங்கிதமடைந்து வந்தார்.

ஜே.ஆர். ஜெயவர்த்தன புலிகளுக்கும் இந்திய அரசுக்குமிடையே வளர்த்து விட்ட குரோத உணர்வை பயன்படுத்தி புலிகளை அழிப்பதுடன் இன்றைய சமாதான முயற்சிகளையும் முடக்கி விடலாம் என்று இன்றும் இலங்கை சார்பில் பலவித முயற்சிகள் உள்ளன. மறுபுறம் சமாதான முயற்சிகள் ஆரம்பித்த கட்டங்களில் அதற்கு அனுசரணையாக சில மனிதாபிமான உதவிகளையாவது செய்யும்படி புலிகள் இந்தியாவிடம் வினயமாக கோரியிருந்தனர். இந்தியா தனது குரோத நிலைப்பாட்டில் நின்று கொண்டது. ஆனால் இன்று இந்தியாவின் விரிந்த உள்ளம் தன்னை வெளிக் காட்டியிருப்பது தெரிகின்றது.


வே. பிரபாகரன்

சமாதான நடவடிக்கைகளை குழப்பும் விதத்தில் சிறுபிள்ளைத்தனமாக இந்தியா நடந்து கொள்ளாது என்ற தீர்மானம் புது டில்லியிலிருந்து வெளியிடப்பட்டிருக்கின்றது. பிரபாகரனை நாடு கடத்தும்படி கோரப்போவதில்லை என்று அது அறிவித்திருக்கின்றது. அதாவது, இந்தியாவின் புதிய அரசியல் போக்கில் விருப்பு, வெறுப்புக்களுக்கும் சந்தேகங்களுக்கும் பழைய பகைமையுணர்வுகளுக்கும் இடமளிக்காத புதிய பார்வை தெரிகின்றது. இது புலிகள் இயக்கம் மீதான தடையை தளர்த்துவதற்கும் அல்லது நீக்குவதற்கும் அதன் வழியே சமாதான செயற்திட்டங்களின் அனுசரணையாளராக பங்கேற்பதற்கும் இந்தியாவிற்கு உரிமையளிக்கக் கூடிய ஒரு போக்குமாகும். இதனையே சமாதான விரும்பிகள் யாவரும் எதிர்பார்க்கின்றனர். ஆய்வாளர்கள் எதிர்வு கூறுகின்றனர். இந்தியாவின் புதிய போக்கை அனுசரிக்காமல், அது பழைய போக்கில் புலிகளுடன் மோதக்கூடியது என்று கருதியபடி இந்தியாவை சமாதான பேச்சுக்களில் தலையிடுமாறு இரு கரம் கூப்பி வரவேற்கும் சிங்கள இனவாத சக்திகள் - கதிர்காமர் உட்பட உணர்ந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும். பழைய குரோதத்தை காவித்திரிய விரும்பாத புதிய வெள்ளைத் தலைமையிடம் இதனை எதிர்பார்ப்பதில் தவறில்லை. அது மட்டுமன்றி இலங்கையின் அரசியற் தலைமைகள் மேலும் அதிகமாக சோனியா அம்மையாரிடமிருந்து கற்கவும் முடியும். தமிழ் நாட்டின் பார்ப்பனருக்கெதிரான எழுச்சி எப்போதுமே உலகத்தமிழினத்திற்கு அனுகூலமானது.

- சர்வன்

*சமாதான நடவடிக்கைகளை குழப்பும் விதத்தில் சிறுபிள்ளைத்தனமாக இந்தியா நடந்து கொள்ளாது என்ற தீர்மானம் புது டில்லியிலிருந்து வெளியிடப்பட்டிருக்கின்றது.*


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகையே உலுக்கும் அபுகிறைப் சிறை சித்திரவதைகள்; இவை உண்மையில் தகவல்களா ! இல்லை தாக்குதல்களா?

அபுகிறைப் சித்திரவதைகள் பற்றியும் அதனை அமெரிக்க ஜனாதிபதி கேள்விப்பட்டு அதிர்ந்தே போனார் என்னும் செய்திகளையும் உலக ஊடகங்கள் தாராளமாகவே விமர்சித்து எழுதிவருகின்றன. அமெரிக்கா தனது சிறைகளில் சிறைக்கைதிகளை வழமையில் எவ்விதம் நடத்தி வருகின்றது என்பதன் பின்னணியில் அபுகிறைப் சிறையின் சித்திரவதைகளை பார்ப்பது மேலும் தெளிவு பெற வைப்பதாகும்.

இப்பொழுது இரண்டு மில்லியன் அமெரிக்கர்கள் அமெரிக்க சிறைகளில் இருக்கின்றார்கள். ஐந்து மில்லியன் பேர்கள் அமெரிக்காவின் குற்றவியல் துறையினரின் கண்காணிப்பில் விடப்பட்டுள்ளனர். சிறைகளில் இருப்பவர்களில் அதிகமானவர்கள் ஆபிரிக்க அமெரிக்கர்களும் பெண்களுமாவர். சிறையிலிருப்பவர்களில் அரைவாசிப்பேராவது வறுமைக்கோட்டில் வாழும் குடும்பங்களை சேர்ந்தவராவார். தொழில் வாய்ப்பின்றி போதைப்பொருள் குற்றங்களுடன் தம்மை ஈடுபடுத்தி வந்தவராவார். அதாவது வன்முறைகளில் ஈடுபடாத குற்றங்களுக்காக சிறையில் தள்ளப்பட்டிருப்பவர்கள் அமெரிக்க சிறைகளில் நடைபெறும் சித்திரவதைகள் பற்றி மனிதவுரிமை நிறுவனங்கள் பல வெளிப்படுத்தல்களைச் செய்துள்ளன. அமெரிக்க சிறைகளில் வைத்து சிறைக்கைதியொருவர் சப்பாத்துக் கால்களால் விலா எலும்பகள் முறியுமட்டும் உதைக்கப்பட்டு சாகடிக்கப்பட்டதாவும், கைதிகளை தமக்குள் சண்டையிலீடுபடும்படி தூண்டிவிட்ட சம்பவங்கள் நடந்தன என்றும், மூர்க்கத்தனம் கொண்ட சிறைக்கைதியை தூண்டிவிட்டு வேறு ஒரு பெண் கைதி மீது பாலியல் வன்முறை செய்யும்படி பணித்தனரென்றும் , கைவிலங்குகளிடப்பட்ட இளைய கைதிகளை நிர்வாணமாகப்படுக்க வைத்து மிளகுத் தூளைத் தூவிய பின்னர் 23 மணித்தியாலங்களுக்கு கிடக்க வைத்தனரென்றும் மனிதவுரிமை நிறுவனங்கள் அம்பலப்படுத்தியிருந்தன. ஒரு சிறைக்கைதி தனது விதைகளின் தோலிலும், நாக்கிலும் குறட்டினால் கிள்ளியதாக முறைப்பாடு செய்திருந்ததாகவும் பல சிறைக்கைதிகளின் தலைகளை சுவர்களுடன் மீண்டும் மீண்டும் மோதியதாகவும் மனிதவுரிமை அமைப்புக்கள் தெரிவித்தன.

இத்தகைய பின்னணியில் தான் அபுகிறைப் சிறைச்சாலை சித்திரவதைகள் பற்றி நோக்குதல் பொருத்தமானது. அமெரிக்காவில் சித்திரவதைகளே நடைபெறுவதில்லை. அமெரிக்காவைப்பற்றி அறியாதவர்களே இவ்வகை குற்றச்சாட்டுக்களை சுமத்துகின்றனர் என்ற ஜோர்ஜ் புஷ்ஷின் கூற்றைக் கூட இவற்றின் பின்னணியிலேயே பார்த்தல் வேண்டும்.

ஈராக்கின் அபுகிறைப் சிறைச்சாலை கைதிகள் மீது அமெரிக்க படையினர் மட்டுமீறிய துன்புறுத்தல்களையும், பாலியல் துஷ்பிரயோகங்களையும் புரிந்த விடயம் படங்களுடன் உலகை வலம் வந்து முடிந்த பின்னர் இவ்விவகாரத்தை கேள்வியுற்று தான் அதிர்ச்சியடைந்ததாக ஜனாதிபதி புஷ் கூறினார். உண்மையில் இப்பாலியல் துன்புறுத்தல் தொடர்பாக கடந்த நவம்பரிலேயே ஈராக்கிலுள்ள அமெரிக்க நிர்வாக அதிகாரி போல் பிறிமருக்கு முன்னாள் அமைச்சரொருவரால் காத்திரமாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இதன் வழியே விடயம் அமெரிக்க உயர்பீடத்திற்கு சென்றடைந்திருக்க வேண்டும். ஜனாதிபதி புஷ்ஷும் இதனை அறிந்தேயிருக்க முடியும். ஜனாதிபதி அறியவில்லையென்றால் அதுவே சித்திரவதை சம்பவங்களை விடவும் முக்கியமான செய்தியாக இருக்க முடியும்.

எவ்வாறாயினும் இவற்றை அமெரிக்க நிர்வாகம் தவிர்க்க முடியாத நிலையில் இறுதியில் ஏற்றுக்கொண்டது. பகிரங்கமாக அறியப்பட்ட இந்த விடயம் தொடர்பில் அமரிக்க நிர்வாகம் பொருத்தமான நடவடிக்கையெதனையும் எடுக்க தவறியிருந்தது எதற்காக என்னும் கேள்வி பலமாக எழுந்தது.

அமெரிக்காவில் சிறைக்கைதிகள் சித்திரவதை செய்யப்படுவது ஒரு சாதாரண விடயமாக இருப்பதனால் இதனை எவரும் கருத முடியும்.

உண்மையில், அபுகிறைப் சிறைக்கைதிகள் மீது அடி, உதை போன்றவற்றிற்கு மேலதிகமாக நீண்ட நேரத்திற்கு கண் கூசச்செய்யும் அதி வெளிச்சத்தில் இருக்கச்செய்தல், மலவாசல் வழியாக தடியை உள் நுழைத்தல், பொஸ்பரஸ் திரவத்தை கைதிகளின் மேல் தெளித்தல் ம்ற்றும் பல வகை சித்திரவதைகள் நடைபெற்றுள்ளன.

சித்திரவதைக்குட்படுபவர்கள் தேடுதல் வேட்டைகளின்போதும், சோதனைச் சாவடிகளிலும் வைத்து கைதானவர்களே யன்றி வன்செயல்களில் ஈடுபட்டவர்களோ , ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டவர்களோ அல்லர். சர்வதேசச் சட்டங்களின் படியான உரிமைகள் இவர்களுக்கு இல்லை. வியட்நாம் யுத்த காலத்தில் அமரிக்கப்படையினரிடம் வியட்நாமியர்கள் ஆயிரக்கணக்கில் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டிருந்தனர் என்பதும் இப்போதும் ஆப்கானிலும் கியூபாவின் குவான்டனமோவிலும் அமெரிக்கப்படைகளின் கைகளில் ஏராளமான கைதிகள் கைதிகளுக்கான உரிமைகள் இன்றி உள்ளனர் என்பதும் கருத்தில் கொள்ளப் படுதல் வேண்டும்.









சிறைகளுக்குள் சித்திரவதைகள் நடைபெறும் அதேவேளை ஈராக்கில் ஒரு புறம் ஆட்சியை ஈராக்கியர்களிடம் ஒப்படைக்கும் சம்பிரதாயங்களும் மறுபுறம் தற்கொலைத் தாக்குதல்களின் அதிகரிப்பும் காணக்கூடியதாக உள்ளது.

பாக்தாத்தில் ஜுன் மாதத்தில் 20 ஆம் திகதி வரையில் மட்டும் நடைபெற்ற ஆறு தற்கொலைத்தாக்குதல்களில் 85 பேர்கள் வரை மரணமாகியுள்ளனர்.

புலனாய்வு அறிக்கைகளும் அவற்றினடிப்படையில் எழுந்த ஊகங்களும் ஈராக் மீதான படையெடுப்பும் தவறு என்று பரவலாகவும் தீவிரத்துடனும் சுட்டிக்காட்டப்படும் அதே வேளை அல்குவைதா அமைப்பின் எச்சரிக்கைகளும் அதிகரித்து வருகின்றன. ஈராக் மீது படையெடுத்தமை பாரிய வரலாற்றுக்கொடுமையும் குற்றமுமென்ற வகையில் அதிலிருந்து எழுந்தவையே இந்த சித்திரவதையுமாகும்.

அபுகிறைப் சித்திரவதைகள் பற்றிய நீதிமன்ற விசாரணைகளைத்தடுக்கும் அமெரிக்காவின் பிரயத்தனங்களுக்கு ஐ.நா. செயலாளர் கொபி அனான் தனது எதிர்ப்பை வெளிப்படையாகத் தெரிவித்திருக்கின்றார். புலனாய்வு அறிக்கைகளை ஆதாரம் காட்டி ஒரு நாட்டின் மீது படையெடுப்பைக்கூட செய்யலாம் என்று அமெரிக்கா நம்புகின்றது. ஆனால் நீதிமன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள பிரச்சினைக்கு அமெரிக்காவால் என்ன செய்ய முடியும்?

-சர்வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பலாலி விமான தளம்' தமிழீழ நெஞ்சில் ஓர் முள்

3

'பலாலி' என்னும் சொல் என்ன மொழிச் சொல்லாயினும், என்ன அர்த்தத்தைக் கொண்டிருப்பதாயினும், கருத்தே இல்லாததாயினும் கூட இலங்கைத் தமிழர்களை, குறிப்பாக வடபகுதித் தமிழர்களை பொறுத்தவரை அதற்கு ஒரு அர்த்தம் இருக்கின்றது. அதாவது தமிழர்களின் பொருளாதார வலுக்கோட்டையாக தொன்று தொட்டு இருந்து வந்த இப்பகுதி இன்று தமிழர்களை நிரந்தரமாக ஆக்கிரமித்து நிற்கும் சிங்கள அரசுகளின் வலுக்கோட்டையாக கர்ச்சித்து நிற்கின்றது. வடபகுதியின் பிரதான படைத்தளமாக - வான்படைத்தளமாக அண்மைக் காலத்தில் பயன்பட்டு பல்லாயிரம் பேர்களின் உயிர்களைப்பலி கொண்டு ஏப்பம் விட்டு நிற்கின்றது. அவ்வளவு தான் அல்ல. பொருளாதார வளங்களின் அழிவுக்குக் காரணமாகவும், விவசாயப்பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டு நிற்பதும், இதனால் தேசிய பொருளதார வளர்ச்சிக்கும் உறுதிப்பாட்டிற்கும் தொடர்ந்தும் முட்டுக்கட்டையாக உள்ளதுமாகும்.

இன்று நரகத்து முள்ளாக - புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரும் தீர்க்கப்பட முடியாத பிரச்சினையாக உருவெடுத்து நிற்கும் உயர் பாதுகாப்பு வலயமும் பலாலி விஸ்தரிப்பின் அம்சமே!




## மிஞ்சிய உணவும் வெற்றுப்பேணிகளும்

படையினரினதும் ஊழியர்களினதும் உணவின் எச்சசொச்சங்கள் குவிந்தன. இவை பன்றிகளுக்கு உணவாகின. பன்றிகள் பெருகின. தோலகட்டி ஆசிரமத்துக்கும் பன்றிகள் வழங்கப்பட்டன. உணவின் கழிவுகளும் மீதிகளும் அங்கு அனுப்பப்பட்டன. படையினரது பாவித்த வெற்றுத் தகரப்பேணிகள் சுதேசிகளால் சேகரிக்கப்பட்டன. அவை உருமாறின; விளக்காக, நீரருந்து பாத்திரமாக மாறி விற்பனைக்கு வந்தன. இரண்டு ரூபாவுக்கு விற்கப்பட்டன.

## கூலிப்பிழைப்பு

சுதேசிகளது சிறுபிள்ளைகள் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். 'றூம் பையன்' (Room Boys)களாக குறைந்தவேலையும் நிறைந்த சம்பளமும் வழங்கப்பட்டன. இக்கவர்ச்சியினால் பல பிள்ளைகள் வேலைக்குச் சென்றனர். அவர்களது கல்வி இடைநிறுத்தப்பட்டது. தொடர்ந்தும் அவர்கள் 'கூலி'த்தொழிலாளர்களாக வர இது வழிவகுத்தது.

## கலை நிகழ்ச்சிகள்

உள்ளூர் சுதேசிகளுடன் இணைந்து கொச்சியைச் சேர்ந்த இந்தியர்கள் மேடை நாடகங்களை நடத்தினர். கொட்டகைக் கூத்துக்களிலும் பங்கேற்றனர். 'மக்கில் பாகவதர்' அவர்களுள் சிறந்த நடிகராக விளங்கினார். பலாலி ஆசிரியர் கலாசாலையில் தற்போதைய விரிவுரை மண்டபம் அவர்களது கலை மண்டபமாக விளங்கியது. ஆங்கிலேயரும் அவற்றைப் பார்த்து ரசித்தனர்.

## அலரி அறிமுகம்

விமான நிலையத்தை அலங்கரிக்க பூங்கன்றுகள் கொண்டு வரப்பட்டன. விலங்கினங்கள் உண்ண முடியாத 'அலரி' வகை இனம் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது.

## சமய குருமாருக்கு றிக்ஷோ

சமயப்பிரார்த்தனைக்காக வண.பிதா. ஜீ.ரீ.பாலசுந்தரம், பிதா ரி.எம்.எவ்.லோஸ் எப்பேபாம் ஒழுங்கு செய்யப்பட்டனர். கத்தோலிக்க தேவாலயம் ஒன்றும் அமைக்கப்பட்டது. அங்கு வந்து சென்று பூஜை செய்ய குருமாருக்கு 'றிக்ஷோ' வண்டி சொந்தமாக வாங்கி வழங்கப்பட்டது. வண்டி இழுப்பவருக்கான கூலியும் அவர்களால் வழங்கப்பட்டது.

## போர் நின்றதும்

1945 மே 5 ஆம் திகதி யுத்தம் ஓய்ந்து சமாதானம் வரும் அறிகுறி தெரிந்தது. றோயல் விமானப்படையினர் பலாலி விமானத்தளத்தையும் காங்கேசன்துறை வைத்தியசாலையையும் காலி செய்தனர். மாலைதீவு, சிங்கப்பூர் போன்ற தேசங்களுக்கு அவர்களது தளங்கள் மாற்றப்பட்டன. இக்காலத்தில் திருகோணமலை துறைமுகத்தில் கடற்படையும் கட்டுநாயக்காவில் விமானப்படையும் பலப்படுத்தப்பட்டன.

## ரேடார் தொலைத்தொடர்பு

பலாலி விமானத்தளத்துக்கு வரும் எதிரிப்படையின் விமானத்தை அறிய 'ரேடார்' கருவி ஒட்டலகப்புலத்துக் கருகில் உள்ள சந்தையின் முன்பு அமைக்கப்பட்டது. இதற்காக அமைக்கப்பட்ட கட்டடம் இன்றும் உள்ளது. வளலாயிலும் வசாவிளான் நொங்கசிட்டியிலும் தொலைத்தொடர்பு நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. விமானத்தளத்தில் மூன்று தரம் கொண்ட விடுதிகள் அமைக்கப்பட்டன. அதிகாரிகளின் விடுதி (Officers Mess) முதலாம் தரமானது; சார்ஜன் விடுதி (Sergeant Mess) இரண்டாம் தரம்; மூன்றாம் தரமானது விமானப்படையினர் விடுதி ( Airmen Mess)

## ஆசிரிய கலாசாலை

இவ்வகை 702 கட்டடங்களே பின்பு அப்பகுதிகளில் பிரபல்யம் வாய்ந்த பலாலி ஆசிரியர் கலாசாலை உருவாக வழிவகுத்தது. யாழ்ப்பாணத்திற்கு கொடுமை விளைவிக்கும் 'முள்' ஆன இராணுவமுகாம் அமைய இடம் தந்தன. விமான நிலையத்திற்கு வித்திட்டன.

## சுதந்திரத்தின் பின்

1947 ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் பெற்றபோது இலங்கையில் இருந்தும் பிரித்தானியர் விலக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

1948 ஆம் ஆண்டு மாசி 4 ஆம் திகதி இலங்கை சுதேசிகளிடம் ஒப்படைக்கப்பட்டாலும் பிரித்தானிய எச்சசொச்சங்கள் ஒட்டிக் கொண்டிருந்தன. இராணுவப் படைப் பிரிவுகள் விமானப்படைப் பிரிவுகள் கடற்படைப் பிரிவுகள் முற்றாக அகன்று விடவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்பு ஜூலையாகிய சிவப்பு ஜூலை....!

தனி ஈழம் கேட்பதற்கு தமிழர்களைத் தூண்டும் அளவுக்கு வரலாற்றில் நடந்த அட்டூழியங்கள் எத்தனையாயினும், எத்தகையதாயிருப்பினும் அவற்றுள் 1980 ஜுன் 30 இல் யாழ்ப்பாண பொது நூலகம் எரிக்கப்பட்டமை மற்றும் 1983 ஜுலை 23 ஆம் திகதி இனக்கலவரம் வெடித்து ஆயிரக்கணக்கில் தமிழர்களும் அவர்களின் சொத்துக்களும் அழிந்தமை ஆகிய இரு விடயங்களும் தமிழர்களின் மனங்களில் ஆறாத வடுவை பதித்துள்ளவை என்பதில் சந்தேகமில்லை. அது மட்டுமின்றி இந்த இரு விடயங்களிலும் இன்றைய புதிய அரசாங்கத்தின் தலைமையும் தமிழர்கள் சார்பாக செயற்பட விரும்புவதிலும் சந்தேகமில்லை. கறுப்பு ஜுலையில் பாதிக்கப்பட்டவர்கள் 940 பேருக்கு 720 மில்லியன் ரூபா நட்ட ஈடு வழங்குவதாக புதிய அரசாங்கம் அறிவித்திருப்பதும், வருத்தத்தை தெரிவித்து தமிழர்களின் மனங்களை ஆற்றுப்படுத்தும் விதத்தில் தேசிய நல்லிணக்க தினம் ஒன்று பிரகடனப்படுத்தப்படவுள்ளதாக தெரிவித்திருப்பதும் பொருத்தமானதே.

தமிழர்களின் சாத்வீக சிந்தனைப் போக்கில் காத்திரமான மாற்றத்தை ஏற்படுத்தியது 1983 ஜுலை கலவரமேயாகும். இனக்கலவரங்களுக்குள் மிகப்பெரியதான இதனால் மகாத்மா காந்தியின் சாத்வீகக் கொள்கைகளை பின்பற்றிய தலைவர்கள் சற்றே ஒதுங்கிப்போக, சுபாஸ் சந்திரபோஸ் பாணி தலைவர்கள் தலைநிமிர்த்தினர். இவ்வாறாக வரலாறு தோற்றுவித்த நிகழ்வுகளில் மைல்கல்லாகவும் திருப்புமுனையாகவும் அமைந்தது 83 ஆம் ஆண்டின் ஆடிக்கலவரமாகும்.

இன்று கறுப்பு ஜுலை எனப்படும் இந்தக்கலவரம் அன்று சிவப்பு ஜுலையாகத் தொடங்கியது. வெறும் கையுடன் சாத்வீகப் போராட்டங்களை நடத்திய மக்களுக்கு எதிராக துப்பாக்கிகள் நீட்டப்பட்டன.

"துப்பாக்கியோடு நிற்கும் எதிரியின் முன்னிலையில் சப்பாணிப் போராட்டமா? கவச வாசகனத்துடன் படையினர் ஆக்கிரமிக்கும்போது கயிலாச வாகனத்துடன் வீதி வலமா? என்ற விழிப்புணர்வுடன் சிறியதொரு ஆயுத இயக்கமாக அப்போது வெளிப்பட்ட விடுதலைப்புலிகள், முதலாவது தாக்குதலொன்றை இராணுவத்தின் மீது வெற்றிகரமாக நடத்தினர்.

இக்கண்ணி வெடிச்சம்பவம் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் தபால் பெட்டிச் சந்தியில் இரவு 11.00 மணியளவில் நடைபெற்றது. அதில் ஜீப் வண்டியில் சென்றவர்களில் ஒருவர் தவிர ஏனைய 13 இராணுவத்தினரும் கொலையுண்டனர்.

செய்தி அகில இலங்கைக்கும் பரவியது. இராணுவம் சவாலுக்கு இழுக்கப்பட்டு விட்டது என்ற செய்தி அதிர்வலைகளைத் தோற்றுவித்தது. நாட்டின் இறைமையை இறுதி வரை போராடிக் காக்கும் சிங்கள இராணுவம், தமிழர்களின் கையினால் அழிக்கப்பட்ட நிகழ்வு கொழும்பின் ஆட்சி அதிகாரத்தை உலுப்பியது.

தன் மானமே சவாலுக்குள்ளாகியிருப்பதாக ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் அவரது அமைச்சரவையிலிருந்த இனவாதிகள் உட்பட பலரும் உணர்ந்தனர்.

பரந்த மக்களில் ஒரு பகுதியினரும் இவ்வாறே உணர்ந்தனர். விரைந்து விரைந்து இரவிரவாக திட்டங்கள் தீட்டப்பட்டு களத்தில் காடையர்கள் இறக்கப்பட்டனர்.

அன்று ஜுலை 23 ஆம் திகதி வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் தமிழர்கள் அழிப்புக்கொடூரங்கள் நிகழ்ந்தன. சொத்துக்கள் அழிக்கப்பட்டன; தீயிட்டுக்கொழுத்தப்பட்டன.

3,000 வரையான தமிழர்கள் வீதிகளிலும், விடுகளிலும் வைத்து கூரிய ஆயுதங்களால் படுகொலை செய்யப்பட்டனர். அமைச்சரவைப் பொறுப்புள்ள ஒருவரின் தலைமையில் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.

இடையிடையே 'த்ரில்' காட்சிகள் தமிழ்ப்பகுதியிலேயே - மானிப்பாயில் விடியற்காலை தனியார் கல்வி நிறுவனத்திற்கு வகுப்புக்களுக்குச் சென்ற மாணவர்களும் கோவில்களுக்குச் சென்ற பக்தர்களும் வழிமறிக்கப்பட்டு 41 பேர் வரை இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

ஜுலை 25 ஆம் திகதி வெலிக்கடைச்சிறைச்சாலையில், தமிழ் அரசியற்கைதிகள் படுகொலை செய்யப்பட்டனர். அன்று 35 பேர்களும் அதனைத்தொடர்ந்து 27 ஆம் திகதி மேலும் 18 பேர்களுமாக மொத்தம் 53 பேர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இதனை அதே சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிங்களக் கைதிகளே செய்ததாக அறிவிக்கப்பட்டது. பலியாகியவர்களில் குட்டிமணி, தங்கத்துரை போன்ற இளைஞர் தலைவர்களும் அடங்கியிருந்தனர்.



கலவரங்கள் ஆரம்பித்து மூன்று நாட்கள் வரை ஜனாதிபதி ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பிக்கவில்லை. பொலிஸாரோ, படையினரோ கலவரங்களை அடக்க முயற்சிக்கவில்லை. ஆனால், தூண்டி விட்டார்கள். சில இடங்களில் ஒத்தாசை புரிந்தார்கள் என்றெல்லாம் தகவல்கள் வந்தன. அரச சார்பற்ற நிறுவனங்களின் முயற்சிகளினால் பாடசாலைகள் அகதி முகாம்களாக மாற்றப்பட்டு தமிழர்கள் பராமரிக்கப்பட்டனர்.

நகைச்சுவையாகக் கருதப்படக் கூடிய சம்பவம் ஒன்றும் இடம்பெற்றது. கல வரங்கள் உச்சக்கட்டத்தை அடைந்திருந்த ஒருநாள் திடீரென ஒரு வதந்தி பரப்பப்பட்டது. கொழும்பு கோட்டைப்பகுதியிலுள்ள தமிழருக்குச் சொந்தமான நிறுவனமொன்றிற்கு புலிகள் வந்துவிட்டார்கள் என்பதே அது. கலவரம் திடீரென ஓய்ந்து விட்டது மட்டுமன்றி தமிழர்களுக்குத் திடீரென பாதுகாப்பும் பல இடங்களில் கிடைத்தது. பெரும்பான்மையினத்தவர்கள் ஒரு தமிழரையாவது தமது வீட்டில் வைத்துப்பாதுகாப்பதற்கு அவசரப்பட்டார்கள். அவர் மூலமாக தாம் புலிகளிடமிருந்து தப்பிக்கொள்ளலாம் என்ற நினைப்பில். ஜுலை கலவரத்தைத் தொடர்ந்த பின் நிகழ்வுகளே இன்றைய தமிழர்களின் பாதுகாப்புக்கு அடித்தளமிட்டன.

-நீரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார வலுவில் ஐரோப்பிய ஒன்றியம்



தனி மனித சுதந்திர உரிமைகள் அடக்கப்படுகின்றபோது அங்கே பிரிவினைகள் தோற்றப்படுவது இயல்பு என்பதை வரலாறுகள் நிரூபித்திருக்கின்றன. மாறாக மனித உரிமைகள் இன மத பேதமின்றி மதிக்கப்படுகின்றபோது மனிதர்களுக்கிடையே ஒருமைப்பாடுகள் தோற்றுவிக்கப்படுவதையும் உலகவரலாறுகள் எடுத்துக் காட்டியுள்ளன.

இன்று உலகில் பொருளாதார விழுக்காடு மற்றும் அரசியல் ஆக்கிரமிப்பு போன்ற காரணங்களினால் சமுதாயங்களுக்கிடையில், நாடுகளுக்கிடையில் பேதங்கள் உருவாகி பிரிவினைகள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகின்றது. இது தவிர வளர்ச்சி அடையும் நாடுகளில் இன, மத, மொழி வெறிகளும் மக்களிடையே அந்நியத்தன்மையும் ஏற்படுவதற்கு தகைமையற்ற அரசியல் யாப்புகளும் தகுதியற்ற அரசியல்வாதிகளும் ஆளுமைகளை மேற்கொள்வதனால் மக்கள் வாழ்வில் சுமுக நிலையை பேண வாய்ப்புக்கள் கிடைப்பதில்லை.

இன்றைய உலக நாகரிக நடப்பில் மனிதன் இவ் அடக்கு முறைகளுக்கு முகம்கொடுக்க வேண்டிய அவசியங்கள் அற்றுப்போயுள்ளது. மனித உரிமைகள் (Human rights) உயர்வாகப் பேணப்படும் இடங்களாக இன்று மேற்குலக நாடுகள் முன்னணியில் நிற்கின்றன. தனிமனித சுதந்திரங்கள் மதிக்கப்படும் நாடுகளில் மக்கள்ஒருமைப்பாடுகள் மேலோங்கியே இருக்கும்.

இதன் அடிப்படையில் தான் ஐரோப்பிய ஒன்றியம் [(Europion Union (EU)] ஒருங்கமைக்கப்பட்டுள்ளது. மேற்குஐரோப்பாவில் வலுமிக்க பொருளாதாரபலத்தை கொண்ட நாடுகள் கூட்டுச் சேர்ந்து உருவாக்கிய ஐரோப்பிய ஒன்றியம் தன் பலத்தை மேம்படுத்துவதற்காக கிழக்கு ஐரோப்பிய நாடுகளையும் இலகுவாக இணைத்து வருகிறது. ஐரோப்பாவில் மட்டுமல்ல உலக அரங்கில் ஜேர்மன் நாடு கடந்த 60 வருடகாலத்தில் ஒரு விசித்திரமான போக்குக் கொண்ட நாடாக இருந்திருக்கிறது. இரண்டாம் உலகப்போருக்கு (1939-1945) முக்கிய தாதாவாக இருந்த சர்வாதிகாரியும் நாத்திகக் கொள்கையும் கொண்ட அடல் ஹிட்லர் தன் கொள்கைப்படி ஐரோப்பிய நாடுகள் அனைத்தையும் தன் காலடியில் கொண்டுவர நினைத்ததால், பல கோடி மக்களின் உயிர்களை கொல்லக்காரணமாக இருந்தான். உலகம் முழுவதுமாக 56,125,262 மக்கள் கொல்லப்பட்டார்கள்.

இரண்டாம் உலக மகாயுத்தம் முடிவுக்கு வந்த காலத்தில் இருந்து ஜேர்மனிய நாட்டுக்கு இராணுவ யுத்திகள் சம்பந்தமான காரியங்களை செய்வதற்கு ஏனைய வல்லரசுகள் ஐக்கியநாடுகள் சபை ஊடாக தடைவிதித்தன. இக்கால கட்டத்தில் வேறு வழியில்லாத ஜேர்மனி தனது பொருளாதார பலத்தை முன்னெடுத்து அதில் வெற்றி கண்டது. இதே ஜேர்மனிதான் இன்று ஐரோப்பிய ஒன்றியம் தலை ஓங்குவதற்கு முக்கிய நாடாக இருந்து வருகிறது.

எவை எப்படி இருப்பினும் அடக்கு முறை மற்றும் இராணுவ கட்டவிழ்ப்புகள், இனத்துவேசப் பொறிகள் அனைத்தையும் விட பொருளாதார பலத்தினால் பலவற்றைச் சாதிக்கலாம் என்பதற்கு இன்று ஜேர்மனிய நாடு எமக்கு உதாரணமாகவுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியமானது 1957 ஆம் ஆண்டு ஐரோப்பிய பொருளாதார சமூகம் [(European Economic Community (EEC)] என்ற பெயருடன், றோம் சமாதான உடன்படிக்கையின் போது ஆரம்பிக்கப்பட்டது. ஐரோப்பாவில் ஒரு பொதுவான பொருளாதார, அரசியல் ஒருமைப்பாட்டை உருவாக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட இவ்வமைப்பில் ஆரம்ப காலத்தில் பெல்ஜியம், பிரான்ஸ், ஜேர்மனியக்குடியரசு, இத்தாலி, லக்ஸ்ஸம்பேக், நெதர்லாந்து ஆகிய 6 நாடுகள் கைச்சாத்திட்டு தொடங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து (ஐக்கிய இராச்சியம், அயர்லாந்து, டென்மார்க் 1973இல்), (கிரீஸ்1981இல்), (ஸ்பெயின், போர்த்துக்கல் 1986இல்) (ஒஸ்ரியா, பின்லாந்து, சுவீடன் 1995இல்) ஆகிய நாடுகளும் இணைந்து 1995ஆம் ஆண்டு புதிய பரிமாணமாக: ஐரோப்பியக் குடியுரிமை, அதிகூடிய சுதந்திரம், பாதுகாப்பு, புதிய சட்டநீதி, பொருளாதார, சமூக மேம்பாடு என்ற கொள்கைகளுடன் உருவெடுத்த EU உலகம் முழுவது தன் நலன்களை பங்கிட வழிவகை செய்துள்ளது. தன்பால் நாடுகளுக்குமாக பொது நாணயமாக Euro தற்போது உலக அரங்கில் அதிகூடிய வலுப்பெற்ற நாணயமாக விளங்கி வருவதும் ஏனைய வல்லரசுகளை கதிகலங்கவே வைத்துள்ளது.

குறிப்பாக சர்வதேச நாணயம் எனக் கருதப்படும் அமெரிக்கடொலரின் இடத்தை Euro பிடித்து விடுமே என்ற ஐயப்பாடு இன்றைய மகா-வல்லரசான அமெரிக்காவுக்கு எழுந்துள்ள தடுக்க முடியாத பிரச்சினையாகவுள்ளது. மேலும் EUவுடன் மற்றைய கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சேராதிருக்க பல புதிய வர்த்தக ஒப்பந்தங்கள், திட்டங்களையும் தீட்டிய அமெரிக்காவுக்கு தோல்வியே கிடைத்துள்ளது.

பிரித்தானியா EU வில் இணைந்திருந்தாலும் Euro நாணயத்தை பொதுவாக்க இன்றும் தயங்கி வருகிறது. தற்போதைய காலகட்டத்தில் ஐரோப்பிய நாடுகளுக்கிடையில் பொருளாதார நகர்வுகளில் பிரித்தானியாவே முன்னணியில் திகழ்கிறது.

அத்துடன் ஆங்கில நாணயமான ஸ்ரேலிங் பவுணையும் அதில் அச்சிடப்பட்டிருக்கும் மகாராணியார் எலிசபத்தின் படத்தையும் நாணயத்தில் இருந்து இழக்க பிரித்தானிய மக்களுக்கு விருப்பமில்லை. மற்றும் அமெரிக்க வல்லரசின் அதி நேசநாடாக விளங்கும் பிரித்தானியாவுக்கு அந்நாட்டு உறவுகளில் பாதிப்புகள் வரலாம் என்கின்ற அச்சப்பாடும் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இம்மாத நடுப்பகுதியில் பிரித்தானியாவில் நடந்த தேர்தலில் ஐரோப்பிய ஒன்றியம் வேண்டாம் என்கின்ற அரசியல் கட்சிகள் அமோக வெற்றி பெற்றிருந்தமையும் எதிர் காலத்தில் பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து விலகுவதற்கான வழிகளே தென்படுகின்றன. நீண்டகாலப் போக்கில் பார்க்கும் போது பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து விலகுமானால் பல பாதகமான விளைவுகளையும் எதிர் நோக்க வேண்டியே வரும்.

மற்றும் மத்திய ஐரோப்பாவில் உயர் நிலையில் இருக்கும் சுவிட்சர்லாந்து, நோர்வே நாடுகள் EU இல் இணைவதற்கு மறுத்தே வருகின்றன. இதற்கு முக்கிய காரணமாக அந்நாடுகளின் பொருளாதார வலிமையும், மக்களின் பாரம்பரிய அபிலாசைகளுமே. 2004ம் ஆண்டின் கணிப்பின்படி நோர்வே உலகில் ஆள்விகித வருமானத்தில் இரண்டாமிடத்தில் உள்ளது. இந்நாட்டில் ஒரு நபரின் வாழ்க்கைத் தரம் 37,020 அமெரிக்க டொலர்கள் ஆகும். கடந்த காலங்களில் வாழ்க்கைத் தரத்தில் முதலாமிடத்தில் இருந்த சுவிட்சர்லாந்து தற்போது 5ஆம் இடத்தில் உள்ளது (34,920 அமெரிக்க டொலர்கள் ஆகும்). 2003 கணிப்பின்படி இலங்கையின் வழ்க்கைத்தரம் நபருக்கு 3,700 அமெரிக்க டொலர்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. மத்திய ஆபிரிக்காவில் அமைந்துள்ள வறியநாடான கொங்கோ, எதியோப்பியா போன்ற நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரம் 100 அமெரிக்க டொலர்கள் மட்டுமே.

இந்நிலையில் பல கிழக்கு ஐரோப்பிய, தென் ஐரோப்பிய நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்தில் சேர்வதற்கான விண்ணப்பங்களை தொடர்ந்தும் சமர்ப்பித்து வந்தபோதும் இந்நாடுகள் EU இல் இணைவதற்கான தகமையைப் பெற்றிருக்காமையினால் கடந்த 10 வருடங்களாக இந்நாடுகளை தங்களுடன் இணைப்பதில் ஆரம்ப EU நாடுகள் தயக்கம் காட்டியே வந்துள்ளன. EUவில் இணையும் நாடுகள் சில தராதரங்களைப் பெற்றிருத்தல் வேண்டும். பொருளாதார நிலையில் மேம்பட்டும், சமூக, அரசியல் நிலைகளில் சுமுகமான தரத்தையும் மற்றும் மனித உரிமைகளை மீறாமலும் இருக்க வேண்டும்.

இதற்கிணங்க பல வழி முறைகளை மாற்றி மேலும் 10 நாடுகள் EU இல் இவ்வருடம் ஏப்ரல் மாதம் இணைந்து EU வை மேலும் விஸ்தீரணம் அடைய வைத்துள்ளன. புதிய நாடுகளாக Cyprus, Czech Republic, Estonia, Hungary, Latvia,Lithuania, Malta, Poland, Slovakia, Slovenia ஆகியன இணைந்துள்ளன.

தற்போது 25 நாடுகளைக் கொண்ட EU, Euro நாணயத்தை மேலும் வலுப்பெற வைத்துள்ளது. இறுதியாகச் சேர்ந்த 10 நாடுகளின் பொருளாதாரவலுவானது முன்பு இணைந்த நாடுகளை விடக்குறைவாக இருந்தாலும் அனைத்து அங்கத்துவ நாடுகளையும் ஒருங்கிணைத்து தன்முழுமையான குறிக்கோளை அடைவதற்கு ஐரோப்பிய ஒன்றியத்திற்கு நாட்கள் எடுக்கும் என்பதும் கணிக்கப்பட வேண்டியதொன்றே. பொருளாதார நலன்களைப் பெற்று சுக வாழ்க்கைத் தரத்தைப் பெறுவதற்காக EU நாடுகளில் இணைந்து கொண்ட புதிய கிழக்கு-ஐரோப்பிய நாட்டு மக்கள் EU நாடுகளான மேற்கு-ஐரோப்பிய நாடுகளில் தங்கள் வாழ்க்கையை நகர்த்த விரும்புவதாகவும் இங்கிலாந்து நாளேடுகள் தகவல் வெளியிட்ட வண்ணம் உள்ளன. EU இன் சாசனப்படி மக்கள் எந்த அங்கத்துவ நாடுகளிலும் தங்கள் எதிர்காலத்தை நகர்த்த முடியும் என்ற சட்டம் முன்னணியில் இருக்கும் நாடுகளுக்கு பாதகமாகவே இருக்கும். EU இல் இருந்து பிரித்தானிய மக்கள் விலகிச் செல்ல விரும்புவதற்கு இப்படியான காரணிகளும் உள்ளது. பிரித்தானிய உலகில் பிரபல்யமான ஒரு நாடு EU வில் இணைவதினால் நீண்டகால நோக்கில் தனிப்பட்ட செல்வாக்கை இழக்கவும் வாய்ப்புகள் அதிகம் என்பதும் பிரித்தானிய மக்களின் எண்ணங்களாகும்.







ஏதிர்காலத்தில் வல்லரசுகள், அவர்களின் ஆயுதபலம் என்ற செல்வாக்குகள் குறைந்து பொருளாதார பலமும் அதன் யுத்திகளும் என்ற தலைப்பில் உலகு தலை எடுக்கும் என்பதில் ஐயமில்லை என்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் [(Europion Union (EU)] சைகை காட்டி நிற்கும்.

"அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என அன்று தமிழன் சும்மாவா சொன்னான்.

சுகீதன்- London


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டாரியல் 3 (FOLK LORE)

கடந்த வாரத்தொடர்ச்சி

## அனுபல்லவி

தேயாதொரு தேகம் தானோ
ஓயாக் கடல் தாகாம் நானோ
பூவா இது பூவையாமோ
பூமகளின் புத்திரியோ- தேயாதொரு தேகம் ஆனதோ

## சரணம்

பாடியாடிக் கண்டவளை
ஓடி நானும் கூட வேண்டும்
தேடியதாய் இப்போ
கோடி சுகம் காண வேண்டும்
அடி துடி! தொடி! படி!
முடி! நொடி!கொடி! நடி
அந்தோ இவள் என்ன வம்சமோ
சிந்து செய்து எந்தன் உள்ளம் வந்து போனாளே
இச்சோலை வந்து மாலை போட்டு மணந்திடாளோ
தேயாதொரு தேகமனதோ
கன்னல் மொழி கன்னிகையோ
பின்னல் சடை சின்னவளோ
அன்ன நடை சொன்ன இடை
பொன் மகளின் செல்வியாமோ
அளி ஒளி களி கிளி
துளி நெளி வளி விளி
கங்கை வெள்ளம் துள்ளிப்பாயுதே
மங்கை வந்து செங்கை காட்டி
தங்கச் சொல்லாளோ
இந்த நீரில் மூழ்கி தேரில் ஏறி
அணைத்திடாளோ-
............ தேயாதொரு தேகம் ஆனதோ

**ரூப காந்தன் வசனம்**

ஈழ தேசத்தில் கதிர்காமக்குன்றில் இருந்து பாயும் நீரோட்டத்தில் பாடிய இந்த இளம் பெண்ணொன்றைக் கண்டு இப்படி வர்ணிக்கின்றாய் என்றால் ஆறாம் பராக்கிரமபாகு அந்தப்புர சுந்தரிகளைக்கண்டால் எப்படி வர்ணிப்பாய்.

**நல்லூர்த்துணையான் வசனம்**

நீரோட்டத்தில் மாராடும் அந்தக் கன்னியைக்கண்டவுடன் என் மனமெல்லாம் அவளிடம் பதிந்து விட்டது.மாரன் கணைக் கெதிராக நான் போராட வேண்டியுள்ளது.

**காந்த ரூபன் வசனம்**

அமைச்சரே நாளை ஆறாம் பராக்கிரம பாகுவின் அவையில் நீர் முதலமைச்சனாக நியமிக்கப்படவிருக்கின்றீர். இந்த மாலை வேளையில் சோலையிலே ஆடிப்பாடிய - காலையிலே - பூக்கும் கமலப்பூப்போல் காணப்படும் இவள் ஈழ தேசத்தின் கோட்டை இராச்சியத்தின் வேந்தன் ஆறாம் பராக் கிரமபாகுவின் வாலக்குமரியாகத்தான் இருக்க வேண்டும்.

**நல்லூர்த்துணையான் வசனம்**

துள்ளிப்பாயும் வெள்ளை நீரோட்டத்தைப் பார்த்து பாடியவளை அள்ளி அணைக்க வேண்டும் என்ற ஆவல் எனக்கு ஏற்படுகின்றது. இவள் உண்மையாக ஈழதேசத்தின் கோட்டை இராச்சியத்தின் ஆறாம் பராக்கிரம பாகுவின் மகளாக இருந்தால் உண்மையாகவே இவளை நான் திருமணம் செய்வேன். இது குன்றில் இருக்கும் குமரன் மேல் ஆணை.

## அங்கம் -05

இடம்: கோட்டை இராச்சியத்தின் ஆறாம் பராக்கிரமபாகுவின் அரச மாளிகையின் ஒரு புறம்

பங்கு கொள்வோர்கள்- பிரதான சேனைத் தளபதி- சப்புமல் குமரையன் அல்லது செண்பகப்பெருமாள் ஓலை தாங்கிய ஏவலன்

நிலைமை: கோட்டை இராச்சியப் பேரரசன் ஆறாம் பராக்கிரமபாகுவின் பிரதான சேனாதிபதி சப்புமல்குமரையன் அல்லது செண்பகப்பெருமாள் அரச சபைக்கு வருதல். அப்போது ஆறாம் பராக்கிரமபாகுவின் ஓலை தாங்கி அங்கு வந்து ஓலை வாசகத்தை சப்புமல் குமரையனுக்கு கொடுத்தல் அதில் கோட்டை மன்னன் ஆறாம் பராக்கிரமபாகு "யாழ்ப்பாண அரசன் கனக சூரியசிங்கையாரியனுக்கு எதிர் காலத்தில் திறை கொடுப்பதில்லை" என வரையப்பட்டிருந்தது. திறை தரமுடியாது போர் என பிரகடனம் செய்யும் படியும் யாழ்ப்பாண இர்ச்சியத்தின் மீது படை எடுக்கும் படியும் அறிவுறுத்தல் கொடுக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க சப்புமல்குமரையன் திறை தரமுடியாது யாழ்ப்பாண இராச்சிய மன்னனுடன் போர் என ஓலை வாசகம் ஒன்றை எழுதி ஓலை தாங்கியாகிய ஏவலனிடம் யாழ்ப்பாண அரசன் கனகசூரியசிங்கையாரியனுக்கு கொடுத்து அனுப்புகின்றான்.



*சப்புமல் குமரையன் அல்லது செண்பகப்பெருமாள்*

## சபை விருத்தம்

கோட்டையதாம் இராச்சியத்தின் கொடியின் கீழே
கொத்தளங்கள் படையணிகள் கொண்ட வீரன்
நாட்டையுமே சீர் குலைக்கும் நாசகாரன்
நகரழிக்கும் கொள்கையிலே நடக்கும் சூரன்
ஆட்சியதை கைப்பற்ற ஆசை ஏறி
அமைச்சனையே ஆழியிலேயே அளித்த சூரன்

## ஆடல் தரு

பாரும் பாரும் இதை நல்லாய்- பெரும்
பதக்கமும் பெற்றோனாம் வல்லாய்- மண்ணில்
ஆரும் இவனையே வெல்லார்- திட்ட
ஆணையை தேனைக்குச் சொல்வான்
**
கரமது வாளது கொண்டான் - மேலில்
கவசமும் ஈட்டியும் கொண்டான் - தினம்
புரமதில் விருந்துகள் உண்பான் - வீர
புயத்துடன் எதிரிகள் வெண்டான்
**
வீரர்கள் சொல்வதைத் தட்டார்- ஆரும்
விரைவதாய் சண்டைக்கு முட்டார் - பொல்லா
போரதில் தர்மத்தை - விட்டான்
இவர் பொங்கினால் எதிரிகள் - பட்டார்
**
பகைவர்கள் தன்னையே பிடிப்பான் - விண்ணில்
பறந்திடும் அழகிய கொடியோன் போரில்
தொகையதாய் மக்களை மடிப்பான் - பாரில்
தோற்காத சிறப்புடை முடியான்

## தரு

தேரும் பேரும் கொண்டோன்- பொல்லா
போரும் யாரும் வெண்டோன்- பல
ஊரும் நீரும் கண்டு பாரும்
அசைந்திடவே
வாரும் என்றழைக்கும் வல்லோனும் நானே
**
யானை படை கொள் வீரன் - பெரும்
சேனை நடைகள் தீரன் புவிதனில்
தானை பலதுடனே கோனை ஆட்டி வைக்கும்
வானை அதிர வைக்கும் வாலிபன் பாரீர்
**
கோட்டை அரசன் தோன்றல் இந்த
நாட்டைக்காக்கும் ஆன்றோன்- எல்லா
கூட்டம் கூட்டி நாளும் கேட்டை விளக்க வைக்க
ஆட்சிதனைப் பிடிக்கும் அதிபனும் காணீர்

## அனு

ஆழக்கடலால் சூழ்ந்திருக்கும் ஈழ
தேச ஆறாம் பராக்கிரமபாகு தளபதியாக ஆளுவேன்

ஏவலன் வசனம்: கனம் தளபதியாரே ஈழதேசத்தின் கோட்டை இராச்சியத்தின் பேரரசன் ஆறாம் பராக்கிரமபாகு ஒரு நிருபம் தங்களுக்கு தந்துள்ளார். (சப்புமல்குமரையன் ஓலையை திறந்து வாசித்தல்)

**ஓலை வாசகம் அல்லது கடித வாசகம்**

கோட்டை இராசதானி
ஈழ தேசம்
போரிலே அஞ்சாத பொறுப்புள்ள
வீரனாம் பொறுமை கொள் தளபதியார்
தனக்குமே
பொருளுணர்ந்த உமக்குத்தான்
பொங்கியெழ நானுமே பொதுவாக
எழுதிக்கொள்வது
**
வேரிலே வருக்கையது வெகுவாகக்
காணுமே வெண்மலர்கொள் யாழ்ப்பாண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசனும் தான் வெகுகாலம்
திறையதைத்தான் வேண்டியே வருகின்றான்
வெட்கமான ஆட்சியாச்சே
**

நேரிலே நீயும் தான் நெடும்பயணம்
செய்வதற்கு
நேரமதே வந்துதான் விட்டதே
நெறிகெட்ட கனகசூரியாரியனின்
நிலத்தையே
நெருப்பாலே நாசம் செய்வீர்
**

தேரிலே பவனிவரும் தெய்வங்கள்
கோயில்களை
தெருவெல்லாம் அழிப்பதற்கு
எழுந்திடவாய்
தேன் பாயும் அழகியதோர் தேசத்தையே
உம்மாலே
தேய்பிறைபோல் ஆக்க வேண்டும்
இப்படிக்கு
கோட்டைப்பேரரசன் ஆறாம் பராக்கிரமபாகு

(ஓலை வாசகத்தை சப்புமல்குமரையன் வாசித்த பின் யாழ்ப்பாண இராச்சியத்தின் பேரரசன் கனகசூரியசிங்கயாரியனை எதிர்த்து போருக்கு ஆயத்தம் செய்தல்)

**சந்தேகத்தாழிசை**

மன்னனவர் ஆணையதை மகிழ்ச்சியதாய்
ஏற்றுமே
மாற்றலர்கள் வெல்வதற்கு மாகரிகள்
கூட்டுவீர்
அன்னவனின் கட்டளையை அதிசுறுக்கில்
முடிக்கவே
அரிபுலிகள் வாழுகின்ற அடர்வனமும்
தாண்டுவீர்
பொன்னையுறு யாழ் நகரின்
பொலிவுதனை அழிக்கவே
பொங்கியெழும் வீரர்களே பொறுப்புடனே
வாருமே
என்னுடைய செயல் திறனை ஏந்தலவர்
மெச்சவே
எப்படியும் முடித்திடுவேன் ஏவலனே
கேளுமே
**

வசனம்- ஓலை தாங்கியே சற்று
பொறுத்திரு(சப்புமல்குமரையன்
அருமலைக்குச் சென்று ஓலையை எழுதி
விட்டு திரும்பி வருதல்)
ஓலை தாங்கியே இந்த ஓலை வாசகத்தை
யாழ்ப்பாணத்து அரசன் கனக சூரிய
சிங்கையாரியனிடம் ஒப்படைத்து விட்டு
எமது மன்னன் இனிமேல் யாழ்ப்பாணத்து
அரசர்களுக்கு திறை தர முடியாது என்று
கூறி விடு. அப்படியவன் மறுத்தால் திறை
தர முடியாது போர் என்று கூறி விட்டு நீ
திரம்பி வா. இந்த ஓலை வாசகத்தை
கவனமாய் கொண்டு செல்வாய்.
(ஓலை தாங்கி ஓலை வாசகத்தை சப்புமல்
குமரையனிடம் பெற்றுக்கொண்டு
யாழ்ப்பாண இராச்சியத்தை
நோக்கிப்போதல்)

## அங்கம் -06

**இடம் நேரு:** பங்கு கொள்வோன்-
ஆறாம் பராக்கிரமபாகுவின் ஏவலனாகிய
ஓலை தாங்கி
நிலைமை- ஆறாம் பராக்கிரமபாகுவின்
ஏவலனாகிய ஓலை தாங்கி கோட்டை
இராச்சியத்தின் தளபதி சப்புமல்குமரையன்
கொடுத்த ஓலை வாசகத்தை
யாழ்ப்பாணத்தரசன்
கனகசூரியசிங்கையாரியனுக்கு
கொடுப்பதற்காக எடுத்துச்செல்லல்.

### தரு

பல்லவி
ஓலை எடுத்துச் செல்லுவேன் தளபதியின்
ஓலை எடுத்துச் செல்லுவேன்

சரணங்கள்
ஓலை எடுத்து நானும் ஓடை கடலும்
தாண்டி
சாலைப் படிகள் விட்டு சாரல் ஆறு பார்த்து
காலைப்பொழுதில் இன்று களைப்பு
மாற்றிக்கொண்டு
மாலை வருவதற்குள் மாந்தைத் துறையும்
செல்வேன்
ஓலை எடுத்து
**

கண்டி நகர் தனையே களிப்பாய் பார்த்து
விட்டு
கொண்ட கடிதம் தன்னை கோல நிறத்தால்
சுற்றி
வண்டு பாடும் வீடு நண்டு ஓடும் நாடு
சண்டை வருவதற்காய் சாட்சி நேரில்
சொல்வேன்
ஓலை எடுத்து

நல்லூர் கோயில் கண்டு நானும் வணக்கம்
செய்து
செல்லும் பாதையெல்லாம் செறிந்த
வளங்கள் கண்டேன்
வல்ல அரசன் முன்பு வடிவாய் போற்றல்
செய்து
எல்லாம் அறிந்த சீமான் ஏவல்
தொழிலைச்செய்வேன்
ஓலை எடுத்து

## அங்கம் -07

இடம்:யாழ்ப்பாண பேரரசன் கனகசூரிய
சிங்கை யாரியன் அரச சபை.
பங்கு கொள்ளுவோர்: யாழ்ப்பாண
பேரரசன்- கனகசூரியசிங்கையாரியனின்
தளபதி - நாகபுத்திரன்
நிலைமை - வரவு
சபை வரவு சந்தக தாழிசை
சிங்களவர்: சீனர் மத்தர்! கலிங்கர்!
தெலுங்கர்! குலிந்தர்களும்!
சித்திரர்!மித்திரர்!புத்திரர்!
செங்கணர் வங்கண தேசங்களும்
**

கொங்கணர்: சோனர்! மதங்கர்!இடங்கர்!
குடங்கா! நிசா சகரும்
கூர்ச்சரர்!பவணர்!
குமுதர்! விபுதர்களும்
**

எங்கும் நிறைந்து பரந்து துரந்து
இரைந்து சிறந்திடவே
இடிமுடி வெடி அதிர
குடை கொடி பல படையிடை
இடை சூழ்ந்திடவே
**

மங்கள இங்கிதச் சங்கம் இலங்கி வணங்கி
முழங்கிடவே வானாபதி நிகர் சேனாபதி



படைத்தானாதிபதி வந்தானே

### ஆடல் தரு

மாற்றலர்கள் வெல்வோன் தோற்றல்
இல்லா செல்வோன்
மாண்புமிகு தளபதியும் காண்பதற்கு
வாரான்
போற்றல் மிகு வல்லோன் ஆற்றல் மிகு
வில்லோன்
பொங்கு நடை போட்டதுவாதய்
சிங்கமாகப் பாய்வான்
**

வானை முட்டும் கொடியான் சேனை
காக்கும் முடியான்
வாரணங்கள் கொண்டவனும்
கொண்டவனும் நேரடியாகச் செல்வான்
சேனையணி படியான் தானை மணி
வடிவான்
சேன் அதிர ஒன்றெடுத்து ஆண்மையுடன்
காப்பான்
**

ஆடுகம் உடைடியான் கேடு செய்யும்
நடையான்
ஆவலராய்ப் பார்ப்பதற்கு காவலரும்
வருவார்
நாடு புகழ் படையான் நீடு கொண்ட
உடையான்
நாற்றிசையும் வாழ்த்துரைக்க ஏற்றமுடன்
பார்ப்பீர்

### தரு

கடல் ஆடும் யாழ் நகர் மண்ணிலே
கன்னல் செந் நெல்லும் காவல் காக்குமே
நடல் கொண்ட நாற்றுக்கள் வளர்ந்துமே
நாலு திசைகளும் நாதம் பேசுமே
தங்கர் தமிழர் நாடு
சங்கு முழங்கும் வீடு
எங்கள் தலைவன் காண ஏகுவேன் நானே
**

சிலை கண்ட நல்லூரில் இன்றுமே
சிங்கையாரியன் சிந்து பாடுகின்றான்
கலையோடும் வன்னி நாட்டிலே
கப்பல் வந்து கடமை ஆற்றுவார்
திறைகள் நிறைவாய் வாங்கி
மறைகள் பிறைபோல் தாங்கி
குறைகள் இன்றி வாழும் குமரனும் வாரீர்
**

படை வைத்த பார்த்திபன் மன்றிலே
பாவலர் பலர் பாக்களும் மீட்டுவர்
குடையேந்தும் ஏவலர் நாளுமே
குரல் கேட்டு கூடுவார் அவையிலே
மாந்தை எல்லை கண்டு
ஏந்தல் தொல்லை வெண்டு
வேந்தன் பணியைச்செய்யும் தளபதி பாரீர்

(முற்றும் - வாசகர்கள் தங்கள் அபிப்பிராயங்களை எழுதலாம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம் மாத நேர்முகம்
# பிரபல ஓவியர் புகழேந்தி



**குடந்தை ஓவியக் கல்லூரியில் பட்டப் படிப்பை முடித்து, ஹைதராபாத் பல்கலைக் கழகத்தில் முது நிலைப் படிப்பை முடித்த ஓவியர் புகழேந்தி தமிழகத்திலேயே முதல் முறையாக ஓவியத்துறையில் முதுகலைப் பட்டம் பெற்றவர் . அத்துடன் இளைஞர்களுக்கான தேசிய விருது, தமிழ்நாடு மாநில விருது உட்பட பல விருதுகளைப் பெற்றவர். சமூகத்தின் மீது அதீத அக்கறையுடைய ஓவியர் புகழேந்தி உலக நாடுகளில் மனித குலத்துக்கு எதிராக நடைபெறும் கொடூரங்களை ஓவியங்களாக்கி அதன் மூலம் மக்களை சிந்திக்கவும் செயல்படவும் வைப்பவர். அண்மையில் இலங்கை வந்திருந்த இவர் இலங்கையின் பிரபல ஓவியர் எஸ்.டீ. சாமியும் பிரசன்னமாயிருந்த போது எமக்கு அளித்த பேட்டி இதோ:**

**கேள்வி:** ஈழத்தமிழர்களுக்கு எதிராக நடைபெறுகின்ற அடக்குமுறைகளை 'எரியும் வண்ணங்கள்','உறங்கா நிறங்கள்' போன்ற ஓவியத்தலைப்புக்களில் வெளிக்கொணர்ந் திருக்கின்றீர்கள். ஈழத்தமிழர் விவகாரங்கள் தொடர்பில் உங்களுக்கு எவ்வாறு இந்த ஈடுபாடு ஏற்பட்டது?

**பதில்:** நான் ஒரு மாணவனாக ஓவியக் கல்லூரியில் இணைந்து கொண்ட போது 1983 ஜுலையில் ஈழத்தில் தமிழருக்கு எதிராக நடைபெற்ற கொடூரமான இனப் படுகொலைகள், இலட்சக்கணக்கான ஈழத் தமிழர்கள் அகதிகளாக தமிழகம் வந்தமை போன்ற சம்பவங்கள் என்னை மிகவும் பாதித்தன. சிந்திக்க வைத்தன. அது வரை இயற்கையை வரைந்து கொண்டிருந்த என் தூரிகைகள் உலகில் நடைபெறுகின்ற அடக்கு முறைகள், ஒடுக்கு முறைகளுக்கு எதிராக செயற்படத்தொடங்கின. ஈழத்தில் என் இனத்துக்கு ஏற்பட்ட அவல நிலையை என் ஓவியங்கள் மூலம் உலகுக்கு காட்ட விரும்பினேன். அவற்றின் வெளிப்பாடே இந்த ஓவியங்கள்.

**கேள்வி:** உங்களது படைப்புக்கள் பற்றிச்சொல்லுங்கள்?

**பதில்:** 'எரியும் வண்ணங்கள்' என்ற ஓவியத்தொகுப்பு ஈழப்போராட்டத்தை உள்ள டக்கிய ஓவியங்களைக்கொண்டுள்ளது. 'முக வரிகளில்' உலகளவில் பிரசித்தி பெற்ற பலருடைய முகங்களை கோட்டோவியங் களாக வரைந்திருக்கின்றேன். தற்போதெல் லாம் பிரபலமானவர்களைப்பற்றி கட்டுரை களை பிரசுரிக்கும் போது அவர்களின் புகைப்படங்களை பிரசுரிப்பதை விட கோட் டோவியங்களாக வரைந்து பிரசுரிப்ப தையே பலரும் விரும்புகின்றார்கள். அந்த வகையில் 'முகவரிகள்' என்ற கோட்டோ வியத் தொகுப்பு இதழ்கள், எழுத்தாளர்கள், பதிப்பகத்தார் என்று பிறருடைய தேவைக ளுக்காகச்செய்யப்பட்டவை. 'திசை முகம்' என்ற ஓவியத் தொகுப்பு முழுக்க முழுக்க ஈ.வெ.ரா. பெரியாரின் ஓவியங்களைக்கொண் டுள்ளது.

**கேள்வி:** 'உறங்கா நிறங்கள்' என்ற ஓவியத் தொகுப்பைப் பற்றிக் கூறுங்கள்?

**பதில்:** அனைத்து துறைகளிலும் முன்னேற்றங்களைக் கொண்ட நூற்றாண் டாக இருபதாம் நூற்றாண்டு விளங்குகின் றது. அந்த அடிப்படையில் இருபதாம் நூற் றாண்டின் முக்கிய நிகழ்வுகளையும் அதன் நாயகர்களையும் ஓவியப் படைப்புக்களாக்கி இருக்கின்றேன். இந்த நூலில் 20 ஆம் நூற்றாண்டின் வாசலைத்திறந்த ரஷ்யப்புரட் சியையும், யுகப்புரட்சியையும் செயலில் எழுதிய லெனின் ஆரம்பித்து 20 ஆம் நூற் றாண்டின் இறுதியிலும், 21 ஆம் நூற்றாண் டின் ஆரம்பத்திலும் இருக்கின்ற பிரபாக ரனை ஒரு குறியீடாக தொகுப்பின் இறுதி யாக வைத்துள்ளேன். இவ்ஓவியங்களுக்கு மேலும் வலுவூட்டும் வகையில் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனும், கவிஞர் இன் குலாப் அவர்களும் கவிதை வரிகளை எழுதியிருக்கின்றார்கள்.

**கேள்வி:** நீங்கள் அவதானித்த மட்டில் இலங்கையின் ஓவியத்துறையின் வளர்ச்சி எப்படி இருக்கின்றது?

**பதில்:** இலங்கையைப் பொறுத்த வரை யில் ஓவியர்துறை இன்னும் நன்றாக வளர வேண்டும். பத்திரிகைகளில் மட்டுமே ஓவி யம் என்ற நிலை மாற வேண்டும். அதை யும் தாண்டி செயற்பட வேண்டும். இந்தியா வைப்போல் இங்கு ஓவியக்கல்லூரிகள் இல்லாமை ஒரு பெருங்குறையாகும்.

**கேள்வி:** நீங்கள் எங்கெல்லாம் ஓவியக் கண்காட்சியை நடத்தியிருக்கின்றீர்கள்.

**பதில்:** ஈழ வரிசை ஓவியங்கள் தஞ்சை, மதுரை மாவட்டங்களில் பல இடங்களில் கண்காட்சியாக 86,87,88,89 ஆம் ஆண்டு களில் இடம் பெற்றுள்ளன. இது தவிர, சென்னை, ஹைதராபாத், டெல்லி, அக்னோ, பெங்களூர், மும்பை, சிங்கப்பூர், மலேஷியா ஆகிய நாடுகளிலும் நடத்தியிருக்கிறேன். விரைவில் இலங்கையிலும் கண்காட்சி நடத் தும் எண்ணம் இருக்கின்றது.

**கேள்வி:** முதல் தடவையாக இலங்கை வந்துள்ள நீங்கள் ஈழத் தமிழர் களைச் சந்தித்தி ருக்கின் றீர்கள். அவர்கள் பற்றிய உங்கள் நிலைப்பாடு என்ன?

**பதில்:** இது வரை காதால் கேட்டதை தற்போது தான் கண்களால் கண்டேன். எல்லோரும் அவர்கள் பட்ட காயத்தை மறைக்க முயல்கின்றார்களே தவிர அதை ஆற்ற யாரும் முயற்சிக்கவில்லை. ஆனால் உலகம் அவர்களை உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருக்கின்றது.

**கேள்வி:** தூரிகை என்ற மாபெரும் சக்தி வாய்ந்த ஆயுதம் உங்களிடம் இருக்கின்றது. அதன் மூலம் நீங்கள் என்ன சாதிக்க விரும்புகின்றீர்கள்?

**பதில்:** மனிதனைக் கருவாகக்கொண்டு, மனிதனையும் அவனுக்குள் சிக்கல்களை யுமே நான் ஓவியங்களாக வரைகின்றேன். மக்களின் பிரச்சினைகளை விளங்கி அவற்றை ஓவியமாக்குவதன் மூலம் அவர் களைச் சிந்திக்கத்தூண்டுவதே எனது நோக்கம்.

அதனடிப்படையில் என் ஓவியங்களைப் பார்த்து இலங்கைப் பிரச்சினைகளைத் தெரிந்து கொண்டவர்கள் பலர் இருக்கின் றார்கள். மேலும் எதிர்கால சந்ததிக்கென நான் விட்டுச்செல்வது இந்த ஓவியங்களை மட்டும் தான். எழுத்துக்கள் மறைந்தாலும் என் படைப்புக்கள் அழியாது. கலைப் பொக்கிசமாக, ஆவணமாக இருந்து எதிர்கால சந்ததிக்கு உதவும்.

**கேள்வி:** இலங்கையில் பல திறமை மிக்க ஓவியர்கள் பலர் இருக்கின்றனர். ஓவியத்துறையில் முதுகலைமாணிப்பட்டம் பெற்ற உங்களைப்போன்ற ஒருவருடன் ஓவியத்துறை சார்ந்த நுட்பங்கள் பலவற்றைப்பகிர்ந்து கொள்ளும் விதத்தில் அவர்களுடன் ஒரு கலந்துரையாடலில் நீங்கள் பங்கு பற்றுவது பற்றி...?

**பதில்:** கண்டிப்பாக.. இன்னுமொரு தடவை நான் இலங்கை வரும்போது இலங்கையிலுள்ள ஓவியர்கள் அனைவ ரையும் சந்தித்து உரையாடுவது மகிழ்ச் சிக்குரியதாயிருக்கும். உதவிகள், ஒத்து ழைப்புகள் செய்ய தயாராயிருக்கிறேன்.

- பிரதீபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தமேற்றாமல் அறுவைச்சிகிச்சை செய்யலாம்!

அறுவைச்சிகிச்சைக்கு உட்படுத்தப்படும் ஒருவருக்கு பிறரிடமிருந்து எடுக்கப்பட்ட இரத்தம் ஏற்றப்படுவது காலம், காலமாக காணப்படும் ஒன்று. சுமார் இரண்டு நூற்றாண்டுகளாகவாவது இந்த வழக்கம் மருத்துவத்துறையில் இருந்து வருகின்றது. அத்துடன் அவ்வாறு ஒருவரிடமிருந்து பெறப்படும் இரத்தத்தின் நம்பகத்தன்மை பற்றிய எச்சரிக்கையுணர்வுகள் நோயாளர்களினதும் அவர்களின் நெருக்கமானவர்களினதும் மனங்களை வேதனைப்படுத்தும் நிகழ்வுகளும் இடைவிடாது வெளிப்பட்டவண்ணமுள்ளன. உலக சுகாதார ஸ்தாபனம் கூட இது தொடர்பாக கவலை தெரிவித்திருக்கின்றது. தொற்றுக்கள் பற்றிய அச்சம் காரணமாக உறவினராக இல்லாத ஒருவரிடமிருந்து இரத்தம் பெறுவது இலங்கையில் தடை செய்யப்பட்ட ஒன்றாக உள்ளது. இன்று இது தொடர்பாக மாற்றுக் கருத்துக்கள் முன் வைக்கப்பட்டும், இரத்தம் ஏற்றாமலே பெரும் அறுவைச்சிகிச்சைகளை கூட நடைமுறைப் படுத்தப்படும் மருத்துவத்துறை மாற்றங்கள் தோன்றியுள்ளன. இவை 1960களில் தொடங்கி முன்னேறி வருவது காணக்கூடியதாயுள்ளது. சிறந்த மருத்துவ நிபுணர்களின் முன்னெடுப்பில் இரத்தமில்லா சிகிச்சை முன்னேற்றம் கண்டு வருவது மகிழ்ச்சியே.



மதங்களுடன் தொடர்புபடுத்தி இதனை பார்ப்பதை விட மருத்துவத்துறையில் தென்படும் ஒரு அபிவிருத்தி என இதனை கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு நாட்டிலும், பல இலட்சக்கணக்கான நோயாளர்கள் அறுவைச்சிகிச்சையின்போது இரத்தம் ஏற்றப்படுகின்றார்கள். ஆண்டு தோறும் பல மில்லியன் பைந்த் இரத்தம் ஏற்றப்படுகின்றது.

75 மில்லியன் யூனிற் (450 மி.லீ. ஒரு யூனிற்) இரத்தம் வருடம் தோறும் தானம் செய்யப்படுகின்றது என்றும் அதில் 20% மாவது பல்வேறு காரணங்களால் சரியாக பரீட்சிக்கப்படாமல் போகின்றது என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் தனது அறிக்கையில் தெரிவித்திருந்தது.

இரத்ததானம் செய்யும் படியும் அது நோயாளிகளின் உயிர்களை காப்பாற்றும் மனிதாபிமானச்செயலென்றும் கூறும் பிரச்சாரங்களும் தீவிரமாக நடைபெறுகின்றன. பெரும் பணம் புரளும் தொழில் என்ற வகையிலும் இது கணிக்கப்படுகின்றது. அறுவைச்சிகிச்சை என்றால் இரத்தம் ஏற்றுவதற்கான ஆயத்தங்கள் நிச்சயம் நடைபெறுகின்றன. இவற்றைப்பார்க்கும் எவரும் இது கண்டிப்பான ஒரு நியதியாக இருக்க வேண்டும் என்று முடிவுக்கு வருகின்றனர் என்பது உண்மையே. ஆனால் பெரும்பாலான அறுவைச் சிகிச்சைகளுக்கு தேவையில்லாமலே இரத்தம் ஏற்றப்படுகின்றது என்று சில மருத்துவ ஆய்வுகளை ஆதாரம் காட்டுகின்றன சில மருத்துவ பத்திரிகைகள். இரத்தம் ஏற்றப்படுவது நோயாளரைப் பொறுத்ததாகவன்றி டாக்டரைப்பொறுத்தே இருக்கின்றது என்று மருத்துவ பத்திரிகைகள் விமர்சிக்கின்றன.

இரத்தம் ஏற்றப்படுவதால் அவரின் உடலுக்கு பல ஆபத்துக்கள் ஏற்படுகின்றன என்பது இரத்தமில்லா சிகிச்சையை வரவேற்பவர்கள் தீவிரமாக எடுத்துக்காட்டும் உண்மை பல நாடுகளில் முக்கியமாக மருத்துவ வசதி வாய்ப்புக்கள் குறைவான நாடுகளில், ஏற்றப்படும் இரத்தத்தின் மூலமாக எயிட்ஸ் நோய் பரவுகிறதென்பது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது. இரத்தம் ஏற்றிக்கொண்டவரின் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து கல்லீரல் அழற்சி மற்றும் பாலியல் சம்பந்தப்பட்ட நோய்கள் பரவும் வாய்ப்புக்கள் உள்ளதாக மேற்கு நாடுகளின் மருத்துவர்கள் பலர் எடுத்துக் கூறி வருகின்றனர். ஏற்றப்படும் இரத்தம் மிக நுட்பமான பரிசோதனைகளுக்குட்படுத்தப்படுவதாயினும் கூட அது முற்றிலும் பாதுகாப்பானது, அதில் ஆபத்தே வராது என்று முடிவு செய்து விட முடியாது என்பது இந்த மருத்துவ வல்லுநர்களின் கருத்தாக இருக்கிறது. "இரத்தமேற்றல் என்பது என்றோ ஒரு நாள் மறைந்து விட வேண்டும்" என்று எயிட்ஸ் வைரஸைக் கண்டு பிடித்தவரான பேராசிரியர் லூக் மாண்டேனியா கூறியிருந்தார்.

இரத்தமேற்றப்படுவதால் ஏற்படக்கூடிய பாதகங்கள் ஒரு புறமிருக்க, இதற்காக பெரும்பணம் செலவு செய்யப்பட வேண்டுமென்ற நிலை உள்ளது. அது மட்டுமன்றி இரத்தமேற்றாமல் செய்யக்கூடிய சிகிச்சைக்கு செலவும் குறைவு என மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். உலகில் இரத்தமாற்றுச்சிகிச்சை முறையை பயன்படுத்தாத சுமார் 180 வைத்தியசாலைகள் உள்ளன என்பது இது பற்றிக்கருத்தூன்றிச்செயற்படுவது அதிகரித்து வருவதைக்காட்டுவதாக உள்ளது.

இரத்தமில்லா சிகிச்சை எப்போது தோன்றியது என்னும் கேள்வி எழுகின்றது. உண்மையில் இரத்தமேற்றும் பழக்கம் தோன்றுவதற்கு முன்பு இதுதான் வழக்கத்திலிருந்திருக்கின்றது. ஆனால் நவீன முறைகளுடன் இன்று நோயாளர்களின் கருத்தைக்கவர்ந்து வரும் இச்சிகிச்சை 1960 களில் டென்டென் கூலி என்னும் புகழ் வாய்ந்த அறுவைச்சிகிச்சை நிபுணர் தொடக்கி வைத்ததாகும்.

1990களில் அநேக வைத்தியசாலைகள் நோயாளிகள் அவ்வாறு விரும்பும் பட்சத்தில் இரத்தம் ஏற்றாமல் சிகிச்சைகளை அளித்தன. இருதய, இரத்தக்குழாய், பெண் பாலுறுப்பியல், மகப்பேறு, எலும்பு முறிவு போன்றவற்றுடன் தொடர்புடைய அறுவை சிகிச்சைகளையும் இரத்தமோ அல்லது அதற்கான பதிலீட்டு பொருட்களோ இல்லாமல் வெற்றிகரமாக செய்து விடலாம் என்று கனடியன் ஜேர்னல் ஒப் அனஸ்தீசியா என்னும் மருத்துவ சஞ்சிகையில் டாக்டர் பீ.எச்.டபிள்யூ வாங் குறிப்பிடுகின்றார்.

இரத்தமேற்றாமல் நடத்தப்படக்கூடிய ஒரு அறுவைச்சிகிச்சையில் கவனிக்க வேண்டிய நுண்முறைகள் பற்றி ஜீன்- பிரான்கோ ஹாடி என்னும் நிபுணர் கூறுகையில் (1) அறுவைச் சிகிச்சைக்கு முந்திய தயாரிப்புக்கள் (2) அறு




வைச்சிகிச்சையின்போது ஏற்படக்கூடிய இரத்த இழப்பு (3) சிகிச்சையின் பின்னரான கவனிப்பு என்பன பற்றி வலியுறுத்தியுள்ளார். அதாவது சிகிச்சையின் முன்னர் நோயாளியின் இரத்தத்தில் செங்குருதி அணுக்களின் செறிவை உரிய மட்டத்திற்கு கொண்டு வருதல் முக்கியமானது. இதற்கு உயர் ஆற்றல் மிக்க இரும்புச்சத்து மற்றும் விற்றமின்கள் பயன்படுத்தப்பட வேண்டும். இரண்டாவதாக சிகிச்சையின்போது இரத்தம் விரயமாகாமல் பார்த்துக்கொள்வது அவசியம். இதற்கென புதிய கருவிகளும் தொழில்நுட்பங்களும் பயன்படுத்தப்படுகின்றன. முக்கியமாக அறுவையின்போது சிந்தக்கூடிய நோயாளியின் இரத்தம் சேகரிக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு வெளியே எடுக்கப்படாமலே மீண்டும் அவருக்கே ஏற்றப்படும் முறை அனுசரிக்கப்படுகின்றது.

அத்துடன் இரத்தத்தின் அளவு குறையாமலிருக்கவும் சில கரைசல்கள் ஏற்றப்படும்.

யூகி

பல்வேறு பசைகள் வெட்டுக்காயங்களையும் இரத்தம் கசியும் இழையங்களையும் அடைத்து விட பயன்படுத்தப்படுகின்றன. மூன்றாவதாக சிகிச்சையின் பின்னரும் சிகிச்சைக்கு முன்னரான தயாரிப்புக்கள் போலவே இரத்த அளவை பேணும் ஊட்டங்கள் தரப்படவேண்டும். இவற்றினால் ஒரு அறுவைச்சிகிச்சைக்காக ஒருவர் செலவு செய்யும் காலமும் குறைக்கப்பட உதவுகின்றது.

பிரான்ஸ் நாட்டின் 14 ஆம் லூயி மன்னரின் காலத்தில் ஒரு விலங்கின் இரத்தத்தை அன்று பிரபலமாக இருந்த டனி என்ற டாக்டர் ஏற்றியதுடன் இரத்த மாற்று சிகிச்சை பற்றிய சிந்தனை ஏற்பட்டிருந்தது. பலப்பல மருத்துவத் துறை ஆய்வுகளினூடாக இன்று வரை பல்லாயிரம் உயிர்களை காப்பாற்றி வந்தது.

இரண்டு உலகப்போர்களின் போதும் இரத்த தானம் பெரும் இடத்தைப்பிடித்திருந்தது. இரத்தமேற்றாமலே அறுவைச்சிகிச்சைகளை வெற்றிகரமாக செய்ய முடியும் என்ற இன்றைய முன்னெடுப்புக்கள் வெற்றி பெறுமாயின் பல கோடி மக்கள் அனுகூலமடைவர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுப்பாடில்லாத சிறுநீர் வெளியேற்றம்



கட்டுப்பாடில்லாத சிறுநீர் வெளியேற்றம் ஒரு மனிதனின் உடல் நலத்தையும், மன நலத்தையும் பாதிக்கின்றது. இது பெரும்பாலும் வயதானவர்களையே தாக்கும். உலகில் சுமார் இருபது இலட்சத்துக்கும் அதிகமானோர் இதனால் அவதிப்படுகின்றனர்.

முதுமையுடன் தொடர்புடைய சில பிரச்சினைகள், பக்கவாதம் ஆகியவற்றின் காரணமாக ஆண், பெண் இருபிரிவினருமே இந்தப்பிரச்சினைக்கு முகம் கொடுக்க நேரிட்டாலும் ஆண்களை விட பெண்களே இதனால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

கருவுறுதல், பிரசவம், மாதவிலக்கு நின்ற பின்னர் ஏற்படும் சில உடல் மாற்றங்கள், உடல் பருமனடைதல், நீண்ட கால நீரிழிவு நோய் போன்ற காரணங்களாலேயே பெண்களுக்கு இப்பிரச்சினை ஏற்படுகின்றது.

கர்ப்பப்பையைத் தாங்கி நிற்கும் தசைகள் பலவீனமடைதல் சிறுநீரை அடக்கும் சுருக்கிகள் (Sphincters) தளர்ந்து போதல் ஆகியவற்றால் பெண்கள் இருமும்போதும் தும்மும்போதும் கடினமான வேலைகளைச் செய்யும் போதும் சிறுநீர் தானாக வெளியேறும்.

அவசரத்தின் காரணமாக ஏற்படும் சிறுநீர் வெளியேற்றம் பெரும்பாலும் வயதானவர்களையே தாக்குகின்றது. இது பெரும்பாலும் தண்ணீர் குடித்தவுடன் ஏற்படும். இதற்கு முக்கிய காரணம் சீரான முறையில் சிறுநீர்ப்பை சுருங்கி விரியாமை ஆகும். சிறுநீர்ப்பையின் உள்ளே ஏற்படும் கிருமித்தொற்றுக்கள், சில நரம்பு வியாதிகள் காரணமாகவே சிறுநீர்ப்பை திடீரென சுருங்குகின்றது.

நாற்பது வயதை தாண்டியவர்களுக்கு வயிறு அழுத்தம் அதிகரிப்பதனால் சிறுநீர் வெளியேறுகின்றது.

வயிற்றுப் பகுதியில் உள்ள பிறபகுதிகள் சிறுநீர்ப் பையுடன் அழுத்தமாக உரசும் போது அவர்களை மீறி சிறுநீர் வெளியேறும். மேலும் விரைவாக சிரிப்பது, தும்முவது போன்ற நேரங்களிலும் இவ்வாறு நிகழும். மாதவிலக்கு நின்ற பின்னர் உடலில் தசைத்தளர்ச்சி ஏற்படும். இதுவும் சிறுநீர் வெளியேறுவதற்கு காரணமாக அமையலாம்.இது குறித்து பெண்கள் ஒதுங்கவோ, அச்சப்படவோ தேவையில்லை. சில உடற்பயிற்சிகள் உரிய சிகிச்சை முறையின் மூலம் இதனைச் சீரமைக்க முடியும்.



# வைத்தியரை அணுகுங்கள்

மாதவிலக்கு நிற்க ஆரம்பிக்கும் போது உடலளவிலும், மனதளவிலும் ஒரு பெண் பல மாற்றங்களை எதிர் நோக்க வேண்டியிருக்கின்றது. மாதவிலக்கு நிற்கும் காலம் ஒவ்வொருவருக்கும் வேறுபடலாம். கடைசி மாதவிலக்கு ஏற்பட சில ஆண்டுகளுக்கு முன்பே கருப்பையில் செயல்பாடுகள் மந்தமடையத் தொடங்கும். ஹோர்மோன்கள் சுரப்பது குறையும். மாத விலக்கு நிற்கப்போகும் சந்தர்ப்பத்திலும், நின்ற பின்னரும் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் பிரச்சினை ஏற்படுகின்றது. சிலருக்கு இடது காலில் நோ இருக்கும். இது இடுப்பில் இருந்து குதிக்கால் வரை இருக்கும். இதனால் காலையில் எழும்போதே குதிக்காலை நிலத்தில் ஊன்றுவது மிகவும் கஷ்டமாக இருக்கும். சிலருக்கு இடுப்பு வலி, நரம்பு வலி, நரம்புத் தளர்ச்சியும் ஏற்படும்.உடல் பருமனாக ஆரம்பிக்கும். முடி அதிகமாக உதிரும். மேலும் 'ஈஸ் ரோஜன்' குறைவதால் எலும்புத்தேய்வு நோய் ஏற்படும். இதனால் மூட்டுத்தேய்வு ஏற்படும். உடல் பருமனாதல், முடி உதிர்தல், குதிக்கால் வலி, ஞாபக மறதி, எலும்புத்தேய்வு, இடது பக்க கை, கால் வலித்தல் போன்ற அறிகுறிகள் தோன்ற ஆரம்பித்தவுடன் வைத்தியரை நாடி சிகிச்சை பெற்றால் மாதவிலக்கு நிற்கும் காலங்களில் ஏற்படும் பிரச்சினைகளை இலகுவில் தீர்க்கலாம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கோடையிலிருந்து பாதுகாப்போம்!



கோடையின் பாதிப்பிலிருந்து பாதுகாத்துக்கொள்ள வேண்டிய உறுப்புகளுள் முக்கியமானது கூந்தலும், சருமமும். ஏனெனில் இவற்றில் தான் வெயில் நேரடியாக படுகின்றது. எனவே கூந்தலையும், சருமத்தையும் இயற்கையிலிருந்து கிடைக்கக் கூடிய பொருட்களைக் கொண்டு பேண வேண்டியது அவசியமாகும்.

ஆனால் அதிகமானோர் பல தேசங்களில் தயாரிக்கப்படும் அழகுசாதனப் பொருட்களை பயன்படுத்துவதிலேயே அதிக நாட்டம் காட்டுகின்றனர். உலகில் பல நாடுகள் குளிர் பிரதேசங்களாகவும், பல நாடுகள் உஷ்ண நாடுகளாகவும் உள்ளன. இவ்வாறான நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் அழகு சாதனப்பொருட்கள் அந்தந்த நாடுகளின் கால நிலைக்குப் பொருத்தமாகவே தயாரிக்கப்படுகின்றன. எனவே குளிர் பிரதேசங்களில் தயாரிக்கப்படும் பொருட்கள் வெப்பநாடுகளுக்கும், வெப்பபிரதேசங்களில் தயாரிக்கப்படும் பொருட்கள் குளிர் நாடுகளுக்கும் எப்படிப்பொருந்தும்? இது குறித்து எவரேனும் சிந்திப்பதுண்டா?

எனவே இவ்வாறான வெளிநாட்டுத் தயாரிப்புக்களை கூடுமானவரை தவிர்த்து இயற்கையாகக் கிடைக்கும் பொருட்களைப்பயன்படுத்தி பயனடைய வேண்டும்.

சூரியனில் இருந்து வரும் அல்ட்ரா வயலெட் கதிர்களால் வறண்ட சருமம் அதிக பாதிப்புக்கு உள்ளாகின்றது. இதனால் முகத்தில் சுருக்கம் விழும், முகப் பருக்கள் தோன்றும். எனவே வெயில் காலங்களில் அடிக்கடி முகத்தைக் கழுவ வேண்டும். மேலும் கோடை காலத்தில் சருமத்தில் தோன்றும் வியர்க்குருவிற்கு ஒரு தேக்கரண்டி எலுமிச்சைச் சாற்றில் சிறிதளவு பால் கலந்து தடவுவதன் மூலம் வியர்க்குருவை நீக்க முடியும். மேலும் வெயில் காலங்களில் பருத்தி ஆடைகளை அணிவதே சிறந்தது.

குளிர்ச்சியான உணவு வகைகளை அதிகமாக உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும். பழரசங்கள், தயிர், மோர், பச்சைக்காய்கறிகள், கீரை வகைகளை அதிகமாக உணவில் சேர்த்துக்கொள்ளுவது மிகுந்த பயனளிக்கும்.

கூந்தலின் ஆரோக்கியத்துக்கு இரும்புச்சத்தும் புரதச்சத்தும் மிக அவசியம். அநேகமானோரைப் பாதிக்கும் முக்கிய பிரச்சினை இளநரை. பலருக்கு பரம்பரை காரணமாக இளநரை ஏற்படுகின்றது.

இதைத் தடுப்பது சற்றுக்கடினம். சிலருக்கு புரதச்சத்துக் குறைவினாலும் இளநரை ஏற்படுகின்றது. இவ்வாறானவர்கள் புரதச்சத்து நிறைந்த உணவு வகைகளை உண்பதன் மூலம் அதனைத் தடுக்க முடியும்.

தலைமுடியின் ஆரோக்கியத்துக்கு கறிவேப்பிலை சிறந்தது. கறிவேப்பிலையை அரைத்து உண்பது மிகுந்த நன்மையளிக்கும்.

தலைமுடியை காலையிலும் மாலையிலும் சீப்பினால் அழுத்திச் சீவ வேண்டும். இதனால் இரத்த ஓட்டம் சீராக இருக்கும். வெயிலால் தலையில் பொடுகு ஏற்படும். பொடுகு இருந்தால் முடி உதிர்வதுடன் முடியின் வளர்ச்சியும் பாதிப்படையும். முகத்தில் பருக்கள் தோன்றும். தேங்காய் எண்ணெய், கற்பூரத்தைலம் என்பன வற்றைப் பாவிப்பதன் மூலம் பொடுகை நீக்கிக் கொள்ள முடியும்.

## கீரை வடை



### தேவையான பொருட்கள்

கடலைப்பருப்பு- 1 1/2 கப்
உளுந்து- 1/2 கப்
சிறு கீரை- 2 கட்டு
பெரிய வெங்காயம்-2
பச்சை மிளகாய்-4
சீரகம்- 1 தேக்கரண்டி
உப்பு- தேவையான அளவு
எண்ணெய்- தேவையான அளவு

### செய்முறை

பருப்பு வகைகளை ஊற வைத்து நீரை வடித்து விட்டு கரகரப்பாக அரைத்தெடுங்கள். வெங்காயம் பச்சை மிளகாய், கீரை ஆகியவற்றை சுத்தம் செய்து பொடியாக நறுக்குங்கள். இவற்றை மாவுடன் கலந்து உப்பு, சீரகம் சேர்த்து பிசையுங்கள். சூடான எண்ணெயில் வடைகளாக பொரித்தெடுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத பலன்கள்

பிரம்மஸ்ரீ சோ.சிவகடாட்ச சர்மா

01.07.2004 - 31.07.2004




### அஸ்வினி, பரணி, கார்த்திகை-1

கல்வியில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். 16 ஆம் திகதி வரை தொழிலில் மந்த நிலை இருக்கும். அதன் பின் சிறப்பான முன்னேற்றம் உண்டு. வியாபாரத்தில் 16 ஆம்திகதிக்குப்பின் அதிக லாபம் கிடைக்கும். பிரயாணங்கள் நன்மை தரும். திருமண முயற்சிகள் கைகூடும். குழந்தைப்பாக்கியம் கிடைக்கும். அதிஷ்டம் உண்டு. குடும்ப மகிழ்ச்சி உண்டு. வாழ்க்கைத்துணைக்கு பொன், பொருள் சேரும்.

கூடாத நாட்கள்: 22,23,24, 27,28




### கார்த்திகை - 2,3,4 ரோகிணி, மிருக சீரிடம் - 1,2

கல்வியில் முன்னேற்றம் இருந்தாலும் 16 ஆம் திகதிக்குப்பின் 23 ஆம் திகதி வரை மந்த நிலையிருக்கும். தொழிலில் முன்னேற்றம் உண்டு. வியாபாரத்தில் அதிக லாபம் கிடைக்கும். இடமாற்றம் அல்லது தூர பயணங்கள் செய்யவேண்டியிருக்கும். வீடு,மனை ,வாகனம் வாங்க அல்லது விற்க இடமுண்டு. திருமண முயற்சிகளில் தடை, தாமதங்கள் ஏற்படலாம். வாழ்க்கைத்துணைக்கு 16 ஆம் திகதிக்குப்பின் சில கஷ்டங்கள் ஏற்படலாம். ஏழரைச்சனி கடைக்கூறு. சனீஸ்வரரை வழிபட்டு வரவும். கூடாத நாட்கள்: 24,25,26,29,30




### மிருகசீரிடம் - 3,4, திருவாதிரை, புனர்பூசம் - 1,2,3

கல்வியில் மந்த நிலையிருக்கும். 16 ஆம் திகதிக்குப்பின் ஓரளவு முன்னேற்றம் உண்டு. தொழில் சுமாராக இருக்கும். வியாபாரத்தில் ஓரளவு இலாபம் கிடைக்கும். 23 ஆம் திகதிக்குப்பின் அதிக லாபத்தை எதிர்பார்க்கலாம். கல்வி சம்பந்தமான இடமாற்றங்கள் பிரயாணங்கள் மேற்கொள்ள வேண்டியிருக்கும் திருமண முயற்சிகள் தடைப்பட்டு நடக்கும். பிள்ளைகள் தூரதேசப்பயணம் மேற் கொள்வர். வாழ்க்கைத்துணைக்கு பொருட் செலவு, மனக்கவலை ஏற்படலாம். ஏழரைச் சனி நடுக்கூறு நடக்கின்றது. சனீஸ்வரரை வழிபட்டு வரவும். கூடாத நாட்கள்: 4,5,27,28,31




### புனர்பூசம் - 4,பூசம்,ஆயிலியம்

கல்வியில் நல்ல முன்னேற்றம் உண்டு. தொழில் முன்னேற்றம் உண்டு. வியாபாரத்தில் அதிக லாபம் கிடைகக்கும். 28 ஆம் திகதிக்குப்பின் திடீர்ச்செலவுகள் ஏற்படும். பிரயாணங்கள் நன்மை தரும்.

தூரப்பயணங்கள் மேற்கொள்ள வேண்டியிருக்கும். திருமண முயற்சிகள் கை கூடி வரும். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். வாழ்க்கைத் துணைக்கு இடமாற்றம், பிரயாணம் பொருட் செலவு உண்டு. ஏழரைச்சனி முற்கூறு நடக்கின்றது. சனீஸ்வரனை வழிபட்டு வரவும். கூடாத நாட்கள்: 6,7,29,30




### மகம்,பூரம், உத்தரம்-1

கல்வி முன்னேற்றம் உண்டு. தொழில் முன்னேற்றம் உண்டு. வியாபாரம் மத்திமம். பெருமளவில் முதலீடுகள் செய்ய இடமுண்டு. 16 ஆம் திகதிக்குப்பின் கல்வி அல்லது வியாபாரம் தொடர்பான வெளி நாட்டுப்பயணங்கள் செய்ய வேண்டியிருக்கும். திருமண முயற்சிகள் கைகூடும். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். வாழ்க்கைத்துணைக்கு நற்பலன் அதிகம். பெற்றோருக்கு இடமாற்றம், பிரயாணம், தூர தேச பயணம், பொருட்செலவு உண்டு.

கூடாத நாட்கள்: 4,5,8,9,10,31




### உத்தரம் - 2,3,4, அத்தம், சித்திரை-1,2

கல்வி முன்னேற்றம் உண்டு. 16 ஆம் திகதிக்குப்பின் கல்வியில் தடை, தாமதம் ஏற்படலாம். தொழில் தொடர்பான வெளிநாட்டுப்பயணம் அல்லது அதிகரித்த முதலீடுகள் செய்ய வேண்டியிருக்கும். பொதுவாக இந்த ராசிக்காரருக்கும் இடமாற்றம், பிரயாணம், தூர தேசப்பயணம், பொருட்செலவுகள் உண்டு. திருமண முயற்சிகள் தாமதமாகும். வெளிநாட்டுத்திருமணங்கள் நடக்கும். தாயாருக்கும் வாழ்க்கைத் துணைக்கும் இடமாற்றம் அல்லது தூரப்பயணம் உண்டு.

கூடாத நாட்கள்: 6,7,10,11,12




### சித்திரை-3,4, சுவாதி, விசாகம் -1,2,3

கல்வி முன்னேற்றம் உண்டு. 16 ஆம் திகதிக்குப்பின் கல்வியில் மந்த நிலையிருக்கும். தொழில் முன்னேற்றம் உண்டு. சுயதொழில் செய்வோர் நன்மையடைவர். வியாபாரத்தில் அதிக லாபம் கிடைக்கும். 23 ஆம் திகதிக்குப்பின் வெளிநாட்டுப்பயணம் சாத்தியமாகும். வெளிநாட்டிலிருப்போர் தாய் நாடு சென்று வருவர். திருமண முயற்சிகள் கைகூடும். பிள்ளைகளுக்கு நன்மையுண்டு. அதன்பின் இடமாற்றம், பிரயாணம், பொருட் செலவு உண்டு.

கூடாத நாட்கள்: 8,9,10,13,14




### விசாகம் - 4, அனுஷம், கேட்டை

கல்வி முன்னேற்றம் உண்டு. கல்வி தொடர்பான பிரயாணங்கள் உண்டு. தொழில் முன்னேற்றம் உண்டு. சிலருக்கு தொழில் மாற்றம் ஏற்படலாம். 16 ஆம் திகதி வரை வியாபாரத்தில் எதிர்பாராத நட்டங்கள் ஏற்படலாம். அதன் பின் லாபம் கிடைக்கும். பலருக்கு இடமாற்றம், பிரயாணம், தூரதேசப்பயணம் ஏற்படும். ஏனையோருக்கு தலையிடி, மனக்கவலை, நிம்மதிக் குறைவு இருக்கும். திருமணமுயற்சிகள் கை கூடும். பிள்ளைகளுக்கு நோய், இடமாற் றம், பொருட்செலவு உண்டு. வாழ்க்கைத் துணைக்கு நற்பலன் உண்டு. 28 ஆம் திகதிக்குப்பின் கஷ்ட பலன், சனீஸ்வரரை வழிபடவும்.

கூடாத நாட்கள்: 10,11,12,15,16,17




### மூலம், பூராடம், உத்தராடம் -1

கல்வி முன்னேற்றம் உண்டு. தொழிலில் 16 ஆம் திகதி வரை முன்னேற்றம் உண்டு. அதன்பின் எதிர்பாராத நட்டங்கள் ஏற்படலாம். பிரயாணங்கள் தடைப்பட்டு நடக்கும்.

வெளிநாட்டிலிருப்போர் தாய்நாடு சென்று வருவர். திருமண முயற்சிகள் வெற்றியளிக்கும் பிள்ளைகளுக்கு கஷ்ட பலன். வாழ்க்கைத் துணைக்கு 16 ஆம் திகதிக்குப்பின் கஷ்டபலன்.

கூடாத நாட்கள்: 13, 14,17,18,19




### உத்தராடம்- 2,3,4 திருவோணம்,அவிட்டம்-1,2

கல்வியில் தடை, தாமதங்கள் ஏற்படலாம். தொழில் பிரச்சினைகள், கஷ்டங்கள் ஏற்பட இடமுண்டு. வியாபாரத்தில் எதிர் பாராத நட்டங்கள், முயற்சித்தடைகள் ஏற்படலாம். பிரயாணங்கள் தடை, தாமதப்படும். சிலருக்கு நிர்ப்பந்தத்தின் பேரில் பிரயாணம் செய்ய வேண்டியிருக்கும். வெளிநாட்டுப் பயணமும் உண்டு. திருமண முயற்சிகள் தாமதப்படும். வாழ்க்கைத் துணைக்கு 16 ஆம் திகதிக்குப்பின் கஷ்ட பலன். சகோதரம் வெளி நாடு செல்வர். அல்லது கஷ்டபலனை அனுபவிப்பர். அட்டமத்து சனி. தட்சணா மூர்த்தியையும் வியாழ பகவானையும் வழிபட வும்.கூடாத நாட்கள்: 15,16,17,20,21




### அவிட்டம்-3,4, சதயம், பூரட்டாதி -1,2,3

கல்வி முன்னேற்றம் உண்டு. தொழிலில் பிரச்சினைகள் ஏற்படும். 16 ஆம் திகதிக்குப்பின் பிரச்சினைகள் அதிகமாகும். வியாபாரத்தில் அதிக லாபம் கிடைக்கும். பிரயாணங்கள் நன்மை தரும். சிலருக்கு திருமண சம்பந்த மான தூரப்பயணங்கள் செய்ய வேண்டியிருக்கும். வாழ்க்கைத்துணைக்கு 16 ஆம் திகதிக்குப்பின் கஷ்ட பலன். பெற்றோருக்கு நன்மையுண்டு.

கூடாத நாட்கள்: 17,18,19,22,23,24




### பூரட்டாதி - 4, உத்தரட்டாதி, ரேவதி

கல்வி முன்னேற்றம் உண்டு. 16 ஆம் திகதிக்குப்பின் மந்த நிலையிருக்கும். தொழிலில் பிரச்சினைகள் ஏற்படும். வியாபாரத்தில் எதிர்பாராத நட்டம் ஏற்படும். பிரயாணங்கள் தாமதப்படும். இடையிடை நோய் வாய்ப்பட நேரிடும். திருமண முயற்சிகள் தாமதப்படும். வாழ்க்கைத்துணைக்கு நன்மையுண்டு. 23 ஆம் திகதிக்குப்பின் கஷ்ட காலம். வியாழன் ஆறில் நிற்பதால் தட்சணா மூர்த்தியையும் வியாழ பகவானையும் வழிபட்டு வரவும்.

கூடாத நாட்கள்: 20,21,24,25,26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொழும்பில் ஆடிவேல் விழா!



கொழும்பு மாநகரிலே ஆடி மாதத்தில் இடம்பெறும் வேல் விழா முக்கியமான விழாக்களில் ஒன்றாகும். கலியுக வரதனாம் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமிக்கு எடுக்கப்படும் இவ் விழாவின் போது இந்துக்கள் மட்டுமன்றி ஏனைய மக்களும் பங்கேற்கும் சமரச விழாவாக அமைகின்றமை இதன் தனிச்சிறப்பாகும்.

ஏறத்தாழ 180 ஆண்டுகளாக இவ் விழா கொழும்பிலே நடைபெற்று வருகின்றது. கதிர்காமத்தின் உற்சவ காலத்துடன் தொடர்புடையதாக ஆடி மாதப் பௌர்ணமி தினத்தில் இவ்விழா ஆரம்பமாகின்றது. முன்னைய நூற்றாண்டுகளில் வணிக நோக்குடன் இலங்கைக்கு வந்து ஆன்மீகப்பணிகளையும் முன்னெடுத்த நாட்டுக் கோட்டை நகரத்தார் சமூகத்தினரும், சம்மாங்கோட்டை சமூகத்தினரும் வேல்விழாவைச் சிறப்பாக ஏற்பாடு செய்கின்றனர்.

சம்மாங்கோட்டார் சமூக நிர்வாகத்தின் கீழ் இயங்கும் கொழும்பு நகரக் கோவில்களான புறக்கோட்டை முதலாம் குறுக்குத்தெரு முருகன் கோவில், பம்பலப்பிட்டி சம்மாங்கோடு ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் கோவில் என்பனவும் நாட்டுக் கோட்டை நகரத்தார் நிர்வகிக்கும் கோவில்களான புறக்கோட்டை பழைய கதிர்வேலாயுத சுவாமி கோவில், புதிய கதிர்வேலாயுத சுவாமி கோவில், பம்பலப்பிட்டி பழைய கதிர்வேலாயுத சுவாமி கோவில், புதிய கதிர்வேலாயுத சுவாமி கோவில் ஆகியனவும் ஆடி வேல் விழாவில் நேரடியாகப் பங்கு பெறுகின்றன.

### ஆடி வேல் விழாவின் தோற்றம்

தமிழகத்திலிருந்து இலங்கை வந்து வர்த்தகம் மேற்கொண்ட சம்மாங்கோட்டார், நாட்டுக்கோட்டைச் செட்டிமார் ஆகிய சமூகத்தினர் பல்லாண்டு காலமாக கதிர்காமத்தலத்திற்கு உற்சவ காலத்தில் பாத யாத்தரையாக சென்று வந்துள்ளனர். ஒரு மாத அளவில் இடம்பெறும் இந்த யாத்திரை கதிர்காமம் மாணிக்க கங்கையில் தீர்த்தமாடி கொழும்பு திரும்புவதுடன் நிறைவடையும். சம்மாங்கோட்டார் தமது பாத யாத்திரையை ஆரம்பிக்குமுன் தாம் வணங்கி வந்த இடும்பன் தெய்வத்தையும் வழிக்காவலுக்கு அழைத்துச் செல்வதாக ஒரு ஐதீகம் நிலவியது. இப்பயணத்தில் பக்தர்கள் வேல் தாங்கி காவடிகள் ஆடிச் சென்றுள்ளனர்.

ஒரு காலப்பகுதியில் கதிர்காமப் பிரதேசத்தில் கொலரா நோய் வேகமாகப் பரவிய காரணத்தால், பதுளை அரச அதிபர், பிற மாவட்ட மக்களை கதிர்காமம் வரவேண்டாம் எனத்தடுத்து விட்டார்.

இந்தச்செய்தியால் பாதிப்புற்ற கொழும்பு பக்கதர்கள் 1909 ஆம் ஆண்டு பம்பலப்பிட்டியில் காணியொன்றைக் கொள்வனவு செய்து உபய கதிர்காமம் ஆலயத்தை அமைத்தனர். இதே காலப்பகுதியில் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயமும் உருவானது. ஆடி மாத கதிர்காம உற்சவத்தையயொட்டி புறக்கோட்டை பக்தர்கள் சுவாமியை இரதத்தில்




ஏற்றி பம்பலப்பிட்டி ஆலயத்தை வந்தடைவர். இரண்டாம் நாள் முருகன் வெள்ளவத்தைப்பகுதி சமுத்திரத்தில் தீர்த்தம் ஆடுவார். பின்னர் சர்வாலங்கார பூஜிதராக இரு இரவுகள் ஆலயத்தில் தங்கியிருந்து பக்தர்களுக்கு அருள் பாலிப்பார்.

நான்காம் நாள் அங்கிருந்து புறப்பட்டு புறக்கோட்டை ஆலயம் வந்தடைவர். இதே வேளை ஆடிப்பௌர்ணமி தினத்தன்று செட்டியார் தெருவிலுள்ள ஸ்ரீ கதிர்வேலாயுத கோவிலில் இருந்து ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி 'தங்கரதத்தில்' பவனியை ஆரம்பிப்பார். பவனி தொடங்கும் முன் தங்கரதத்தில் பால் காவடியுடன் வெள்ளிப்பூண் போட்ட பிரம்பு, மயில் தோகை என்பன ஜிந்துப்பிட்டி முருகன் கோவிலுக்கு எடுத்துச் செல்லப்படும். அங்கு தீபாராதனையின் பின் கட்டியம் கூறப்பட்டு அவை இரதத்தில் வைக்கப்படும். பின்னர் பவனி ஆரம்பமாகி இரவு காலி வீதி பம்பலப்பிட்டி ஆலயத்தை வந்தடையும்.



அன்றும் இன்றும் இரு இரவுகளும் சுவாமி தங்கியிருந்து பக்தர்களுக்கு அருள் பாலிப்பார். மீண்டும் இரத பவனி ஆரம்பமாகி செட்டியார் தெருவைச் சென்றடையும். இதற்கு ஒரு நாள் வரை எடுப்பது வழக்கமாகும்.

தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த இவ்விழா நாட்டில் குழப்பங்கள் ஏற்பட்ட காலங்களில் தடைப்பட்டது.

ஆடிவேல் விழாவின் போது நாட்டின் அனைத்துபபுற மக்களும் ஒன்று கூடுவர். தலைநகர் வீதிகளில் இரத பவனி வருவது கண்கொள்ளாக்காட்சியாகும். 'அரோகரா' கோஷமும் தேவார, பஜனைப்பாடல்களும், பக்திப்பரவசத்தை ஏற்படுத்தும். வாணவேடிக்கை, காவடி, கரக ஆட்டங்கள், தவில் கச்சேரி, சாகச விளையாட்டுக்கள் என்பன தவறாது இடம்பெறும். தமிழகத்தின் கலைஞர்கள் பங்கேற்கும் சிறப்பு நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

நகர வீதிகளில் இந்து மக்கள் தமது கடைகள், வீடுகளை வாழைமரத் தோரணங்களால் அலங்கரித்து இரத பவனியை வரவேற்பர். பூரண கும்பம் வைத்து அர்ச்சனை செய்து வழிபடுவர். வீதிகள் தோறும் ஆயிரக்கணக்கான நேர்த்தித் தேங்காய்கள் உடைந்து சிதறும். மேற்குறித்த ஆலய நிர்வாக சபையின் வேண்டுகோளுக்கிணங்க ஆடி வேல் விழா சிறப்புற நிகழ அரசாங்கம் தனது பூரண ஆதரவினை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

— ம. சண்முகநாதன் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## For the Tamil students all over the world studying G.C.E(O/L) upwords- especially to those in Sri Lanka

I totally agree that as Tamil is our mother tounge, we should read, write and speak our language. We should live according to our culture and God fearing whatever our religion is, but studying English is a must to every Tamil. English is an international language and where ever you go, if you know the language, you can manage to live. English is a rich language and contains words from Latin, French,German, Italian and even Tamil. It has exact degree of expression (ie) sorry, regret, appologise etc. Also there are books on modern and advanced technology, science, medical, management, politics, economics etc. Which is not available in any other language.

I will give you some advice as to how you can improve your English. Your handwriting should be legible. During our time there was a book called 'civil service handwriting'. Even now there are books to practise good handwriting . The writing should be 'running' and not alphabet by alphabet. This is called 'lady's handwriting' . There is no point in writing which somebody else cannot read.

When you read English books or anything in English you should have a compact Oxford Dictionary by your side. Do not use American dictionaries or English Tamil dictionary. The word 'Hai' is not available and some words used by Americans and even local Englishmen are colloquial. You have to listen speaches in radio, television from educated people and then you can improve your English.

Bacon said 'Reading maketh a full man '. You have to read books written by Shakespear, Charles Dickens, Wilkie Collins and if you like story books, detective stories written by the British Crime Queen Agatha Christie. When you read you learn many vocabulary and style. You should write essays. precis and comprehension. When you write a sentence see that there are no gramatical mistakes. If you practise the above advice, I am sure, you can not only improve your English but also live in any Foreign countries without any problems. Wish you all the best.

**K.W.Selvarajah**

### Win a Glider

Win a Glider with power launcher (indoor and out door use) to enter this competition please




answer this question and send £ 1.00 to **Tamilulagam, 899-901, Finchely Road, Golders green, London NW 11 7PE.**
I enclose a cheque payable to Tamilulagam.

What are the physical forces at work on an air-plane?
You can simply draw a picture and explain. The winner will be announced in the next issue

**The winner f or the flying twisters:-**
**Miss. Kandiah Krishnajothy, Infield, England**

**Q. How flew the first airplane?**
**A. Wright Brother's**
**(Wilbur Wright & Orville Wright)**
**Q. And Which Year?**
**A. History is made at 10.35 am, 17th December 1903.**

## Lesson -1

I am starting with English alphabets. Unlike our mother tongue Tamil, English language has only 26 alphabets. But, the only difference is 'Capital' letters and 'Simple' letters. I give below the capital letters.

**A,B,C,D,E,F,G,H,I,J,K,L,M,N,O,P,Q,R,S,T,U,V,W,X,Y,Z**

When capital letters are written they should not be written as above but when we write they should be written the way I have shown below:



Capital letters should be used at the beginning of the word and for the following:

1.The first letter of the first word when you start a sentence.
2. Names of person, countries, cities, towns, villages, continents, oceans, institutions, companies etc.
3. When you want to emphasise a particular word or for title.

when writing 'simple' letters it is wrong to use shape of letters printed in books or newspapers or type writer. (EG)

**a, f, g, k, q, s, w, x, y, z**

Simple letters should be written in the following manner.



How to improve your hand - writing cont....in next Issue.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Eat for Immunity

Our families and our children's health is the top priority for most of us. There are so many illnesses we need to make sure our children grow up healthy.

How can we help them avoid major illnesses and diseases in later life, such as cancer, strokes, and heart diseases. but do you know how much certain foods can do to protect your health and prevent your family falling prey to such illnesses?



## Foods That Harm Foods That Heal

Each month, we will be focusing on a different illness and tell you what to eat to protect yourself from it. This month we highlight the foods that can help you protect yourself and your family from above mentioned illnesses. We will also give healthy recipes, immunity boosting drinks and useful tips and what vitamins and supplements can do for you. So keep collectiong Eat for Immunity and help protect your family.

J. Ramona, London

| Disease | What to eat | Immunity- boosting properties | Super tip |
|---|---|---|---|
| Breast Cancer | Cabbage, broccoli, beans, soya,oily fish, wheat bran, olive oil | Burns up oestrogen so less is available to feed cancer | Eat more like Japanese women, who have lower rates of breast cancer-plenty of fruit,vegetables, fish and tofu. |
| Cancer (General) | Garlic, soya, vegetable citrus fruit, fish,tea,milk | Known to stop cancer formation | Eat more tomatoes, they contain lycopene which destroys a toxic oxygen molecule that can trigger in cells. |
| Lung Cancer | Carrots,broccoli, kale, sweet potatoes,green tea low-fat milk | Beta- carotene destroys tumour cells | When you quit smoking, eat dark green or orange vegetables daily to prevent lung cancer- you are still high risk for ten years. |
| Skin Cancer | Oily fish, olive oil,fruit and vegetable, flaxseed onions, walnut oil | Contain omega-3 oil which halt melanoma growth | Eat fish at least twise a week. But avoid vegetable oils, e.g. corn oil which is high in omega-6 that can trigger melanoma. |
| Stroke | Carrots, spinach, kale, sweet potatoes pumpkin, oily fish, tea | Beta- carotene, vitamin A and potassium reduce strokes | Drinking Tea, especially anti-oxidant rich green tea, is thought to protect blood vessels form damage. |
| Heart disease | Fish, nuts, grains, Garlic, olive oil, carrots, spinach, mango | Keeps vessels flexible and free of clots | Don't eat meat and dairy foods high in saturated fat or drink excessive alcohol as they can damage arteries and the heart. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பார்ந்த 'தமிழ்உலக' வாசகர்களே!

தமிழ்உலகத்தின் ஒன்பதாவது இதழ்மூலம் உங்களை மீண்டும் ஒருமுறை சந்திப்பதில் மிக்கமகிழ்ச்சி அடைகிறோம். தரணியில் 'தமிழ்உலகம்' ஆணிவேர் பதித்துள்ளது என்பதற்குச் சான்றாக விழுதுகள் போல் விளங்கும் வாசகர்களின் எண்ணங்கள் எமக்கு மேலும் உரமூட் டியுள்ளன.

கடந்த இதழில் உலகம் முழுவதும் வாழும் எதிர்காலத் தமிழ்ச் சிறார்கள் தொடர்புகளுக்கு தமிழ்மொழியை பொதுமொழியாக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தோம்.

அத்துடன் வேற்றுநாட்டு மக்கள் தொடர்புகளுக்கு சர்வதேச தொடர்புமொழி ஆங்கிலம் என்பதால் அடிப்படையில் இருந்து ஆங்கிலம் கற்பித்தல் என்ற பக்கங்களையும் இவ்விதழில் இருந்து தொடர்ச்சியாக வெளியிடவுள்ளோம்.

ஈழத்தமிழர்களின் பொருளாதார உயர்வை உலக அரங்கில் உயர்த்த பாடுபடும் 'தமிழ்உலகம்' பொருளாதார யுத்திகள் சம்பந்தமான தகவல்க் கட்டுரைகள் ஆய்வுகள் போன்ற விடயங்களை வரும் இதழ்களில் கூடிய வரை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளது. ஆகவே இத்துறைகளில் தேர்ச்சி பெற்றவர்கள் உங்கள் ஆக்கங்களை தமிழ்உலகத்தில் பிரசுரிக்க தமிழ்உலகம் உங்களுக்கு வாய்ப்பளிக்கிறது.

இதுவரை காலமும் அறிமுக-இலவச இதழாக வெளிவந்த 'தமிழ்உலகம்' ஓகஸ்ட் மாதத்தில் இருந்து தனக்கொரு பெறுமதியை தாங்கிவரவுள்ளது. பிரித்தானிய நாணயத்தில் 50p பெனிகளுக்கும், மற்றைய உலக நாடுகளில் உள்நாட்டு பெறுமதிக்கேற்ப விலைகளையும் கணித்துள்ளோம். குறிப்பாக இலங்கையில் ரூபா.50/= உம், ஏனைய ஐரோப்பியநாடுகளில் ஒரு யூரோ (1•) ஆகிய விலைகளில் அமையும்.

அனைத்து நாடுகளுக்குமான விலைகள் சஞ்சிகையின் முன்பக் கத்தில் அடுத்த இதழ்களில் இருந்து தொடர்ந்து அச்சிடப்படும்.

உலக அரங்கில் தமிழரை ஒன்றிணைக்கும் தமிழ்உலகத்திற்கு உங்கள் பங்குகள் என்ன? ஒவ்வொரு தமிழரும் சிந்தியுங்கள். பாரிய பொருளாதார திட்டங்கள் மூலம் உலக அரங்கில் எமக்கென ஒரு வலுவான பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும்.

அரசியல் - இராணுவ யுத்திகளை வென்றெக்கும் ஒரே மார்க்கம் இன்று பொருளாதார மேம்பாடேயாகும்.

மீண்டும் ஒரு முறை உங்கள் ஒத்துழைப்புக்கும், ஆர்வத்திற்கும் 'தமிழ்உலகம்' சார்பில் எங்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வணக்கம்

சு. கிருஷ்ணதாசன்,
நிர்வாகப் பொறுப்பாசிரியர்,
இலண்டன்.

---

உலக வாழ் தமிழ் மக்களை 'தமிழ் உலகம்' என்ற சிறப்பான சஞ்சிகை மூலம் ஒன்றிணைத்துள்ளதில் பெருமை அடைகின்றேன். வண்ணங்களுடன் வசீகரிக்கும் தகவல்களுடன் வாசகர்களைக்கவர்ந்துள்ளது 'தமிழ் உலகம்'. மேலும் பல புதிய நிகழ்வுகளையும் தகவல்களையும் சுமந்து தமிழர்கள் மனதில் என்றும் நிலையான இடத்தினைப் பெற்றுக்கொள்ள என்னுடைய வாழ்த்துக்கள் பல......

**'இளைய துளி' சி.க.ரமேஷ்,அப்கட், இலங்கை.**

---

தொடர்ந்து வெற்றிநடை போட்டு வெளிவரும் 'தமிழ் உலகம்' வாசித்து எங்கள் நூலக அங்கத்தவர்கள் அனைவரும் பரவசம் அடைகின்றோம். 'தமிழ் உலகம்'எட்டுத்திக்கும் தமிழை முழங்க வைக்க எங்கள் இளைஞர் கழக மற்றும் நூலக அங்கத்தவர்கள் யாவரும் இனிய வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

**என்.எம்.எம்.ஹனீபா,மீன்பிடி வீதி, ஓட்டமாவடி- 03.**

---

அனைத்துலக தமிழ் உறவுகளை ஒன்றிணைக்கும் பாலமாக 'தமிழ் உலகம்' வளர்ந்து வருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இதில் இடம் பெற்றுவரும் அரசியல், கலை, கலாசார விடயங்கள் அனைத்தும் என்னை மட்டுமல்ல இச்சஞ்சிகையைப் படிக்கும் அனைவரையும் கவரும் வகையில் அமைந்துள்ளன. இச்சஞ்சிகையில் கணினி சம்பந்தமான விடயங்களையும் சேர்த்துக்கொண்டால் இன்னும் சிறப்பாக அமையும். 'தமிழ் உலகம்' மென்மேலும் வளர எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ஆ.நிதாகாரன், 2 ஆம் பிரிவு, மண்டூர், மட்டக்களப்பு.**

---

சென்ற மாத 'தமிழ் உலகம்' கண்டு களிப்புற்றேன். அத்தனை அம்சங்களும் அருமையிலும் அருமை. உங்களின் இந்த சேவை மென்மேலும் தொடர மனதார வாழ்த்துவதுடன், காலத்திற்கேற்ற தரமான ஆக்கங்களை தரும் 'தமிழ் உலகம்' அனைத்து தமிழ் மக்களின் கரங்களில் சேரவேண்டுமென பண்பாகவும் கேட்டுக் கொள்கின்றேன். வாழ்க 'தமிழ் உலகம்' வளர்க உனது பணிகள்.

**முறையூர் முழுநிலா மங்கேஷ் லண்டன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் உலகம்
## இலண்டன்
## அனைத்துலக தமிழ் சஞ்சிகை

அன்புள்ள வாசகர்களே!

புதிய அம்சங்களுடனும் புதுப்பொலிவுடனும் உங்கள் கைகளில் தவழ்ந்து கொண்டிருப்பது 9 ஆவது இதழ். இதனால் இப்பொழுது வாசகர்கள் குதூகலத்துடன் காணப்படுகின்றார்கள். இலவசப் பிரதிகளை இதுவரை பெற்று படித்து மகிழ்ந்தவர் களுக்கு ஒரு மகிழ்ச்சி தரும் அதிர்ச்சித்தகவலை யும், இதுவரை பிரதியொன்றை பெற முடியா மலிருந்த பல்லாயிரம் வாசகர்களுக்கு இனிய செய்தியொன்றையும் இத்துடன் தமிழ் உலகம் - இலண்டன் தருகின்றது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாத இதழ் இலங்கையின் பிரதான பத்திரிகை, சஞ்சிகை விற்பனையாளர்கள் மூலம் நியாயமான ஒரு விலை குறித்து விற்பனை செய்யப்படவுள்ளது. இதன் மூலம் வாசகர்கள் இலகுவில் பெற்றுக்கொண்டு பயனடைய வாய்ப்பு ஏற்படும். சந்தா தொகை கணிசமானளவு பெரிதாக இருக்கின்றது என்றும் தனிப்பிரதிகளாக மாதா மாதம் அனுப்பும் படியும் கேட்டு எழுதிக்கொண்டி ருந்தவர்களின் மனம் குளிரும் செய்தியாக இது இருக்கும்.

எவ்வாறாயினும், சந்தா செலுத்துவதற்கான கடைசி காலக்கெடுவை எதிர்பார்த்து, இலவசப் பிரதிகள் நிறுத்தப்படும் நாளுக்காக காத்திருந்த வாசகர்கள் இப்போது தமது சந்தாக்களை அனுப்ப முடிவு செய்வார்கள் என்று எதிர்பார்க்கின்றோம். இதுவரை காலமும் எமக்கு ஆக்கங்களை அனுப்பி வந்தவர்கள் தொடர்ந்தும் அனுப்பி வையுங்கள்.

நன்றி

ஆசிரியர்.

இலங்கை வாசகர்கள் சந்தாவை அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

**Tamilulagam**
**Meewella Building, 7th Floor,**
**329,Galle Road, Colombo-04**
**Tele : 0094 112 59 1000**
**Fax : 0094 112 59 1003**
**E mail : tugloballanka@sltnet.lk**










## தமிழ்உலகம் London

**வருட சந்தா முற்பதிவுப்பத்திரம்**
**அனைத்துலக தமிழ் சஞ்சிகை**
**மாத இதழ்**

**Annual subscription Application form**
**International Tamil Magazine**
**Monthly Issue**

**ஒரு வருடத்திற்கு £12 பவுண்கள் மட்டுமே**
**For ONE YEAR £12.00 Only**

Name :__________________
Address :__________________

Tel :__________________
Email :__________________

Signature :__________________
Date :____/____/2004

சந்தாக்கட்டணம் காசோலைகளாகவோ அல்லது அஞ்சல் கட்டண மாகவோ அனுப்புவதாயின் TAMILULAGAM என்ற பெயருக்கு அனுப்பி வைக்கவும்.

**Subscription payments** : Cheques and postal orders made payable to :- TAMILULAGAM

**அனுப்பவேண்டிய முகவரி**

TAMILULAGAM
International Tamil Magazine
899-901 Finchley Road
London NW11 7PE
The United Kingdom

**Tel: 0044 20 8455 9001**
**Fax: 0044 20 8731 7870**

E.Mail: tu@globallanka.co.uk

தமிழ்உலகம் வெளியாகும் நாடுகளும் அவற்றுக்கான வருட சந்தா முற்பதிவு கட்டணங்களும்

Annual subscription including postage
FOR 12 ISSUES

| | |
|---|---|
| Australia | $ 30 |
| Canada | $ 25 |
| Denmark | Kr125 |
| France | 20 € |
| India | Rs. 500 |
| Germany | 20 € |
| Italy | 20 € |
| Malaysia | MYR 75 |
| Netherland | 20 € |
| New zealand | 30NZD |
| Norway | Kr140 |
| Singapore | SGD 30 |
| Sri Lanka | Rs. 600 |
| Sweden | Kr 150 |
| Switzerland | SF 25 |
| United Kingdom | £ 12 |
| USA | $ 20 |
| All other country | US$20 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












# The day after To-morrow

சமீபத்தில் வெளியாகியது 'த டே ஆவ்ரர் ருமோரா' என்ற படம். இது டைட்டானிக் படத்தை ஞாபகப்படுத்தினாலும் திகைக்க வைக்கும் காட்சிகளை கிராபிக்ஸ் மூலம் காட்டுவதில் முன்னணி வகிக்கின்றது. கைத்தொழில் நாடுகளின் தொழிற்சாலைகளில் இயங்கும் இயந்திரங்கள் உலகத்தைத் தொடர்ந்து வெப்ப மாக்கி வருகின்றன. இதனால் வடதுருவப்பனி மலைகள் உருகி பனிப்பேரலைகள் அமெரிக்காவுக்குள் புகுந்து சேதம் விளைவிக்கின்றன. அது மட்டுமா? காலநிலையில் மாறுதல் ஏற்பட்டு இயற்கை அனர்த்தங்கள் தொடர்ச்சியாக நிகழ்கின்றன. இந்த நிலையில் காலநிலைப் பேராசிரியர் ஒருவரின் மகனும் அவனுடைய தோழியும் அமெரிக்காவின் வடபுலத்திற்கு செல்கின்றார்கள். பனிப்பேரழிவில் சிக்கும் அவர்களை மீட்க பேராசிரியர் புறப்பட்டுச் செல்கின்றார். அவர் அவர்களை மீட்டுச்சென்றதும் பனிப்பேரலையும் ஓய்கின்றது. அது வரை நடைபெறும் அனர்த்தங்களே கதை.

கிராபிக்ஸ் உதவியோடு பொங்கி வரும் பேரலைகளை உருவாக்கி நகருக்குள் புக வைக்கின்றார்கள். ஆச்சரியப்பட வைக்கும் அளவில் உயர்ந்த அலைகள், அலையோடு வரும் இராட்சதக்கப்பல், அதற்குள் இருந்து வரும் ஓநாய்கள் என காட்சிகளும் அதற்கு ஏற்ற அதிர்வூட்டும் இசையும் பிரமிக்க வைக்கின்றன. படத்தை ஜேர்மனியைச் சேர்ந்த ரொனால்ட்எம்றிட்ஜ் இயக்கியுள்ளார். இவர் ஏற்கனவே 'இன்டிபென்டன்ஸ் டே' என்ற படத்தை இயக்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனாலும் காட்சிகளில் காட்டிய வேகத்தை கதையில் காட்டத்தவறி விட்டது 'த டே ஆவ்ரர் ருமோரா'.

## ஈழவர் டென்மார்க்கில் தயாரிக்கும் 'பூக்கள்' மலரும் தறுவாயில்....!

நம்மவரிடையே ஆவலைத் தூண்டியுள்ள 'பூக்கள்' படத்தின் முக்கிய காட்சிகள் பெரும்பாலும் படமாகி விட்டன. விமானம், மற்றும் உலங்கு வானூர்தி சண்டைகளே இன்னும் எடுக்கப்படவுள்ளன. படத்தொகுப்பு வேலைகள் ஆரம்பமாகி விட்டனவாம்.

## HARRY POTTER

## மனதை மயக்கும் மாயா ஜாலக்கதை



'புத்தக விற்பனையில் சாதனை படைத்த 'ஹரிபொட்டர் பாகம் III' திரைக்கு வந்துள்ளது. சிறு பிள்ளைகளிடையே மட்டுமல்ல பெரியவர்களிடையேயும் பிரபலம் பெற்ற மாயாஜாலக்காட்சிகள் நிறைந்த படம் இது.



கமல்ஹாசன் படம்- 'வசூல் ராஜா எம்.பி.பி.எஸ்'

* ரஜினி சமீபத்தில் பிரபல மருத்துவமனை யொன்றில் பிளாஸ்ரிக் சர்ஜரி யொன்றைச் செய்துள்ளாராம்.

அர்ஜுன்,...
படம்- 'ஜெ...

*கமல் தற்போ...
தில் கமலுட...
* சிம்புவு...
அடுத்து...
றார்.
கர்...
* ...
வரி...
த்ரி...
ம...
அ...
வ...
*
இ...
அ...
ள...
*
ஆர...
'ஐயா...
வருகி...
* சமீ...
அங்கு...
இதில்...
நடிக்கல...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





லைலா
'பசூர்யா'

# இதைக்கேளுங்க.....!

போது நடித்து வரும் 'வசூல்ராஜா எம்.பி.பி.எஸ்' படத்
ன் ஜோடி சேர்பவர் ஸ்நேகா. பிரபுவும் உண்டு.
டன 'குத்து' படத்தில் அறிமுகமான நடிகை ரம்யா
து சுந்தர் சி.யின் 'கிரி' படத்தில் நடித்து வருகின்
. அம்மணியின் பூர்வீகம் கர்நாடகா. முன்னாள்
நாடக முதல்வர் கிருஷ்ணாவின் பேத்தி இவர்.
தமிழில் மட்டுமல்ல தெலுங்கிலும் கதாநாயகிகள்
ரிசையில் இப்போது முன்னணியில் இருப்பவர்
ரிஷாதான். 'சாமி' கொடுத்த வெற்றியினால் அம்
ணி காட்டில் அடை மழை. தமிழில் 'ஜீ' இல்
அஜித்துடனும் 'திருப்பாச்சி'யில் விஜய்யுடனும் நடித்து
ருகின்றார்.

ரஜினி நடிக்கும் 'ஜக்குபாய்'படத்தின் கதாநாயகி
டத்தைப்பெற பல நடிகைகள் முண்டியடித்த போதும்
ந்த அதிஷ்டம் ஜோதிகாவுக்குத்தான் கிடைத்துள்
தாம்.

நடிகர் சரத்குமார் மீண்டும் ஒரு ரவுண்ட் வர
ம்பித்துள்ளார். பாலச்சந்தரின் கவிதாலயாவின்
ா' படத்தில் இரட்டை வேடத்திலும் நடித்து
கின்றார்.

பத்தில் யாழ் வந்துசென்ற நடிகர் மணிவண்ணன்
நடந்த ஒரு கதையைப்படமாக்க இருக்கின்றாராம்.
அவரது ஆஸ்தான நண்பர் + நடிகர் சத்தியராஜ்
லாம் என்று கூறப்படுகின்றது.



*விஜயகாந்தின் கஜேந்திரா
சமாராக விற்பனையாகியுள்ளது

# சினிமா உலகம் 1939 முதல் 1960 வரை

(தொடர்ச்சி)



**சகுந்தலை:** எம்.எஸ் சுப்புலட்சுமி அம்மா அவரது 15-16 வயதில் நடித்த படம். அக்காலத்தில் தமிழ்ப்படங்களை இயக்குவதற்கு தமிழர் எவரும் பயிற்சி பெறாத காரணத்தால் எலிஸ் ஆர். டங்கன் எனும் ஐரோப்பியரே சில தமிழ்ப்படங்களை இயக்கினார். இப்படமும் அவர் தான் இயக்கியது. இவருக்குப்பின் தான் கே.சுப்பிரமணியம் இயக்குநராக சில தமிழ்ப்படங்களை இயக்கினார். இப்படத்தில் துஷ்யந்தனாக ஜி.என். பாலசுப்பிரமணியம் நடித்தார். சிறந்த பாடகருமான இவர் எம்.எஸ்.எஸ்ஸுடன் இணைந்து இப்படத்தில் இனிமையான பாடல்கள் பாடியுள்ளார். சகுந்தலையில் முனிவர் சாபம் கொடுப்பது, சகுந்தலையின் மோதிரம் ஆற்றில் விழுவது எல்லாம் தத்ரூபமாக எடுக்கப்பட்டது. பாத்திரங்கள் தங்கள் பகுதிகளை இயற்கையாக நடித்திருந்தனர். இப்படத்தில் "பிரேமையில் யாவும் மறந்தோமே" என்ற பாடல் இன்றும் நினைவில் நிறைந்த பாடலாக இருக்கின்றது.

இதில் என்.எஸ். கிருஷ்ணன், ரி.எஸ்.துரைராஜ் மீன் பிடிப்பவர்களாக நடித்து நகைச்சுவையூட்டுகின்றார்கள். அதில் மோதிரம் விழுங்கிய மீனைப்பிடிப்பதும் "ஆளுக்குப்பாதியாக அறுத்தெடுத்துக்குவோமடா" என்பதும் துரைராஜ் "அடிப்பியே உன் மவனே சிங்கண்டா" என்று கூறுவதும் எல்லோரையும் வயிறு குலுங்க சிரிக்க வைக்கும் காட்சிகளாகும். இப்படம் ஒரு வருடத்துக்கு மேல் படப்பிடிப்பு நடந்ததால் நடிப்பு, படம் பிடித்த இடங்கள், கதை, வசனம் எல்லாம் பலமுறை ஒத்திகை பார்த்து எடுக்கப்பட்டிருந்ததால் விசேடமாக சகுந்தலை, துஷ்யந்தனை நேரிலேயே பார்ப்பது போன்று ரசிகர் மனங்களில் பதிய வைத்தது.

**வனமோகினி:** இப்படம் 1944-1945 களில் பிரசித்தி அடைந்தது. இப்படத்தில் எம்.கே.ராதா, இலங்கைக்குயில் தவமணிதேவி, கோவில் பூசாரியாக குளத்துமணி எஸ்.எஸ். கொக்கோ நடித்தார்கள். ஒரு கோவில் பூசாரி இளம் பெண்களை பலி கொடுக்க அழைத்து வந்து முதல் இரவில் அவர்களைக்கெடுத்து விட்டு அடுத்த நாள் காளி தேவிக்கு பலியிடுவதும், கதாநாயகன் (எம்.கே.ராதா) தன் காதலியை (தவமணிதேவியை) இதிலிருந்து மீட்டு மக்களுக்கு உண்மையை வெளிப்படுத்தும் கதை. பூசாரி இவர்களுக்குப் பொறுப்பாக இருந்த ஒரு வயோதிபப்பெண்ணிடம் "இறைவனின் அருளைப்போதித்தாயா?" என்று கேட்பதும், கதாநாயகியைப்பலி கொடுக்கும் போது எஸ்.எஸ். கொக்கோ சிலைக்குப்பின்னால் புகுந்து பூசாரி ஆளின் முதுகில் வீற்றிருப்பதும், பூசாரியின் ஆள் "பலிகொடுங்கள்" என்பதும் உடனே கொக்கோ மற்றவனை அமர்த்தி பிடித்துக்கொண்டு "பலி கொடுக்க வேண் டாம்" என்பதும் இதன் பின் சிலை ஆடத்தொடங்குவதும் கண்கொள்ளாக்காட்சிகள். கொக்கோ வெற்றி காணும்போது கூட அதிர கை தட்டல். கதையின் முடிவில் பூசாரியின் தலையை ஒரு யானை நசிக்கும் காட்சி இன்னும் கண்முன்னே நிற்கின்றது. இப்படம் பார்க்கும்போது எனக்கு 8 வயதிருக்கும். ஆனால் கிராமப்பெண்ணாக அரைகுறை உடுப்புடன் வரும் தவமணிதேவியைப்பார்க்க வேண்டும் என்பதற்காகவே இளைஞர்கள் பலமுறை இப்படத்தைப்பார்த்தது ஞாபகத்துக்கு வருகின்றது. எனது ஊரான கல்முனையில் இப்படம் இரண்டாவது மூன்றாவது முறையாக வந்ததால் சில வாலிபர்கள் நாடகம் பாக்கும் நினைவில் கலரி முன் வரிசையில் இருந்து கொண்டு தலையைப்பல கோணங்களுக்கும் திருப்பி தவமணி தேவியைப்பார்த்தனர். இதனைப்பார்த்து சில பெண்கள் முணுமுணுத்ததை என்னால் கேட்க முடிந்தது. இக்கால கவர்ச்சி உடையில் அக்காலத்தில் (1943) நாட்டியம் ஆடினால் எப்படி இருக்கும் என்பதை ரசிகர்களின் கற்பனைக்கு விட்டு விடுகின்றேன்.

**வனராஜடார்சான்:** ஆரம்ப காலத்தில் ஹிந்தியிலிருந்து தமிழுக்கு டப் செய்யப்பட்ட முதல் படம். இதில் ஹிந்தி நடிகர் ஜோன் கவாஸ் நடித்துள்ளார். இவர் நல்ல தேகக்கட்டு கொண்டதுடன் இந்தியன் போலோ என்ற பட்டமும் பெற்றவர். புரூஸ்லி போன்ற உடற்கட்டமைந்தவர். கதாநாயகியாக ஹிந்தி நடிகை மிஸ். நாடியா நடித்தார். இக்காலத்து விஜயசாந்தியை விட இயற்கையான பலத்துடன் நடிப்பவர். ஏனெனில் அக்காலத்தில் இக்காலம் போல் படம் பிடிக்கும் நுணுக்கங்கள் , தந்திரங்கள் எதுவும் இல்லை. டார்சான் கதையென்பதால் முதியோரும் , இளைஞர்களும் சுவாரஸ்யத்துடன் பார்த்த படம் வனராஜடார்சான். மரவிழுதுகளைப்பிடித்து மாறி மாறி வரும் காட்சி அற்புதமாக இருந்தது. அத்துடன் வன விலங்குகள் கூக்குரலிட்டு அழைக்கும் சத்தம், சிங்கம், கரடி முதலிய மிருகங்கள் ஒன்று கூடுவதும் கதாநாயகன் அவை மத்தியில் வருவதும் கண்கொள்ளாக்காட்சி. மொழி எதுவும் தெரியாமல் காட்டுக்குள்ளேயே குழந்தைப்பருவம் முதல் வளர்ந்த டார்சான் மிருகங்களையே தன் சகாக்களாக மதிப்பதும் மிருகங்கள் அவருக்கு பணி விடை செய்வதும் மிகவும் சிரமப்பட்டு படம் பிடித்த காட்சிகளாயிருக்கும். கதாநாயகி டார்சானைச்சந்தித்ததும் புதுமையாக அவளைப்பார்ப்பதும் முதல் முதல் கண்ட மனிதப்பிறவி என்ற விடயத்தை தத்ரூபமாக நகைச்சுவையுடன் படம் பிடித்துள்ளனர். பிற்காலத்தில் தேவர் பிலிம்ஸ் மூலம் மிருகங்களைக்கொண்டு படம் எடுக்கப்பட்டாலும் ஒரு முக்கிய மிருகத்தோடு (நாய் அல்லது குதிரை அல்லது குரங்கு அல்லது யானை) படக்கதை அமைந்து விடும். ஆனால் அக்காலப்படமானாலும் காட்டில் வாழும் பல மிருகங்களை காட்டியது இனிமேல் கார்ட்டூன் மூலம் இவ்வித படங்களை பார்க்க முடியுமே தவிர சினிமாப் படமாக பார்க்க முடியாதே என்ற கவலையை ஏற்படுத்துகின்றது. (தொடரும்)

**கே.டபிள்யூ. செல்வராஜா, மோடன், இலண்டன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"மலர் பழையதையே சிந்தித்துக் கொண்டிருந்தால் அபிநயாவைப்பார்ப்பது யார்?" வருத்தத்துடன் கேட்டாள் தர்சிகா.

"நான் பார்த்துக்கொண்டிருப்பதும் விழாவெடுத்துக்கொண்டிருப்பதும் ஒரு மனவளர்ச்சியுள்ள பெண்ணுக்கென்றால் நான் ஆறுதலடைந்திருப்பேன். என் கடந்தகாலத்துயரையெல்லாம் மூட்டை கட்டி ஒதுக்குப்புறமாக வைத்திருப்பேன். ஆனால் அவளே என் கடந்த கால கவலைகளை நினைக்கக்காரணமாக என்முன் உலாவி வரும்போது என்னால் எப்படி கவலைகளை மறந்து வாழமுடியும்" மலர்விழி துயரத்தின் விளிம்பில் நின்றாள்.

தர்சிகாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவள் கவலையோடு எதுவும் சொல்ல முடியாது அவ்விடத்தை விட்டு அகன்றாள்.

அபிநயா அழகான பாவாடை சட்டையோடு தலையில் முக்காடு போட்டபடி வெற்றிலைச்சுருளை இரு கைகளிலும் பிடித்தபடி தேவதை போல் ஆடி, அசைந்து தோய வார்ப்பதற்காக உறவினர்கள் அழைத்து வரும்போது மலர்விழியின் மனம் வேதனைப்பட்டது. மலர்விழி விதவை என்பதால் முன்னின்று அந்தக்காரியங்களைச் செய்ய விரும்பாது ஒதுங்கி நின்றாள்.

"மலர் இஞ்சை வா பிள்ளை ஏன் ஒதுங்கி நிற்கின்றாய்? நீ விதவை தான் எண்டாலும் உன்ரை மகளின்ரை அழகைப்பார்ப்பதில்லையா? மலர்விழியின் மாமியார் ஒருத்தி அவளை அழைத்தாள்.

"மாமி நான் இங்கையிருந்து பார்த்துக்கொண்டு தான் இருக்கின்றேன். அவளுக்கு நீங்கள் எல்லாம் இருக்கிறியள் தானே" மலர் சொன்னாள். கூடவே, 'அபிநயா மன வளர்ச்சி குறைந்த பிள்ளைதான் என்றாலும் அவளது தந்தை பார்த்தால் சந்தோஷப்படுவாரே' என்றும் நினைத்து ஆதங்கப்பட்டாள்.

"பதின்மூன்று வருடங்கள் யார் துணையுமில்லாமல் வளர்த்து விட்டேன். ஆனாலும் நான் பெற்ற மகளே எனக்குப்பாரமாக அமையப்போகிறாளே" அவளது முகத்தில் ஏக்கக்குறி.

"மானுடம் என்பது முடிவிலியாய் நீளும் ஒன்று. அதற்குள் என்மகள் போன்ற மூளை வளர்ச்சி குறைந்த பிள்ளைகள் ஆயிரத்துக்கோ அல்லது பத்தாயிரத்துக்கு ஒன்றாவது பிறக்காமல் இல்லை. ஆனால், எனக்கு அடியின் மேல் அடியாக இப்படிப்பட்ட பிள்ளை கிடைத்ததுதான் என் கவலை. 'பட்ட காலிலே படும். கெட்ட குடியே கெடும்' என்று நம் முன்னோர்கள் சொன்னது உண்மைதான்" அவள் தனக்குள் நொந்து கொள்கின்றாள்.

"மனிதனது வாழ்வுரிமை எத்தனையோ வழிகளில் பறிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், இப்படியுமா?" அவளது மனம் கொந்தளிக்கின்றது.

அபிநயாவை அழைத்துக்கொண்டு கிணற்றடிக்கு வந்துவிட்டார்கள். கிணற்றுக்கு அருகிலுள்ள மண் நிலத்தில் குந்தியிருக்க வைத்துத் தலையில் நீரூற்றுவதற்குரிய ஏற்பாடுகளைச்செய்து கொண்டிருக்கின்றார்கள் அவர்கள்.

2

"பொறுங்கோ என்ரை பிள்ளை உட்காருவதற்கு பலகைக்கட்டை எடுத்துக் கொண்டு வாறன்" என்று சொன்ன மலர்விழி குசினிக்குள் இருந்த பலகையை எடுத்து வந்து அதில் அபிநயாவை உட்கார வைத்தாள்.

அப்பொழுது மலர்விழிக்கு இருபத்தொரு வருடங்களுக்கு முன் தனக்கென இப்படியொரு பூப்புனித நீராட்டுவிழா நடந்த ஞாபகம் வருகின்றது. தன் தந்தையாரால் அதற்கென அமைக்கப்பட்ட அலங்காரப்பூந்தொட்டியின் ஞாபகமும் கூடவே வருகின்றது.

"தொட்டிக்குள் தன்னை உட்கார வைத்து உறவினர்கள் பலர் தன் தலையில் நீரூற்றியதையும், ஒரே மாதிரியான உடையணிந்த ஏழு பெண் பிள்ளைகள் ஏழு குடங்களில் கொண்டு வந்த நீரை தன் தலையில் ஊற்றும் போது அதனை வீடியோ எடுத்ததையும் நினைக்கும் போது இவையெல்லாம் என் மகளுக்கு எட்டாக்கனியாகி விட்டதே" என்று கலங்குகின்றாள்.

"செல்வம் செல்வோம் என்று சொல்லிக்கொண்டு வரும் என்பார்கள். அது போலத்தான் எமது செல்வமும் சொல்லிக்கொள்ளாமல் எம்மை விட்டுச்சென்று விட்டது. நான் பணக்காரன் மகளாக இருந்த வயதில் என் மகள் ஏழையின் மகளாக இருக்கிறாளே தர்சிகா" வேதனையோடு மலர்விழி சொன்னபோது தர்சிகா குறுக்கிட்டாள்.

"ஏழ்மை என்ற தரித்திரமும் ஒருவரிடம் வரும்போது தரித்திரோம் என்று சொல்லிக்கொண்டு வருமாம். அபிநயாவும் ஏழ்மையிலிருந்து விடுதலை பெறத்தான் போகின்றாள். செல்வந்தப்பெண்ணாகப்போகிறாள். அது நிச்சயம்" தர்சிகா சொன்ன போது மலர்விழிக்குச் சற்றுத்திருப்தியாக இருந்தது.

"பார் தர்சிகா என் மகளின் தலையில் பால் வைப்பவர்கள் உறவினர்கள் தானா, ஒரு சில உறவினர்களைத் தவிர மற்றவர்கள் எல்லாம் அயலவர்களும்,நண்பர்களும் தானே" மலர்விழி வருத்தப்பட்டாள்.

"மலர் அதெல்லாம் அந்தக் காலம். இந்தக்காலத்தில் எங்கடை இலங்கைத்தமிழர்கள் எத்தனை நாடுகளில் பரந்து வாழ்கின்றார்கள். அங்கெல்லாம் பூப்படையும் பெண்களுக்கு விழா எடுக்கும்போது இந்த உறவினர் சமாச்சாரம் பற்றி நினைக்க முடியுமா? அங்கெல்லாம் அயலவர்களும் நண்பர்களும் தான் கை கொடுப்பதை நீ அறியவில்லையா? மலர் தூரத்துத் தண்ணீர் ஆபத்துக்குதவாது. அயல் என்பது ஆயிரம் பொன் பெறும் என்ற நம் பழமொழிகள் சொல்வது என்ன? அன்போடு அயலவர்களும், நண்பர்களும் இந்த விழாவை நடத்தினால் அதுவே போதுமானவை மலர். அதை யிட்டு வருந்தாதே" தர்சிகா எடுத்துக் கூறினாள்.

தர்சிகா கொழும்பிலிருந்து கொண்டு வந்த கமெராவில் தர்சிகாவின் கணவன் தனுஷ் பூப்பு விழா வெடுக்கும் அபிநயாவைப் பல கோணங்களில் போட்டோ எடுத்துக் கொண்டிருந்தான்.

தாய்மை அடையும்போது ஒவ்வொரு பெண்ணுக்கும் ஒவ்வொரு கனவுண்டு. அதுவும் முதற் குழந்தையென்றால் சொல்லவும் வேண்டுமா? தனக்குப்பிறக்கப்போகும் குழந்தையை எப்படி வளர்க்கலாம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தப்பள்ளியில் சேர்க்கலாம். என்னென்ன படிப்புப்படிக்க வைக்கலாம்? இப்படிக்கனவுகள் விரிந்து கொண்டே போகும்.

ஆனால், தனக்குப்பிறந்த குழந்தை மற்றக்குழந்தைகளைப்போலில்லாமல் ஏன் இப்படி? என்று வேதனையடைந்தாள். மாறி மாறி மருத்துவர்களிடம் ஓடிக் குழந்தைக்கு மன வளர்ச்சிக் குறை என்று கண்டு கொண்ட பின் கனவுகள் அனைத்தும் அப்படியே சூனியமாகி இடிந்து போயின. இனி வாழ்வில் என்ன இருக்கின்றது? என்று விரக்தியின் விளிம்பில் நின்று ஏங்கித் தவிக்கும் மலர்விழியைப் போன்ற பெற்றோர்கள் எத்தனை பேரோ?

தர்சிகாவின் மனதுக்குள் மலர்விழியைப்பார்க்கும்போது பரிதாபமாகவும் அனுதாபமாகவும் இருந்தது.

"நான் கொழும்பிலிருந்தாலும் மலரையும், மகளையும் கண்காணித்துக்கொள்வது என் தார்மீகக் கடமை" அவளது மனத்தில் உறுதி முத்திரை குத்தப்பட்டிருந்தது.

"தஞ்சாவூரு மண்ணு எடுத்துத் தாமிர பரணித் தண்ணிய விட்டுச் சேர்த்துச் சேர்த்துச் செஞ்சதிந்த பொம்மை. இது பொம்மையில்லை பொம்மையில்லை உண்மை" பாட்டுப்பெட்டியில் பாடும் நான்காவது பாடலைக் கேட்டதும் மலர்விழி தன் மகளைத்திரும்பிப்பார்க்கின்றாள்.

காஞ்சிபுரம் பட்டெடுத்து நகைகள் எல்லாம் போட்டு அலங்கரித்து விட்ட பொம்மையாகப்பாட்டுப் பெட்டி பாடுவது போல அவள் பொம்மையாக நிற்பதைப்பார்க்க அவளது மனதில் மகிழ்ச்சியாக இருந்தாலும் "இந்த அழகுச்சிலையை ரசிக்க எனது கணவன் இல்லையே" என்று எண்ணிக்கலங்கினாள்.

"அபிநயாவைப்பார் மலர் பார்ப்பதற்கு ராஜகுமாரி போலல்லவா இருக்கின்றாள். தர்சிகா சொல்லும் போது மலர்விழிக்குப்பெருமையாகத் தான் இருந்தது.

"இராஜகுமாரியா அல்லது மகாலக்ஷ்மியா என்பது இப்ப முக்கியமல்ல. என் மகள் வருங்காலத்தில் என்ன செய்யப்போகின்றாள் என்பது தான் என் கவலை" மலர்விழியின் வருத்தம் நியாயமானதாக தர்சிகாவுக்குப்பட்டது.

"பைத்தியம் இந்தச்சந்தோசமான நேரத்தில் கூட உனக்கு இதே பேச்சுத்தான். இன்றைக்காவது உன் பேச்சை மூட்டை கட்டி வைக்க மாட்டியா?" சற்றுக்கடுமையான குரலில் சொன்னாள் தர்சிகா.

"என்னதான் என் மனதுக்கு ஆறுதல் கூறினாலும் அது கேட்க மாட்டேன் என்கிறதே தர்சிகா" என்று சொல்ல வந்தவளைப்பாதியில் நிறுத்தி,

"மலர் உன் மகளை நிகழ்காலம் பூஜ்ஜியத்தின் புதல்வியென்று அறிமுகப்படுத்தியிருக்கலாம். ஆனால் வருங் காலமோ அவளை ஒரு ராஜ்ஜியத்தின் ராணியாகக் கண்ணியப்படுத்துவதை இந்த உலகம் காணத்தான் போகின்றது. அதுவும் என்னால் தான் ஆகப்போகின்றது. நீ கவலையை விடு" என்று சொன்னவள் அவளைத்தட்டிக் கொடுக்கின்றாள்.

பூப்புனித நீராட்டு விழா நடக்கும் ஒரு பெண்ணுக்கு தேவையான அத்தனை அலங்காரங்களுடனும் அன்னமென நடந்து வந்து பந்தலுக்குள் போடப்பட்ட மணவறைக் கதிரையில் அமர்ந்த போது ,

பந்தலுக்குள் இருந்தவர்களின் அத்தனை கண்களும் அவளை வைத்த கண்வாங்காது பார்த்துக் கொண்டிருந்தன. அவளைச்சுற்றிப் பூந்தட்டேந்தி வந்த ஏழு சிறுமிகளும், தீபம் ஏந்தியபடி வந்த ஏழு பெண் பிள்ளைகளும் ஆரத்தி எடுக்கப்போகும் பெண்களும் குழுமி இருந்தனர்.

இதைப்பார்த்த மலர்விழியின் முகம் மகிழ்ச்சியினால் மலர்ந்திருந்தது. தர்சிகாவின் கணவனும் பந்தலுக்குள் கமெராவோடு நின்று போட்டோ எடுத்த வண்ணம் நின்றான்.

திடீரென பூகம்பம் வெடித்தது போலிருந்தது. அப்படியொரு பெரிய சத்தம். அந்தப்பிரதேசத்தை அதிர வைத்தது. ஆட்லறி ஷெல்லின் சத்தம் அப்படித்தானிருக்கும் என்று விழாவுக்கு வந்தவர்கள் பேசிக்கொண்டார்கள். திடீரென அங்கு ஒரு பரபரப்பு. ஒரு ஷெல்லின் சத்தம் கேட்டபின் தொடர்ந்தும் ஷெல் விழும் சத்தங்கள் கேட்டுக்கொண்டிருந்தன. விழாவுக்கு வந்தவர்கள் ஒருவரைப்பார்த்து ஒருவர் தத்தம் வீடுகளுக்கு ஓடத் தொடங்கினர். ஓடிக்கொண்டேயிருந்தனர்.

இறுதியாகத் தர்சிகாவும் அவளது கணவரும் மலர்விழியும் மகளுமே பந்தலுக்குள் நின்றனர்.

"வரவரக்கிட்டக் கேட்குதோ" தர்சிகா கேட்டாள்.

"ஓமோம்" மலர்விழி பயந்து நடுங்கினாள். "என்ன மலர் பயந்திட்டியே. ஆறிலும் சாவு.நூறிலும் சாவு. ஏதோ நடக்கிறது நடக்கும் தானே. இப்பொழுது என்ன செய்ய வேணும் என்று யோசிக்கிறதே ஒழியப்பயப்பிடக் கூடாது" என்று சொன்னாள் தர்சிகா.

தெருவை எட்டிப்பார்த்தாள் தெருவில் வழக்கத்துக்கு மாறாக அதிகமாக சன நடமாட்டம் காணப்பட்டது. சிலர் மூட்டை முடிச்சுக்களுடன் ஓட்டமும் நடையுமாக போய்க்கொண்டிருந்தனர்.

"என்ன நடந்தது? எங்கே போகிறீர்கள்?" என்று கேட்பதற்காக தர்சிகா தெருவுக்கு வந்து விட்டாள்.

அப்போது தான் அவள் நின்ற இடத்திலிருந்து இருநூறு யார் தூரத்தில் ஷெல் ஒன்று விழுந்து பாரிய சத்தத்துடன் வெடித்தது.

-தொடரும்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடி எறும்பு



ஒரு அடர்ந்த காட்டின் அண்மையில் ஒரு சிறிய காடு ஒன்று இருந்தது அது ஒரு பற்றைக் காடு. பார்ப்பதற்கு அழகாகவே இருந்தது.

அக் காட்டில் வாழும் சிறிய விலங்குகள் எழுப்பும் ஓசைகள் கேட்பதற்கு இனிமையாகவே இருந்தன. அந்த ஓசைகள் பெரும்பாலும் அங்கு வாழும் சிறு விலங்குகள் எழுப்பும் ஓசைகள் கேட்பதற்கு இனிமையாகவே இருந்தன. அந்த ஓசைகள் பெரும்பாலும் அங்கு வாழும் பறவைகளின் ஓசைகளே. அவற்றின் குஞ்சுகள் கீச்சு....... கீச்சு..... எனப்பாடும். இப்படியாக, ஒரு சங்கீத மேடையாகவே அக்காடு காணப்பட்டது.

அங்கு வாழும் உயிரினங்களில் பறவைகள் உல்லாசமாகவும் சந்தோசமாகவும் பறந்து விளையாடின. இவை மட்டுமல்ல ஏனைய உயிரினங்களும் சிறிய மிருகங்களும் உல்லாசமாக உலாவி வந்தன. மொத்தத்தில் அக்காடு சந்தோஷ வெள்ளத்தில் நீந்திய வண்ணம் இருந்தது.

ஒரு நாள் ஒரு தனியன் யானை அக்காட்டினுள் நுழைந்து அட்டகாசம் செய்ய ஆரம்பித்தது. பெரிய காட்டிலுள்ள தனது நண்பர்களை விட்டுப்பிரிந்து தனியனாக வந்து மாட்டிக் கொண்டது. அதனால் அது பொறுமை இழந்து காணப்பட்டது.

அந்த கோபத்தை வைத்துக் கொண்டே அது தனது வேலையை ஆரம்பித்தது. அதனால் அங்கு அமைதியாக வாழ்ந்த ஏனைய உயிரினங்களின் சந்தோஷம் தண்ணீரில் தள்ளாடும் ஓடம்போல ஆகி விட்டது.

அவ்யானை அங்கு இருக்கும் மரங்களின் கிளைகளை முறித்தது. அம்மரக்கிளைகளில் கூடு கட்டி வாழ்ந்த குருவிகள் அழிந்து கொண்டே போயின. அங்கு வாழும் உயிரினங்கள் பலவும் நாளுக்கு நாள் அழிந்த வண்ணமே இருந்தன. சிறு பிராணிகளை அது தும்பிக்கையினால் அடித்துக்கொன்றது. நாள் செல்லச்செல்ல யானையின் கொடுமை தாங்க முடியாததாகி விட்டது. அப்போது தான் அனைத்த விலங்குகளும் பறவைகளும் ஒன்று கூடி யானையை எப்படி விரட்டுவது என்று ஒரு நாள் ஆலோசித்தன.

ஒரு நாள் நீண்ட நேரம் கூட்டம் நடைபெற்றது. இந்த மிகப்பலம் பொருந்திய யானையை மிகச்சிறிய பிராணிகளாகிய நாம் எப்படி விரட்டுவது என்று அங்கு கூடியிருந்த எல்லாப்பிராணிகளும் வெவ்வேறு உபாயங்களை வெளியிட்டன. ஆயினும் இறுதியில் எவராலும் முடியாது என்ற நிலை வந்தது. அது வரை மௌனமாக இருந்த எறும்பு தான் எழுந்தது. உங்கள் எல்லோரிலும் பார்க்க நானும் என் சகோதரர்களுமே அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளோம்.

மரக்கிளையில் முட்டையிட்டு பொரித்த குஞ்சுகளை யானை அழித்து விடுகின்றது. யானையின் கால்களில் அகப்பட்டு எமது ஆயிரக்கணக்கான தோழர்கள் அழிந்துள்ளனர். நாம் கடிப்பது யானைக்கு உறைப்பதும் இல்லை. இவ்யானையை விரட்டுவதற்கு எனக்கு முடியும். என்னிடம் ஒரு புது யோசனை உள்ளது. அதன்படியே நான் செய்து கொள்வேன் என்றது. உடனே ஏனைய விலங்குகள் ஆச்சரியமடைந்தன. எங்களால் முடியாத ஒரு வேலையை இந்த சிறிய எறும்பினால் எப்படி செய்ய முடியும்? என கேள்வி எழுப்பின.

ஓரிரு நாட்கள் அப்படியே கடந்தன. அந்த யானை அப்பகுதியால் வந்தது. வந்து மரத்துடன் தன் உடலை உரஞ்சும் தருணம் பார்த்து அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எறும்பு அவ் யானையின் மீது தொற்றிக்கொண்டது. அது மெதுவாக ஏறி செவியினுள்ளே சென்று விட்டது. சென்ற எறும்பு கடிக்க ஆரம்பித்தது. யானைக்கு கடி வலி தாங்கமுடியவில்லை. கடி வலி அதிகரிக்க யானை அங்கும் இங்கும் வெறிபிடித்து ஓடத் தொடங்கியது. கடி தாங்கமுடியாமல் ஒவ்வொரு மரத்தையும் அடித்தது. கிளைகளை முறித்தது. விலங்குகளை விரட்டியது. தும்பிக்கையை மரங்களுடன் மோதியது. இப்படியாக அடித்து அடித்து அதன் உடம்பிலும் முகத்திலும் காயங்கள் ஏற்பட்டன. இரத்தம் வடிந்தது. அந்த யானை சுழன்று சுழன்று ஓடியது. எறும்போ விடாமல் கடித்த வண்ணம் இருந்தது. வலி தாங்க முடியாத யானை ஒரே ஓட்டமாக வாலைக் கிளப்பிப்பிடித்த படி ஓடத்தொடங்கியது. ஓடி ஓடி அக்காட்டை விட்டே ஓடி விட்டது. மற்ற உயிரினங்களினால் இதனை நம்பவே முடியவில்லை.

அதன்பின் இங்கு இருக்கும் பிராணிகள் தாங்கள் முன்பு இருந்ததைப்போல சந்தோஷமாக கூத்தாடி குதூகலித்து வாழத்தொடங்கின. இந்தச்சிறிய எறும்பு இந்தப்பெரிய யானையை விரட்டியுள்ளது பற்றி வியப்படைந்தன. தம் பலத்தை தாமே அறியாத விலங்குகள் அடக்கு முறைகளால் அழிந்து விடுகின்றன என்பதை உணர்ந்தன. கூட்டம் கூடி எறும்புகளுக்கு 'கடி எறும்பு' என்று பெயரிட்டு மகிழ்ந்தன.

பூரணி

# தமிழ் உலகம் மழலைகள் மன்றம்



பெயர் : செல்வன் பிறேம்குமார் துளசி வாணன்
முகவரி : வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு
வயது : நான்கு
பொழுது போக்கு : கதைப்படங்கள் பார்த்தல், விளையாடுதல்



பெயர் : அருஷன் பாலேந்திரா
முகவரி : B4 ,2/4, சொய்சாபுர, மொறட்டுவ
வயது : 11
வகுப்பு : தரம் - 6
பாடசாலை : கொ/ இந்துக்கல்லூரி, பம்பலப்பிட்டி
பொழுது போக்கு : சிறுவர் கதைகள், வாசித்தல், கார்ட்டூன் பார்த்தல்

தமிழ்உலகம் மழலைகள் மன்றத்தில் அங்கத்துவர்களாக சேர்வதன் மூலம் சிறார்கள் பல நன்மைகளை அனுபவிக்கலாம். அங்கத்தவர்களாக இருக்கும் சிறார்கள் எழுதி அனுப்பும் ஆக்கங்கள் மட்டுமே இந்தப் பக்கத்தில் பிரசுரிக்கப்படும்.

அது மட்டுமல்லாது அடிக்கடி அங்கத்தவ சிறுவர்களுக் கிடையில் பல விதமான போட்டிகளை நடாத்துவதன் மூலம் பரிசுகளை வழங்கவும் திட்டமிட்டுள்ளோம்.

எனவே விரையுங்கள் செல்வங்களே!

தமிழ்உலகம் மழலைகள் மன்றத்தில் அங்கத்துவர்களாகச்சேர நீங்கள் செய்ய வேண்டியது இதுதான் .

உங்கள் பெயர், முழுமையான விலாசம், தொலைபேசி இலக்கம் மற்றும் உங்கள் பொழுது போக்குகள் எல்லாவற்றை யும் எழுதி அண்மையில் எடுத்த உங்கள் புகைப் படத்துடன் அனுப்பிவையுங்கள் உலகிலுள்ள சிறுவர்கள் எல்லோரையும் உணர்வு ரீதியாக ஒன்றிணைக்கும் திட்டம்

தமிழ்உலகம் மழலைகள் மன்றம்.

முழுப்பெயர்.......................................................

வயது :.......................................................

முகவரி:.......................................................

.......................................................

தொலைபேசி :.......................................................

**விடைகள், நாய், தேங்காய்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொன்றை வேந்தன்

26) சந்ததிக்கு அழகு வந்தி செய்யாமை.
தன் குடும்பம் பெருகுவதற்கு அழகாவது, தன் மனைவியை மலடி என்று பெயர் எடுக்க வைக்காமல் அவளோடு கூடி வாழ்தலாம். (வந்தி - மலடி)

27) சான்றோன் என்கை ஈன்றோற்கு அழகு
தன் மக்களை அறிஞர்கள் என்று பிறர் சொல்லக்கேட்பது, பெற்ற தாய்க்கு அழகாம்.

28) சிவத்தைப் பேணின் தவத்திற்கு அழகு
ஒருவன் பரமசிவனை வழிபட்டால் அதுவே அவன் செய்யும் தவத்திற்கு அழகாகும்.

29) சீரைத்தேடின் ஏரைத்தேடு
நலத்தை உனக்கு தேடுவாய் ஆனால் உழுது பயிரிடும் தொழிலை மேற்கொள்ளு

30) சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல்
உறவினர்க்கு அழகாவது அவர்களுடன் கலந்திருந்து வாழ்தலாம்.

தொடரும்

# சில நாடுகளும் அவற்றின் தலைநகரங்களும்

| | | | |
|---|---|---|---|
| 1) | நேபாளம் | - | காத்மண்டு |
| 2) | தென்கொரியா | - | சயோல் |
| 3) | பிலிப்பைன்ஸ் | - | மணிலா |
| 4) | ஓமான் | - | மஸ்கற் |
| 5) | பூட்டான் | - | திம்பு |
| 6) | சீனா | - | பீஜிங் |
| 7) | மலேசியா | - | கோலாலம்பூர் |
| 8) | கிறீஸ் | - | எதேன்ஸ் |
| 9) | பின்லாந்து | - | ஹெல்சிங்கி |
| 10) | அவுஸ்திரேலியா | - | கன்பரா |

தொகுப்பு. பா. அருஷன், தரம்- 6 கொழும்பு / இந்துக்கல்லூரி

**ஆங்கில எழுத்து 'b' யினால் குறிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிறம் தீட்டி. மறைந்துள்ள வடிவம் என்ன என்பதைக்கண்டு பிடியுங்கள்!**



# வானவில்

சூரிய ஒளி வெண்மையானது. எனினும், இதில் சிவப்பு, செம்மஞ்சள் (orange), மஞ்சள், பச்சை, நீலம், கரு நீலம், ஊதா ஆகிய ஏழு நிறங்கள் சேர்ந்துள்ளன. ஒரு அரியத்தினூடாக (Prism) சூரிய ஒளி செல்கையில் அரியத்தின் மறுபக்கத்தில் இந்த ஏழு நிறங்களும் பிரிந்து செல்லும். குறிப்பாக மழை காலத்திலேயே வானவில் தெரிகின்றது. இங்கு மழைத்துளி அரியம் போல் செயற்படுகின்றது. மழைத் துளியூடாக சூரிய ஒளி புகுந்து வெளிப்படும்போது வானில் ஏழு நிறங்களாகப் பிரிந்து அழகிய தோற்றமாக வானவில் விரி கின்றது. வானவில் தோன்றுவதற்கு மழைத்தூறலும் வெயிலும் ஒரே நேரத்தில் வேண்டும்.

**கீழே தரப்பட்டுள்ளது ஒரு சிலேடைச் சொற்றொடர் ஆகும். இதற்கு இரண்டு விடைகள் உள்ளன. ஒரு விடை உயிருள்ளதைக் குறிக்கும். மற்றையது, உயிரற்றதைக் குறிக்கும். எனவே விடைகளைக் கண்டு பிடிக்க முயற்சி செய்யுங்கள் பார்க்கலாம். முடியா விட்டால் மழலைகள் மன்றத்தில் அவை ஒளிந்திருக்கின்றன.**

**கண்டு பிடியுங்கள்.**
**ஓடும் இருக்கும் – அதன்**
**உள்வாய் வெளுத்திருக்கும்**
**– நாளும்**
**குலை தனக்கு நாணாது!**

# சொற்சிலம்பம்

*தம்பி, தங்கையரே! இந்தக்கட்டங்களுக்குள் சில விலங்குகள் ஒளிந்திருக்கின்றன. நீங்கள் அவற்றைக் கண்டு பிடித்து கட்டமிடுங்கள் பார்க்கலாம்!!*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆ | பு | ன் | ரை | தி | கு |
| னை | டு | மா | க | ர | டி |
| பூ | யா | வா | ங் | ய் | ஒ |
| கோ | ல் | கு | நா | து | ட் |
| ப | ன் | த | ள | ரு | ட |
| வ | றி | லி | பு | ம் | க |

## கரு தாயின் வயிற்றில் வளரும் காலம்



யானை - 20-22 மாதங்கள்
அணில் - 28 நாட்கள்
கழுதை - 380 நாட்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிவலம்



## சாதனை வீரன் முரளி

கலையகம் மிக்க
மலையகத்தில் பிறந்தான்.
கிரிக்கெட் விளையாட்டில் - இன்று
உலகில் சிறந்தான்

படிப்புக் காலங்களிலும் கிரிக்கெட்டில்
துடிப்புடன் ஈடுபட்டான் - இன்று
பந்து வீச்சாளர்களில் சாதனை புரிந்து -
எல்லோர்
சிந்தையிலும் உயர் பேறு பெற்றான்

கழுகுப் பார்வையை தன் அழகுக்
கண்ணில் கொண்டான்- இன்று
விளையாட்டு
உலகப்பார்வை முழுதும் இவனில்
கண்டான்

'டெஸ்ட்' போட்டிகளில்
கூடிய விக்கெட்டுக்களைக்
கைப்பற்றினான்
'பெஸ்ட்' போலர் என்ற
இடத்தை சுலபமாக எட்டினான்

சுழல்பந்து வீச்சில்
தனக்கென தனி இடம் எடுத்தான்
தாய்த்திருநாட்டுக்கு
பெரும்பேர் கொடுத்தான்

பந்து வீசுவதில் பிழையென்று
பலமுறை சர்ச்சைக்குள்ளாகி
பரிசோதிக்கப்பட்டான்- மனம்
நொந்து விடாமல் முயற்சித்து
புதிய சாதனையை சாதித்தான்

முத்தையா தம்பதியினர் ஈன்றெடுத்த
பெருமை மிகு முத்து- எமது
ஈழத்திருநாட்டின்
விளையாட்டுலகின் பெரும் சொத்து

எஸ். மனோகரன்
நீர்கொழும்பு



## நகரத்து சித்தன்

நகரக்காற்று
சுவாசத்துக்கு அசுத்தமென்று
கிராமம் போனவன்,
வயல்வெளியில் நின்று
கையில் எடுத்தான் ஒரு சிகரெட்
நல்ல காற்றை.....
சுவாசிப்பதற்காய்....!



## வீபத்து

உன்விழி கண்டு
விபத்தாகிப்போனது...
என்விழி மட்டுமல்ல...
பெண்ணே.
என் வாழ்க்கைப்பாதைகளில்
வழிகளும் தான் கண்ணே!

## மதம்

எல்லா 'மதமும்'
சம்'மதம்' என்று
ஆண்டவனிடம் போனேன்
அவனோ 'தாமதமாய்'தான்
வந்து சேர்ந்தான்

து.துஷ்யந்தன்
இலண்டன்.



## சரி. பிழை என்பதெல்லாம் நீ சொல்வதையிட்டே../

வார்த்தைகளால்
வர்ணங்கள் பூசுவதற்கு
இவர்கள் நன்றாகவே அறிந்தவர்கள்...?

நேற்று சரியானதை இன்று
பிழையென்று சமன்படுத்த
தெரிந்தவர்கள்....

இன்று பிழையானதை
நாளை சரியென்று நிறுவுகின்றதெல்லாம்
இவர்கள் வியாபார
வரவுகளைப்பொறுத்ததே

மனிதனின்
உரிமை எது
மீறல் எதுவென்று பட்டியலிடுவதும்
அதனை பேணுபவரையும்
மீறுகின்றவரையும் வகையிடுவதும் கூட
உச்ச வருவாயின் அடிப்படையிலே

மனித உரிமைகளை
மீறியவருக்கே பரிசு வழங்கிக்
கௌரவிப்பார்கள்
பின்னர் முரண்பாடுகள் தோன்றினால்
சாக்கடை
ஈக்களை விரட்டினான்
பூக்களை மரங்களில் பறித்தான்
என
போர் தொடுக்கவும் அதிகாரமிருக்கின்றது

எது சரி
எது பிழை என்பதெல்லாம்
நீங்கள் சொல்வதைப்பொறுத்ததே

இவர்கள் கூட்டெல்லாம்
ஏதோ ஒரு நாட்டை கொள்ளை கொள்ளும்
வரையிலே
இலாப நட்டக்கணக்கிலே பாதகமெனில்
முதுகிலே
வாள் பாச்சவோ
அழிவாயுதங்களை விற்பனை செய்யவோ
அதிகாரமிருக்கும்!

சாதகமெனில் ஐ.நா.சபையும் அனுசரிக்கும்
சரியாகாதெனின்
வல்லரசுகள் தனித்தேனும்
முடிவெடுக்கும்

சரி தவறு
என்பதெல்லாம்
வல்லான் நீங்கள்
சொல்வதைப்பொறுத்ததே...!

(பேரழிவு ஆயுதங்கள் உள்ள
நாடுகளை அமெரிக்கா
சோதனை செய்ய
விருக்கிறதாக செய்தி)

மட்டுவில் ஞானக்குமாரன்
ஜேர்மனி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப்போட்டி இல.9

ஒரு வருட தமிழ்உலகம் இலவச பிரதிகளையும் 10 ஸ்ரேலிங் பவுண்களையும் பரிசாகப்பெறுங்கள்.





பெயர்:..........................................................................................
முகவரி:..........................................................................................

## இடமிருந்து வலம்

1) நட்சத்திரங்களுள் ஒன்று (5)
7) மணமகள் தாய் வீட்டிலிருந்து கொண்டு வரும் பொருள் (4)
8) இயற்கையாக இல்லாமல் தற்கொலை, கொலை ஆகியவற்றால் ஏற்படும் மரணம் (6) (குழம்பியுள்ளது)
9) மூளையிலிருந்து உடலின் பல பாகங்களுக்கும் உணர்வுகளைக் கொண்டு செல்லும் மெல்லிய இழை (4)
12) முல்லைக்கு தேர் கொடுத்தவன் (2)
17) பாட்டில் தாள கதியைத் தோற்றுவிக்கும் ஓசை நயம் (4)
21) கணவனை இப்படியும் சொல்லலாம் (2)
22) பாடுவதற்கு ஏற்ற குரல் (4)
23) தமிழ் உலகம் தொடர்ந்து கிடைக்க இது செய்யுங்கள் (3)
25) நீர் செல்வதற்காக அமைக்கப்படும் கால்வாய் (4)
28) வித்துக்களிலிருந்து எண்ணெய் எடுக்கப் பயன்டும் ஒரு சாதனம் (3)
30) பாதிக்கப்பட்டவர்களின் குறைகளைத் தீர்க்கின்ற வகையில் வழங்கப்படும் உதவி (5)

## வலமிருந்து இடம்

5) நிறமற்றதும் ஒளி ஊடுருவும் தன்மை கொண்டதும் இயற்கையிலே கிடைக்கக் கூடியதுமான திடப்பொருள் (4)
11) மீன் பிடிப்பவர்கள் கொண்டு செல்லும் கூடை (2)
13) நான்கு வகையான தமிழ் செய்யுள்களில் ஒன்று (4) (குழம்பியுள்ளது)
15) பகுக்கக் கூடிய சொல்லில் இறுதி நிலையில் உள்ள உறுப்பு (3)
16) பெண்ணின் முடி (3)
18) தற்பாதுகாப்புக்காக கோட்டை மதிலைச் சுற்றி தோண்டப்படுவது (3)
20) காய்களை நகர்த்தி இருவர் விளையாடும் விளையாட்டு (6)
26) சொல் அல்லது சொற்றொடர் பல பொருள் தருமாறு அமைய இயற்றும் செய்யுள் (3)
27) பெரும்பாலும் இரவில் நடமாடும் ஒரு விலங்கு (4) (குழம்பியுள்ளது)
29) இலங்கையையும், இந்தியாவையும் பிரிக்கும் ஒடுங்கிய நீரப்பரப்பு (3)
31) தந்திரத்தோடு கூடிய அறிவு நுட்பம் (6)

## மேலிருந்து கீழ்

1) ஒரு திரவப்பொருள் திட நிலைக்கு மாறத் தொடங்கும் வெப்பநிலை (4)
2) பெருந்தன்மையான குணம் (4)
3) பணம் அல்லது பொருள் பெற்றுக் கொண்டதைக் குறித்து தரும் சீட்டு (3)
4) செயலைக்குறிக்கும் (4)
5) புத்தகம், இப்படியும் சொல்லலாம் (4)
6) நீரில் மிதந்து செல்லக்கூடிய தெப்பம் போன்ற அமைப்பு (3)
8) மிகச்சரியானது (5)
10) அவித்த நெல் (5)
11) மூங்கில், பிரம்பு ஆகியவற்றால் பின்னப்பட்ட நீர்வழிப் போக்குவரத்து சாதனம் (4)
13) வயல் (3)
14) வீரன் (4)
16) உள் நோக்கிச் செல்லும் பள்ளம் (3)
18) எழுத்து (5)
19) ஒரு கிராமிய விளையாட்டு (3)
24) சிறந்த திரைப்பட பாடல்களை இயற்றுகின்ற ஒரு தமிழக பெண் கவிஞர் (3)

## கீழிருந்து மேல்

14) பெண் ஆடு (2)
22) அமைதியான இயல்புடையவர் (2)
31) விஷமற்ற பாம்பு (2)

## குறுக்கெழுத்துப்போட்டி - இல : 7 இற்கான விடைகள்.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ஆ | ட் | சே 2 | ப 3 | ணை | | ல் | ர | சா 4 | | யை | 5 த |
| ரோ | | ணா | த 6 | க 7 | ழ | லை | | ம 8 | னி | த 9 | ம் |
| க | | தி | நீ | ற | | ம 10 | | ண | | வ | ழு |
| ண | ம் | ப 11 | ர் | 12 வை | ண | 13 வ | ம் | ம் | | ற | பு |
| ம் | | தி 14 | | | | து 15 | ரு | ப் | பு | ணை | சா 16 |
| | | வ 17 | ன் | ம 18 | ம் | வை | டு | கு 19 | | | த் |
| 20 ம | த | லை | | ம | ம் | ன | லி 21 | ப் | ம் | ள | தா 22 |
| 23 தி | ப் | பி 24 | லி | தை | க 25 | | 26 க | ப | 27 ஆ | மா | ன் |
| ப் | | ர 28 | ண | ம் | ம் | | | ம் | ம | கு | 29 த |
| பு | ந 30 | ள | ன் | | ட | ம | மை 31 | | 32 ண | ம் | கோ |
| ரை | நா 33 | ய | | 34 மு | க | ம | ன் | | க் | கு | சு 35 |
| 36 தா | ப | ம் | | ரி | சே | றை | தி 37 | | 38 கு | ழா | ம் |

போட்டி இலக்கம் - 7 இற்கான சரியான விடையை அனுப்பி ஒரு வருடத்துக்கான தமிழ்உலகம் இலவச பிரதிகளையும் 10 ஸ்ரேலிங் பவுண்களையும் பரிசாகப் பெறும் அதிஷ்டசாலி:

பொ.செல்வபிரியா
27/61, Perakumba Place,
கொழும்பு- 6

ஒரு வருடத்துக்கான தமிழ்உலகம் இலவச பிரதிகளைப் பெறும் இரண்டாவது அதிஷ்டசாலி:

M.N.ஸைனப் நதா,
108, காட்டுப்பள்ளி வீதி,
ஏறாவூர்- 3A

ஆறு மாதங்களுக்கான தமிழ்உலகம் இலவச பிரதிகளைப் பெறும் மூன்றாவது அதிஷ்டசாலி:

A.S.அஸீலா, பிரதேச செயலகம், ஏறாவூர்

## குறிப்பு

குறுக்கெழுத்துப்போட்டியில் பங்குபற்றுவோரின் எண்ணிக்கையும், ஆர்வமும் அதிகரித்து வருவதைக் கருத்திற்கொண்டு பரிசுத்திட்டத்தை விரிவாக்கியுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். சரியான விடையை எழுதி அனுப்புவோரில் அதிஷ்டசாலி ஒருவருக்கு ஒரு வருடத்துக்கான தமிழ்உலகம் இலவச பிரதிகளும் 10 ஸ்ரேலிங் பவுண்களும் பரிசாக வழங்கப்படும்.

சரியான விடைகளை எழுதி அனுப்புவோரில் இரண்டாவது அதிஷ்டசாலிக்கு ஒரு வருடத்துக்கான தமிழ்உலகம் இலவசபிரதிகளும், மூன்றாவது அதிஷ்டசாலிக்கு ஆறு மாதங்களுக்கான தமிழ்உலகம் இலவசபிரதிகளும் பரிசாக வழங்கப்படும். குறுக்கெழுத்துப்போட்டி இல : 7 இற்கு ஏராளமானோர் விடைகளை அனுப்பி இருந்தாலும் குலுக்கல் முறையில் மூவர் தெரிவு செய்யப்பட்டு பரிசு பெறுகின்றனர். பூர்த்தி செய்யப்பட்ட குறுக்கெழுத்துப் போட்டிக்கான அட்டவணையுடன் உங்கள் விவரங்களையும் கீழ் உள்ள முகவரிக்கு 31/07/2004 ஆம் திகதிக்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

அனைத்து நாட்டுத்தொடர்புகளுக்கு:
**Tamilulagam**
**899-901 Finchley Road,**
**London NW11 7PE,UK**
**Tele : 0044 20 8455 9001**
**Fax : 004 20 8731 7870**
**e- mail : tu@globallanka.co.uk**

இலங்கைத்தொடர்புகளுக்கு:
**Tamilulagam**
**Meewella Building,7th Floor,**
**329,Galle Road, Colombo-04**
**Tele : 0094 112 59 1000**
**Fax : 0094 112 59 1003**
**e- mail : globallanka@sltnet.lk**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்ப்பு

மகாவித்தியாலய அதிபர் ஆள்விட்டுக் கூப்பிட்டதிலிருந்து லீலாவுக்கு இதயம் படக் படக்கென்று அடித்தபடி. என்னவாயிருக்கும்? என்று மனதைக் குழப்பிக் கொண்டேயிருந்தாள். ஐயாத்துரை மாஸ்டர் வயலில் கச்சான் புடுங்கிக்கொண்டிருக்கின்றார். அவர் மனதில் அவசரம் தெரியவில்லை. "இஞ்சையப்பா தேத்தண்ணியைக் குடிச்சிட்டு அதிலை ஒருக்கா போட்டு வாருங்கோ ஏதேனும் பிரச்சினையோ தெரியாது" லீலா அவசரப்படுத்தினாள். ஐயாத்துரை மாஸ்ரர் அப்படியே செய்தார். சைக்கிள் அரை மைல் தூரத்திலிருக்கும் கல்லூரியை நோக்கிப் புறப்பட்டது.

ஜனனி பதினோராம் ஆண்டில் படிக்கின்றாள். யாழ்ப்பாணத்து அகதிக் குடும்பம். உறவும் இல்லை. பகையும் இல்லை. ஒன்றுமே இல்லை என்ற நிலையில் மனிதாபிமானம் நீட்டிய கரத்தை எட்டிப்பிடித்தபடி காட்டு நிலத் துண்டில் கொட்டில் கட்டி இருக்கின்றது அக்குடும்பம். கெட்டிக்காரப்பிள்ளைகள் தான் . ஆனால் அதிபர் அவசரமாக அழைத்ததில் ஏனோ ஒரு அச்சம் இருந்தது.

சைக்கிளை மரத்தின் கீழ் நிறுத்திய ஐயாத்துரை மாஸ்டர் அதிபரின் அறையை நோக்கி நடந்தார். "ஐயா வாருங்கோ நாளைக்கு காலை 10 மணிக்கு அக்கராயன் மகாவித்தியாலயத்திலை பரிசளிப்பு விழா என்று அறிவித்திருக்கின்றார்கள். உங்கள் மகள் ஜனனி முதலாமிடத்தில் பாஸ் பண்ணியிருக்கின்றாள். முதலாம் பரிசு பணமாக ஐயாயிரம். தடை, தாமதம் ஒன்றும் இருக்கப்படாது நேரத்துக்கு வந்திடவேணும்"

அதிபர் பரமேஸ்வரன் மாணவர்களை அச்சுறுத்தி பழக்கப்பட்ட வாயினால் கடிதம் ஒன்றை நீட்டியபடி கூறினார். அதிபருக்கே மாலை போடலாம் போல இருந்தது. நன்றி கூறி கடிதத்தைப் பெற்றுக் கொண்டு வீடு நோக்கி புளுகத்துடன் ஓடினார் அந்த ரியூசன் மாஸ்ரர். வாய்ப்புக்களை வலிந்து தேடி அதற்காக அலையும் கூட்டம் இருக்கவே இருக்கின்றது. ஆனால் வாய்ப்புக்களை விதி திணிக்கும் போது அதனை விடாது பற்றிக்கொண்டு செயற்பட வலிமை வேண்டுமே என்று அவர் மனம் அங்கலாய்த்தது. நல்லவனாக வாழ்ந்தால் நல்லவை எல்லாம் நடக்கும் என்று தப்பாகவே உலகத்தைப் புரிந்து கொண்ட ஏமாளி அவர். வல்லமை என்பது அவர் வீட்டில் நரிக்கொம்பு. இதனால் தான் வல்லவனாக இல்லையே என்பது அவருக்கு நிரந்தரக்குறை.

அக்கராயன் மகாவித்தியாலயம் கிளிநொச்சி மாவட்டத்தில் எங்கோ இருப்பது தெரியும். முல்லைத்தீவின் உடையார் கட்டில் இருக்கும் இவர்கள் கடந்த இரண்டு வருடங்களில் எங்கும் போனதே இல்லை. தமது உயிர்களைப் பாது காப்பதுடன் மட்டும் திருப்திப்பட்ட நிலையில் எதிர்கால நல்வாழ்வுக்கு ஆதாரமாக பிள்ளைகளின் கல்வியை மட்டும் நம்பியிருக்கும் இழப்பதற்கேதுமற்ற குடும்பம். ஐந்து மைல்கள் போவதே ஒரு நீண்ட பயணம் என்ற நிலை. அன்று மாலையே புறப்பட வேண்டும். உடைந்த பாலத்தடியில் இறங்கி சைக்கிளை தள்ளிச்சென்று பாலத்தைக் கடந்த பின் மீண்டும் ஏறி புல்லுக்கட்டைகள், நாயுண்ணி பற்றைகளை விலத்தி சைக்கிள் சென்றது.

இரண்டு மணிக்கு கல்லூரி விட்டு ஜனனி வருமுன்பே லீலா ஆயத்தமாகியிருந்தாள். வந்த வேகத்தில் அரையும் குறையுமான ஆயத்தங்களுடன் குடும்பம் வீதியில் இறங்கி விட்டது. முதலில் முறிகண்டிப்பிள்ளையார் கோவிலடிக்கு போகவேண்டும். அது எதிர்பார்க்க முடிந்த கரைச்சல். சண்டைக்கு முந்திய காலத்தில் கொழும்பில் பிரமச்சாரியாக வாழ்ந்த காலத்தில் முறிகண்டியில் நீண்ட தூர பஸ்கள் நிற்கும். அதனால் ஐயாத்துரைக்கு நன்றாகப்பழக்கப்பட்ட இடம். ஆனால் அங்கிருந்து அக்கராயன் போகமட்டும் தெரியாது. அங்குள்ள பலரையும் போல கையும், காலுமே துணை என்று நம்பிக் கொண்டும் ஆண்டவனை நினைத்துக்கொண்டும் புறப்பட்டு விட்டால் விசாரித்து போகலாம் என்று கோணேஸ் மாஸ்ரர் உற்சாகமளித்துக் கதைத்ததில் ஓரளவு துணிச்சல் இருந்தது. மூத்த பிள்ளை கல்விமான்களால் பாராட்டப்படும் வைபவத்தைப் பார்ப்பதில் உள்ள ஒரே ஆர்வம் பின்நின்று தள்ளியது. மிகவும் தட்டுப்பாடான உயிர்க்காப்பு மருந்துகள் டப்பிகளில் போடப்பட்டு கைப்பையில் திணிக்கப்பட்டிருந்தன. வழிவழியே கடைகள் இருக்கும் உண்பதற்கோ குடிப்பதற்கோ எதையும் வாங்கிக்கொள்ளலாம் என்று ஒரு தவறான விளக்கத்தினால் மனம் நிறைந்திருந்தது. உற்சாகமாகவும் இருந்தது.

முறிகண்டி வரையில் மூன்று வாகனங்களில் சென்று இறங்கும்போது மாலை ஆறு மணியாகி விட்டிருந்தது. சூடான வடைகள் மூவருக்குமாக ஆறு வாங்கியாயிற்று. அதுவே இரவுக்கும் சாப்பாடாக இருக்கும் என்பது அப்போது தெரியாது. சூரியன் மறையவில்லை. சந்தியில் பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் மூவருக்கும் நம்பிக்கை மட்டும் இருளடைந்து கொண்டு வந்தது. அக்கராயனில் நாளை காலை பத்து மணிக்கு விழாவில் நிற்கவேண்டும். அது வரையுள்ள பத்து மைல்களைக் கடந்து செல்ல வேண்டும். இரவினூடாக, காடுகளினூடாக வெளிச்சமும் ஆட்கள் புழக்கமும் அற்ற பாதையூடான பயணம், வன்னேரிக் குளத்து யானைகளையும், பாம்பு பல்லிகளையும் சமாளித்து, இருதய நோயை குளிசைகளால் சமாளித்து சென்றடையவேண்டும். சந்தியில் நிற்பதற்கு பொறுமை இடமளிக்கவில்லை. வாகனங்கள் எதுவும் போகவில்லை. விசாரித்ததில் இனி பஸ் இருக்காது என்று சிலர் அரைகுறை நம்பிக்கையுடன் கூறினர். சில பார வாகனங்கள் ட்ராக்டர்கள், விறகு, லொறி, ஒன்றிரண்டு கைகாட்டி மறித்த போது ஏற்றவில்லை. நேரம் வீணாகுவதை ஒரு பொழுதும் சகிக்காத ஐயாத்துரை மாஸ்ரர் நடக்கத்தொடங்க மகள் ஜனனியும், மனைவி லீலாவும் தொடர்ந்து நடந்தனர். ஒவ்வொருவர் தோளிலும் ஒவ்வொரு தோல் பை தொங்கியது.

அடிக்கடி பொக்கற்றை தொட்டுப் பார்த்து மருந்துகள் இருப்பதை உறுதி செய்து கொண்டு அப்பா முன்னே நடந்தார். அவசரத்திலும் 250 ரூபா கொடுத்து வாங்கிய பற்றரியை போட்டு கையிலெடுத்துக்கொண்ட 'ரோச்' ஒரு கையில், பற்றரி மட்டுமல்ல மேலதிகமாக ஒரு பல்ப் கூட தயார் நிலையில் இருந்தது. சந்திரனுக்கும் செவ்வாய்க்கும் செல்வது போன்ற மன ஆயத்தத்துடன் மூவரின் பயணம் நடையில் தொடர்ந்தது. முதல் ஐந்து மைல்களைக் கடக்கும் வரையில் சில வாகனங்கள் வீதியால் சென்றன. அவை எவையும் பயணிகள் பயணிக்கும் வாகனமல்ல. ஒவ்வொரு வாகனமும் ஒவ்வொரு பிரச்சினையுடன் இழுத்து... இழுத்தும், புழுதிகளால் குளித்தும் சென்றன. பார்க்கவே பரிதாபமான காட்சி. ஒரு மோட்டார் சைக்கிளில் ஐந்து பேர், ஒரு மிதி வண்டியில் 4 பேர் என்று சென்றன. இரவு பத்து மணியளவில் கடந்து சென்ற ஓரிரு வாகனங்கள் வீசிய வெளிச்சத்தில் அந்த கிரவல் வீதி எங்கிருக்கின்றது என்பதை இனங்கண்டறிய முடிந்ததில் மகிழ்ச்சியாக இருந்தது. வாகன பலன் அவ்வளவு தான்.இனிமேல் மனோபலம் கூட தோற்கும் நிலை வந்தது. வீதியில் சனசஞ்சடி இல்லை. வீதி எது என்பதே தெரியவில்லை. கிரவல் வீதியின் இரு புறங்களிலும் காடு. குருவிகளின் ஒலி, சிறு விலங்குகளின் அரவம் இடைக்கிடை கேட்டது. வீடுகள் இல்லை. இருந்தாலும் 200 ரூபாவிற்கு மண்ணெண்ணெய் வாங்கி எரிப்பதற்கு மகாராஜாக்களாக அந்த அகதிகள் இருப்பார்களா? இத்தனைக்கும் மத்தியில் திருடர்கள், கொள்ளையர்கள் எதிர்ப்பட்டால் என்ன செய்வது? யானைக்காடு என்று எல்லோரும் எச்சரிக்கையாகப்பழகும் இடத்தினூடாக அக்குடும்பம் நடு இரவு 12 மணிக்கு பயணம் செய்கின்றது. கையில் இருக்கும் ரோச் மட்டும் தவறுமானால் மறு நாள் அவர்களின் சுவடு கூட இராது என்று நம்பலாம்.

"அப்பா, ஒரு வெளிச்சம் தெரியுது. வீடாக்கும்" ஜனனி குதூகலம் தொனிக்க கூறினாள். அவளது குரல் கலங்கி வெளிப்பட்டது. லீலா சொன்னாள். "ஓமப்பா காட்டு மரங்களை யாரோ எரிக்கினம். ஒரு கொட்டிலும் தெரியுது. வாங்கோ கதைப்பம். "இனிமேல் ஒரு அடி கூட எடுத்து வைக்க இயலாது. எனக்கு மயக்கம் மயக்கமா வருகுது" இவ்வளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரமும் அடக்கி வைத்திருந்த அனுபவங்களை லீலா முதன் முறையாக வெளியிட்டாள். முன்னே நடந்த அப்பா பின்னே ரோச் அடித்து பார்த்துக்கொண்டார். ஜனனி தள்ளாடியபடி கடைசியாக வந்தாள். மூவரின் நிலையும் ஒன்றாக இருந்தது. இந்நேரத்தில் மழையும் வந்தால்...! என்று நினைக்கவே பயமாக இருந்தது. வாயிலிருந்து பேச்சுக்களே வருவதாக இல்லை. காட்டு மரங்கள் எரியும் வெளிச்சத்தில் அடிக்கட்டைகளை விலத்தி விலத்தி அந்தக்கொட்டில் வாசல் வரை....

முதலில் நாய்கள் குரைத்து வீட்டாரை எழுப்பின. "கொஞ்சம் தண்ணி தாங்கோ" என்றது தான் தாமதம் "இப்படி இருங்கோ" உரப்பையினால் செய்த கொட்டில். கதவைத்திறந்து வெளியே வந்த வீட்டார் திண்ணையைக் காட்டி கூறினர். தண்ணீர் வந்தது. மூவரும் மாறி மாறிக்குடித்தனர். நடந்து வாறியள் போல கிடக்கு. நடுச்சாமம், யானைக்காடு, இதிலை கிடந்திட்டு விடிய போங்கோ" உறவினருமல்லாத நண்பருமல்லாத அந்த வீட்டார் ஒருமித்துக்கூறினர். "இன்னும் எட்டு மைல் போகவேணும். வாகனங்களும் இல்லை. குமர் பிள்ளையோட..." மனிதம் மறித்தது. கைவிளக்கின் ஒளியில் பேச்சுக்கள் நடந்தன. "நாங்கள் நாளை காலை பத்து மணிக்கு அங்கை நிற்கவேணும்... பஸ் ஓடுறதெண்டு ஆட்கள் கதைச்சவை. அந்த துணிவில தான் வெளிக்கிட்டனாங்கள். நாளைக்கு காலை பத்து மணிக்கு ஒரு பஸ் இதாலை போகும். அதை பிடிக்கலாம். இந்த திண்ணையில கிடந்திட்டு விடியப் போங்க" சிறிது நேரம் மௌனம்."காலை பத்து மணிக்கு ஏறினால் அங்கை போக 12 மணியாகி விடும். வந்தும் பிரயோசனம் இல்லாமல் போய்விடும்" இது ஜயாத்துரை. எவரிடமிருந்தும் பதிலில்லை. முறிகண்டியில் வாங்கிய வடைகள் வயிறுகளுக்குள் இறங்கின. அரவணைத்து ஆறுதல் கூறிய கரங்களுக்கு நன்றி கூறி விட்டு மீண்டும் நடை ஆரம்பித்தது. நேரம் ஒரு மணியிருக்கும். இந்த அபார துணிச்சலை இவர்களுக்கு யார் கொடுத்தது? மாஓ சேதுங்கின் நீண்ட பயணக்கட்டுரைகளா?

அந்த ஒக்டோபர் மாதத்தின் 31 ஆம் திகதி மாலை கொட்டும் மழையில் 18 மணித்தியாலங்கள் இடையில் நிற்காமல் யாழ்ப்பாணத்திலிருந்து தென்மராட்சிவரை நடந்து பெற்ற பயிற்சியால் கிடைத்த மன உரம் தானா? மேலும் ஒரு மைல் தூரம் நடுக்காட்டினூடாக நடு நிசியில்.... ஒரு சறுக்கல் சத்தத்துடன் அப்பா சறுக்கி பாதைக்கு வெளியேயிருந்த பள்ளத்தினுள் விழ அவரை இழுத்துப் பிடிக்க ஓடி வந்த மற்றவர்களும் விழுந்து விடவே பயணத்தை நிறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது. தூரத்தில் தெரியும் ஒரு வெளிச்சம் வரை மீண்டும் தடக்கித் தடக்கி அவர்கள் நடந்தனர். காட்டுக்கட்டைகளைப்போட்டு எரித்துக் கொண்டிருந்த ஒரு அகதிக்குடும்பம் வழி மறித்தது. அதற்கப்பால் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாத நிலையில் அவர் கள் அந்தக்கொட்டிலினுள் அடைக்கலமாகினர்.மிகையான ஆர்வமும், துணிச்சலும் ஆபத்தைத் தேடி விட்டன. ஜயாத்துரை நீட்டி நிமிர்ந்து கிடந்தார். அந்த வீட்டார் ஒரு ஒலைப்பாய் கொடுத்து உதவினர். நெஞ்சுவலி சிறிது சிறிதாக அதிகரித்து வந்தது. இது எதிர்பார்க்கப்பட்டது தான். ஆனாலும் நேரம் பின்னிரவு 2 மணி. மருந்துகளுக்கு அடங்கும் பரிமாணத்தில் இல்லைப்போலிருந்தது. அந்த வீட்டார் அன்புடனும் ஆதரவுடனும் நடந்தது ஆறுதலாக இருந்தது. டாக்டர்களின் அறிவுரைப் படியான குளிசைகள் போடப்பட்டன. நாக்கின் கீழ் ஒன்றன் பின் ஒன்றாக இரண்டு குளிசைகள் வைக்கப்பட்டன. லீலா ஒரு புறமும் ஜனனி மறுபுறமும் இருந்து கொண்டனர். அந்த வீட்டாரின் மண்ணெண்ணெய் விளக்கு பெரிதும் உதவியது. தேநீரும் சுடுநீருமாக மாறி மாறி வைத்துக் கொடுத்தனர். "வராமல் விட்டிருக்கலாம்' நீண்ட பெருமூச்சுடன் ஜனனி கூறினாள்.அதே வார்த்தைகள் மற்றவர்களின் வாய்வரை வந்திருந்தனவென்றாலும் வெளிப்படவில்லை. பிள்ளையின் மனம் பாதிப்படைந்து விடலாம் என்பதால் வெளிப்படவில்லை. அப்பா அமைதியாக உறங்கினார். அக்கராயன் கல்லூரியில் இயங்கும் கல்வி அலுவலகத்தில்தான் அந்த குடும்ப நண்பர் தனபால் இருப்பதாக கேள்விப்பட்டிருந்தனர். அந்த இடப்பெயர்வு யார் எங்கு இருக்கின்றார்கள் என்பதையே தெரியாமல் செய்து விட்டிருந்தது. எப்படியாவது அங்கு சென்று அவரை சந்தித்து விட்டால் பெரும் ஆறுதலாக இருக்கும். அவரே லீலாவையும் ஜனனியையும் உறவினர்களிடம் சேர்த்து விடுவார். என்று தனது இறுதி நினைவுகளை ஓட விடுகின்றார். அதுவரை தனது உயிர் போகாமலிருக்குமா என்பதுதான் அவரின் மனதை வாட்டியது. தனது நினைவுகளை வெளிக்காட்டாமல் அமைதியாக உறங்குவது போல் கிடந்தார். மன உறுதி இதய நோய்க்கும் மருந்து போலும்! விபரீதம் எதுவும் நடைபெறவில்லை. மறுதினம் காலையும் துணிச்சலுடன் நடையாகவே அக்கராயன் மகாவித்தியாலயத்தைச் சென்றடையும்போது நேரம் 9.30. அந்த 18 மைல் பயணத்தில் அவர்கள் சந்தித்த ஒரேயொரு தெரிந்த மனிதர் கோணாவில் யோக நாதன். நண்பர் என்ற வகையில் வழியில் சந்தித்த அவரிடம் நடந்தவை யாவற்றையுமே கூறியிருந்தனர். விழா ஏற்பாட்டாளர்களின் சமையல் வேலையிலும் ஈடுபட்டிருந்தவர் அவர்.




பான்ட் வாத்தியங்கள் சகிதம் ஒவ்வொரு பாடத்திலும் முதலாவதாக புள்ளிகள் பெற்ற மாணவர்களும், அவர்களது பெற்றோர்களும் ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டனர். தேசியக் கொடியேற்றும் வைபவம் நடைபெற்று விழா தொடங்கியது. கல்வி அதிகாரிகள், தலைமை நிர்வாகிகள், அரசாங்க அதிபர் ஆகியோர் உரையாற்றினர். பரிசில்கள் வழங்கப்பட்டன. தலைமை தாங்கிய அலோசியஸ் அடிகளாரின் விருப்பின் பேரில் பெற்றோரின் சார்பில் ஒருவர் உரையாற்ற அழைக்கப் பட்டார். திட்டமிட்டுக் காத்திருந்தவர்கள் போல ஒரு கல்வித் திணைக்கள அதிகாரி மண் டபத்தில் அமர்ந்திருந்த ஜயாத்துரையை நோக்கி வந்தார். காதோடு காதாக "நீங்கள் பேச வேண்டும்" என்றார். என்ன அடிப்படையில் ஜயாத்துரை இனங்காணப்பட்டாரோ தெரியாது. ஒரு வேளை கோணாவில் யோகநாதன் கதை சொல்லியிருக்கலாம். கடந்த இரவு நிச்சயமாக பிரிய விருந்த உயிர் பிரியவில்லை. என்ற விடயம் ஜயாத்துரை மாஸ்ரரிடம் பெரும் பூரிப்பை ஏற்படுத்தியிருந்த வேளை, பேச்சே வராமலிருந்த இரவை யோசித்தும் பார்க்கவில்லை. பெற்றோர்கள் மண்டபத்தில் நிரம்பியிருந்த நலன் விரும்பிகள் சார்பிலும் ஜயாத்துரை உரையாற்றினார். அரை மணிநேர உரையில் மண்டபம் அதிரும் வரையில் ஐந்து தடவைகள் கை தட்டல்கள். அங்கு பேசிய எவருக்கும் இது கிடைத்திருக்கவில்லை. பேச்சு முடிவில் தலைவர் எழுந்து வந்து தனக்கு அணிவித்த பூமாலையை ஜயாத்துரை மாஸ்டருக்கு அணிவித்தார். அதற்கும் கரகோசம். அங்கிருந்த அரசாங்க அதிபர் அவரை அழைத்துச்சென்று மேடையிலேயே அமரும்படி செய்தார். தலைவர் அங்கு பேசினார். நான் சாப்பிடும்போது ஏனைய கறிகளையெல்லாம் முதலில் சாப்பிட்டு விடுவேன். கடைசியாகத்தான் எனக்கு மிகவும் பிடித்த மீன் பொரியலைச் சுவைப்பேன். இன்று உங்களுக்கும் அதே அதிஷ்டம் கிடைத்துள்ளது என்று கருத்தாழமான பேச்சு கடைசியில் தான் கிடைத்திருந்ததை இனங்காட்டிப் பேசினார். பிள்ளையைப் பாராட்டிய கல்வி மான்கள் தந்தையையும் பாராட்டும் வாய்ப்பு கிட்டியமை அபூர்வமாக இருந்தது.

விழா முடிந்தது. இனி மீண்டும் ஜயாத்துரை குடும்பம் உடையார் கட்டிற்கு வரவேண்டும். முதல் நாளிரவு நடந்தவற்றை அறிந்துகொண்ட அதிகாரிகள் நேரில் வந்து தமது வாகனத்தில் வரும்படி அழைத்தனர். பரிசுப் பணத்தில் ஆயிரம் ரூபாவிற்கு பரிசுப் பொருட்களை கொள்வனவு செய்து கொண்ட ஜனனி வீட்டார் தம்மை வழியில் உள்ள அந்தக்கொட்டில் வீட்டில் விட்டு விடுமாறு கேட்டுக்கொண்டு வாகனத்தில் ஏறினர். வரண்டு கிடந்த தேசத்தில் மனித நேயம் அலை மோதியது. நள்ளிரவில் தனி வழியே பெண்கள் உலவ வாய்ப்பளித்த ராமராச்சியத்தை ஜயாத்துரை குடும்பத்தினால் மறக்கவே முடியாது.

(சிறகடிக்கும் சிந்தனையிலிருந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவியர் புகழேந்தியின் சில கருத்தாழமிக்க ஓவியங்கள்






**பெண் விடுதலை**

திரும்பும்
திசையெல்லாம்
தடுத்து
நிறுத்தும்
புழுதி மண்டிய
குட்டிச்
சுவர்களை
உடைத்தெறி...
விடுதலை
செய்
உன்னையும்
என்னையும்



**'காந்தி'**

ஹே ராம்...
நவகாளி
நோக்கி
நடக்கையில்
கேட்டது..
மசூதியில்
விழுந்த
சம்மட்டி
ஒலியில்
மீண்டும்
எதிரொ
லித்தது....






**குட்டிமணி கண்கள்**

உனது கோர
நகங்கள்
நீளுமுன்
உயிர்த்
திருந்த
அந்த
விழிச்சுடரில்
ஒளி வார்த்துக்
கொண்டவை
ஒன்றிரண்டு
அல்ல...இந்தக்
கண்களாலும்
இருபதாம்
நூற்றாண்டைப்
பார்க்கலாம்



**யாழ் வெளி யேற்றம்**

சிறகு
விரித்து
விதை
யொன்று
அலையும்
முளைக்க
ஒரு பிடி
மண் தேடி






**வல்வைப் படு கொலை**

பிணவாடை
வீசும் தென்
திசைக்
காற்றில்
அசோக
மரத்துக்
கிளைகள்
துளிர்த்தன!



**ஹிரோஷிமா**

இன்னும்
ஆறாத
காயங்
களோடு
இன்னும்
பிறந்து
கொண்
டிருப்பது
நான்
தான்....






**'ஈரோடு'**

மானுடம் சுமந்த
துயரம்
அனைத்தையும்
வரித்துக் கொண்டது
போல்
கறுத்த சட்டையுடன்
தள்ளாடும்
உடம்பைத் தாங்கும்
கைத்தடியாய்
தள்ளாடும்
மானுடத்தைத்
தாங்க வைத்தது
போல்..



ஓவியர் புகழேந்தி யின் பேட்டி 14 ஆம் பக்கத்தில்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலகலப்பும் கும்மாளமும்

அங்கம் –2

மூலக்கதை - தாரா

உரையாடல் – சித்திரம், ஆனந்த்

## முன்கதைச்சுருக்கம்

ஏராளமான ஆடம்பரப்பொருட்களை சுவிற்சர்லாந்திலிருந்து பெற்றுக்கொண்டிருந்தனர் குக்கிராமமொன்றின் குணராசா வீட்டார். அங்கு ஒரு விசிற் போய் வந்த அதே கிராமத்து உறவினர் ஒருவரான சிவராசாவின் குடும்பத்தினர் தாம் அங்கு கண்டவற்றை சிவராசாவிடம் வியப்பு மேலிட கூறுகின்றனர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழ்ந்து பேசப்படாத புகழுக்குரிய வீரன் ஹசான் திலகரத்ன




இலங்கை அணியின் துடுப்பாட்டத் துறையில் மிகவும் நம்பிக்கை வாய்ந்தவராகக் கணிக்கப்பட்டவர் திலகரத்ன.

சகல விதமான உணர்ச்சியூக்கங்களும் விளையாட்டுத்தளத்தில் கிரிக்கெட் தெளிவற்ற ஒரு நிலையையே உருவாக்குகின்றது.

மகிழ்வூட்டும் வீரப்பிரதாப வெற்றி வாகையிலிருந்து கிரிக்கெட் சூதாட்ட எதிர்வாதங்கள் வரை விளையாட்டுத் தளத்திற்கு வெளியேயும் உள்ளேயும் நடைமுறையில் இயங்கும் சகல வித



நடவடிக்கைகளும் ஆட்டத்தை ஒரு மங்கலான புகை மூட்டத்திடையேதான் தக்க வைத்துள்ளது.

செயலாற்றலும் வயதும் கட்டுக்கோப்புடையதெனினும் அதற்கு அதிக முக்கியத்துவம் இல்லையென்பது வெளிப்படையான உண்மை.

உண்மையாகவே கிரிக்கெட் புதிய செயலாற்ற சகாப்தத்திலே, நிழலடிப்புச்செய்கின்ற ஒன்றாகவே ஆரம்பமாகின்றது. இதில் அனுபவ சாலிகளே வெற்றியடைகின்றனர்.

இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர் அலெக்ஸ்ஸ்டுவர்ட்டை உதாரணமாகக் கொள்ளலாம். அலெக்ஸ் ஸ்டுவர்ட் தனது 40 வயதிலும் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் விக்கெட் காப்பாளராகவும் தனது கடமையை செவ்வனே புரிந்தார்.

இலங்கை அணியின் ஹசன் திலகரத்னவை இந்த இடத்தில் வைத்துப் பார்க்க வேண்டும். ஹசன் எத்துணை சிறந்தவராக செயல்பட்டாலும் விமர்சனத்திற்குரியவராகி விட்டதுதான் துர்ப்பாக்கியம். விடாப்பிடியாய் எதிர்க்கின்ற அவுஸ்திரேலிய வீரர் ஸ்டீவ் வோ அணிக்காக தனது கடமையை திறமையாகவே செய்தார். ஆனால் தனது சம்மதமில்லாமலே கிரிக்கெட் விமர்சகர்கள் அவரை வலுக்கட்டாயமாக ஓய்வு பெறச்செய்தார்கள்.

இதே நிலைதான் ஹசான் திலகரத்னவிற்கு ஏற்பட்டது.

இலங்கை அணிக்கு உலகக் கிண்ணத்தைப் பெற்றுத் தந்த அணியின் தலைவர் அர்ஜுன ரணதுங்க தனது பிரியா விடையின் போது கண்ணீர் மல்க கூறிய வார்த்தைதான் கவனத்திற் கொள்ளத்தக்கது.

கிரிக்கெட் குறித்த பற்றும் ஆவலும் என்னிடம் நிறையவே உண்டு. என்றாலும் கிரிக்கெட் விமர்சகர்களுக்கு தலைசாய்க்க வேண்டிய நிர்ப்பந்தமும் உண்டு.

தற்போது மனக்குழப்பத்திற்கு ஹசான் திலகரத்ன உந்தித் தள்ளப்பட்டுள்ளார். 2001 இல் இந்தியாவிற்கு எதிராக இவர் அடித்த சதம் (Century) அதே ஆண்டில் மேற்கிந்திய தீவுகளுக்கெதிராக இரட்டைச்சதம் மற்றும் 2002 இல் அச்சம் தரக்கூடிய தென்னாபிரிக்க பந்து வீச்சுக்களுக்கு முகம் கொடுத்து அயராத உழைப்பின் மூலம் அவர் அடித்த சதம் ஒரு வீர காவியத்தை உருவாக்கிற்று எனலாம்.

துடுப்பாட்டத்தில் நம்பிக்கை வாய்ந்த கனவான் என (Mr.Reliable)வர்ணிக்கப்பட்டவர்.

தனது 34 ஆவது வயதில் அணியின் டெஸ்ட் போட்டிகளுக்கான தலைமைப் பதவி அவரது தோள்களில் சுமத்தப்பட்டது. இந்த சுமையை சுகமாக ஏற்றுக் கொண்ட திலகரத்ன தனது தலைமைப் பதவியை தன்னம்பிக்கையுடன் ஆரம்பித்தார்.

நியூசிலாந்து அணியுடனான போட்டிகளை தனது சொந்த மண்ணில் வெற்றி, தோல்வியின்றி நிறைவேற்றிய பெருமை திலகரத்னவிற்கு உண்டு.

மேற்கிந்திய தீவுகளுடனான இரண்டு போட்டிகளில் ஒன்றில் தோல்வியடைந்தாலும் மற்றொன்றை வெற்றி, தோல்வியின்றி முடித்து வைத்த பெருமையும் திலகரத்னவிற்கே உண்டு.

புகழ்ந்து பேசப்படாத ஒரு உன்னத மண்ணின் மைந்தனுக்கு



பிரியா விடை கொடுத்ததில் கிரிக்கெட் ஆய்வாளர்களுக்கு முக்கிய பங்குண்டு. கிரிக்கெட் குறித்து எழுதுபவர்கள் நிச்சயமாக இந்த புகழ்ந்து பேசப்படாத வீரன் குறித்து ஒரு ஆவணம் உருவாக்குவார்கள் என்பது உண்மை. இவரது துடுப்பாட்டத்துறையின் நற்பண்புக் கூறுகளை உள்நாட்டு கிரிக்கெட் ரசிகர்கள் உணர்ந்து கொள்ளத்தவறி விட்டது திலகரத்னவின் தலையெழுத்தா?

ஸ்டீவ் வோ, அர்ஜுனா ரணதுங்க ஆகியோரின் கிரிக்கெட் ஆர்வமும், மேலும் ஆட வேண்டும் என்ற விருப்பம் இருந்தாலும் வயது அவர்களை நிராகரித்து விட்டது. திலகரத்னவின் தலைவிதியும் இதுவே தான்.

**நெய்தல் நம்பி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்வுக்குத் தயாரிக்கின்றீர்களா?

# HOW TO PREPARE FOR THE EXAMINATION?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்திரஜித் சிவநாயகம்



# கொழும்பு நகருக்கு குதூகலம் சேர்க்கும் குளோபல்

**கொ**ழும்பு மாநகர எல்லைக்குள் கடற்குளிப்புக்களுக்கு மிகவும் வசதியாக அமைந்துள்ள பீச் ஹோட்டல் ஒன்று இந்த மாதத்திலிருந்து செயற்பட ஆரம்பிப்பது ஒரு வரப்பிரசாதம் என்று கொள்ளலாம். இவ்வாறு தான் 'Global Towers' இன் பொது முகாமையாளராகப் பதவியேற்றிருக்கும் திரு. இந்திரஜித் பெருமைப்படுகின்றார். வெளிநாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப்பயணிகளை விடவும் உலக நாடுகள் பலவற்றிலும் பரந்து வாழும் இலங்கையர்களே இதனால் மிகவும் பயனடையவுள்ளனர் என்று நம்பமுடியும். வெள்ளவத்தைக்கடற்கரையில் ஒய்யாரமாக உயர்ந்து நிற்கும் 'Global Towers' பிரித்தானியாவின் 'Global MoreLand Group' நிறுவனம் இலங்கையில் அமைத்துள்ள முதலாவது சுற்றுலாப்பிரயாணிகளுக்கான ஹோட்டலாகும். அதன் பொது முகாமையாளராக பொறுப்பேற்றுள்ள இந்திரஜித் சிவநாயகம் அவர்கள் விடயங்களை எடுத்து விளக்குவதில் ஜாம்பவானாக விளங்கிய ஊடகவிய லாளரான எஸ்.டீ.சிவ நாயகத்தின் புத்திரர்களில் ஒருவர் என்பது அவருடன் பேசிய போது பளிச்சென்று வெளிப்பட்டது. இவரும் கூட இந்நிறுவனத்தின் பிரதம நிர்வாக அதிகாரியான சந்திரா மோடி போன்றே நீண்ட கால ஹோட்டல் அனுபவம் மிக்கவராவார். கொழும்பு கலாதாரி ஹோட்டலிலும் முன்னோடியான 'MARRIOT' ஹோட்டலிலும் எட்டு ஆண்டுகள் வரை உதவிமுகாமையாளராக பணியாற்றிய இவர் டுபாய் 'Hilton' ஹோட்டலில் 13 ஆண்டுகள் சேவையாற்றி அனுபவம் பெற்றிருக்கின்றார்.





அக்காலத்தில் சுவிற்சர்லாந்து, இலண்டன், பிரான்ஸ், ஜேர்மன், நெதர்லாந்து, ஆஸ்திரியா, பெல்ஜியம் ஆகிய நாடுகளிலுள்ள ஹில்ரனின் சகோதர நிறுவனங்களான ஹோட்டல்கள் பலவற்றிலும் சேவையாற்றி பல துறை அனுபவங்களை பெற்றுக் கொண்டவராவர். இந்த அனுபவங்கள் இப்போது குளோபல் ரவர்ஸ் ஹோட்டலிற்கு பயன்படும் சொத்துக்களாக உள்ளன. 160க்கும் அதிகமான அறைகள் கொண்ட இந்த ஹோட்டல் பிரதானமாக வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கே அதிகம் பயன்படும் என்று இவர் நம்புகின்றார். இடப்பெயர்வுகளாலும் மற்றும் பல்வேறு காரணங்களாலும் வெளிநாடுகளில் சென்று உல்லாசமாக வாழ்பவர்கள் தமது நாட்டிற்கு வந்து மன அமைதியுடன் தங்கியிருந்து திரும்பிச்செல்வதற்கு இது ஏற்றதாக இருக்கும். ஐந்து நட்சத்திர ஹோட்டலில் உள்ளது போன்ற வசதிகளை ஒப்பீட்டளவில் குறைந்த செலவுகளுடன் 'Global Towers' வழங்கப்போகின்றது என்று தெரிவிக்கும் பொதுமுகாமையாளர், தங்குபவர்கள் பாதுகாப்பையும், தரமான உணவு விடுதியையும், அனுபவமிக்க உயர்தர சமையல் நிபுணர்களால் சமைக்கப்படும் உணவுகளையும் பூரிப்பையும் உணர்வார்கள். அவர்கள் கொடுக்கும் பணத்துக்கு ஏற்ற பெறுமதியைப் பெற்றுக் கொள்வார்கள் என்று கூறுகின்றார்.

யூகி

ஹோட்டல் அமைந்திருக்கும் இடம் பல சௌகரியங்களை தரும். வெள்ளவத்தையின் கடற்கரை மட்டுமல்ல., நடந்து கடக்கும் தூரத்தில் வசதிகள் அனைத்தும் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த ஹோட்டல் விரைவில் இலங்கையின் பல்வேறு நகரங்களிலும் கிளைகளை ஆரம்பிக்க விருப்பதுடன், குளோபல் ரவர்ஸ்ஸுடன் இணைக்கப்படும் விதத்தில் இதனருகே 750 மில்லியன் செலவில் மற்றுமொரு ஹோட்டல் அமைந்ததும் இதுவும் ஒரு இரட்டைக்கோபுரமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுப்பற்றாளர் நடேசன்




தமிழ் பேசும் மக்க ளின் சிந்தனையை ஒருமுகப் படுத்தும் பெரும் பணிக்கு பேனா முனை யினால் பங்களிப்பு செய்தவர் ஊடக வியலாளர் திரு.ஐயாத் துரை நடே சன். ஒரு கட்டுரை யாளராக அவர் செய்த பணி அவரை ஒரு நாட்டுப் பற்றாளர் என்னும் மதிப்பு நிலைக்கு உயர்த்தியது. மே 31 ஆம் திகதி மு.ப. 9.45 மணி வரையில் மட்டக்களப்பில் சுட்டுக்கொல்லப்பட்ட இவரது மரணச் சடங்குகள் ஜூன் 3 ஆம் திகதி இவரது பிறந்த ஊரான நெல்லியடியில் நடைபெற்றது. மாணவ,மாணவியர் 'பாண்ட்' வாத்திய இசைமுழங்க ஊடக வியலாளர்கள் மற்றும் சிறுவர்கள், முதி யோர்கள் என்ற வேறுபாடின்றி இறுதி யாத்திரையில் பல்லாயிரம் பேர்கள் கறுப்புப் பட்டியணிந்து கலந்து கொண்டிருந் தனர்.அஞ்சலி நிகழ்வில் இலங்கை ஊடக வியலாளர் ஒன்றியத்தின் தலைவர் இரா. துரைரத்தினம் பின்வருமாறு உரையாற்றி னார். "நடேசன் இந்த மாதிரியான ஒரு மரணத்தை முன்னரே எதிர்பார்த்து பாது காப்புடன் இருந்தார். எம்மை மட்டக்களப்பு மண் அங்கீகரிக்கவில்லை. பிறந்த மண் ணும் மறந்து போயிருக்கும். என்று அவர் அடிக்கடி கூறுவார். ஆனால் இன்று நடே சனை உலகமே அங்கீகரித்திருக்கின்றது" என்று கூறினார்.

நிகழ்வில் யாழ் மாவட்ட எம்.பிக்கள் மற்றும் அரசியல்துறைப்பொறுப்பாளர்கள், போராளிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கல்வித்துறை அதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொண்டு அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் சார்பில் பத்திரிகைப்பேரவை உறுப்பினர் சுனந்த தேசப்பிரிய கலந்து கொண்டு உரையாற்றினார். "ஜனாதிபதி சந்திரிகா வின் ஆட்சியில் தேர்தல் காலத்தில் அன்று நிமலராஜன் கொல்லப்பட்டார். தேர்தல் இடம்பெற்ற இரண்டே மாதங்களில் இன்று நடேசன் கொல்லப்பட்டுள்ளார்" என அவர் தெரிவித்தார்.

கனடாவின் ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் சார்பில் ஊடகவியலாளர் கனகரவி ஒன்றரை இலட்சம் ரூபாவை நடேசனின் குடும்பத்தினரிடம் கையளித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு உடல் எடுத்துச் சென்ற வழியில் வன்னியில் முக்கிய அஞ்சலிகள் முதல் நாளே நடைபெற்றி ருந்தன. அங்கு புலிகளின் அரசியற்றுறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், மலையக மக்கள் முன்னணித்தலைவர் பெ. சந்திரசேகரன் ஆகியோர் அஞ்சலி நிகழ்வுகளில் கலந்து கொண்டிருந்தனர்.

ஊடகவியலாளர் நடேசனுக்கு நிகழ்ந் தது கருத்துச்சுதந்திரத்திற்கும் அதன் வழியே பத்திரிகைச்சுதந்திரத்திற்கும் விடுக்கப்பட்ட காட்டு மிராண்டித்தனமான சவாலாகும். பல தமிழ், சிங்கள ஊடக வியலாளர்களும் கேலிச்சித்திரம் வரைப வர்களும் கூட அச்சுறுத்தப்பட்டும், வன் முறைக்குள்ளாக்கப்பட்டும் பயமுறுத்தப் பட்டுள்ளனர். சில மாதங்களுக்கு முன்னர் ஊடகவியலாளர் டி. சிவராம் அவர்களின் கொழும்பு, கல்கிசையிலுள்ள வீடு பொலி ஸாரால் சோதனையிடப்பட்டிருந்தது. இதன் பின்னரே நடேசன் மீது துப்பாக்கி நீண்டது. இத்தகைய அராஜகங்கள் நீண்டு செல்வதை நாகரீக சமூகம் அனுமதிக்க லாகாது.

நடேசனுடனான மறக்கமுடியாத சந்திப்பு பற்றி இந்து மதகுரு ஒருவரான இரகுபதி சர்மா பின்வருமாறு எழுதுகின்றார்.

# சிறையில் இருந்தபடியே நான் சந்தித்த ஊடகவியலாளர் அமரர் ஐ.நடேசன்

2003 ஆம் ஆண்டு மட்டக்களப்பு கல்லடி ஸ்ரீ இராம கிருஷ்ண மிஷனில் உள்ள எனது பிள்ளைகளைப் பார்ப்பதற் காக நானும் எனது மனைவியும் டிசெம்பர் மாதம் மட்டக்களப்பு சிறைச்சாலைக்குப் போய் இருந்தோம். அந்த வேளையில் அமரர் ஜி. நடேசன் அவர்களை என்னை வந்து சந்திக்குமாறு அழைத்திருந்தேன். எனது அழைப்பைப் பெருந்தன்மையுடன் ஏற்று சிறைச்சாலை அத்தியட்சகரது காரியாலயத்தில் வைத்து என்னுடன் சுமார் 4 மணி நேரம் உரையாடினார்.

எந்த விதமான படாடோபங்களும் இல்லாது பண்பாகவும் கனிவுடனும் அன்புடனும் உரையாடினார். எமது தமிழ் அரசியல் கைதிகளது விடுதலை தாமதமடைவது குறித்து கருத்துக்களை யும் எமக்குள்ள பல தேவைகள் அதாவது ஐ.சி.ஆர்.சியின் தற்போதைய அணுகு முறைகள் எப்.ஆர்.சி என்ற குடும்ப புனர்வாழ்வு நிலையம் எமக்கு வழங்கிய இலவச மருத்துவ சேவையும் அந்நிறுவனம் பல மாதங்களாக தனது சேவையை இடை நிறுத்திக் கொண்டமையையும் அறிந்து மிகவும் மனவேதனையடைந்தார்.

அத்துடன் அனைத்து சிறைச்சாலை களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளது விபரங்களையும் குறிப்பெடுத்துக் கொண்டார். இவ்வாறு என்னுடன் உரையாடி, உறவாடி என் மனதில் நீங்கா இடத்தைப் பிடித்துக் கொண்டு என்னிடம் இருந்து விடைபெற்றுச் சென்றார்.

இது தவிர தமிழ் அரசியல் கைதிக ளாகிய நாம் அங்கு மேற்கொண்ட உண் ணாவிரதம் தொடர்பான விபரங்களை தான் சார்ந்திருந்த ஊடக நிறுவனங்களான 'வீரகேசரி','ஐ.பி.சி.வானொலி இலண்டன்' மூலமாக வெளிக்கொணர்ந்து எமது விடுதலைக்காக பல கோணங்களில் இருந்து உலகிற்கு தனது எழுத்தால் எடுத்து வலியுறுத்தி தனது தாராள பங்களிப்பைச் செய்தார்.

இப்படிப்பட்ட பல பண்புகள் நிறைந்த ஒரு ஊடகவியலாளனாக பல இதயங்களையும் கைப்பற்றியிருக்கும் ஐ. நடேசன் அவர்கள் 31-05-2004 திங்கள் அன்று அமரரானார். இதனை ஊடகங்கள் மூலம் அறிந்து நாம் பட்ட அதிர்ச்சி கொஞ்சநஞ்சமல்ல. கடந்த டிசெம்பரில் அவருடன் எனது முதல் சந்திப்பு அதுவே கடைசிச்சந்திப்பாக இருக்கும் என்று நான் கனவில் கூட எண்ணியிருக்கவில்லை.

பிரம்மஸ்ரீ சி.ஐ.இரகுபதி சர்மா
இந்து மதகுரு
தமிழ் அரசியல் கைதிகள் பிரிவு
களுத்துறை சிறை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணமக்கள் தேடல்



## மணமகன் தேவை

யாழ் நகரைச் சேர்ந்த, பிரித்தானியாவில் 4 வருடங்களாக இருக்கும் 20 வயதுடைய உயர்கல்வி படித்துக் கொண்டிருக் கும் பெண்ணுக்கு UK-Visa வுடன் கூடிய மணமகன் தேவை.
நட்சத்திரம் - கேட்டை-விருச்சிகம், உயரம் : 5' 6"
REF:UKF165

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த் 22 வயதுடைய கொழும்பில் கணினித்துறையில் கல்வி கற்கும் பெண்ணுக்கு UK-Visa வுடன் கூடிய மணமகன் தேவை.
நட்சத்திரம் - பரணி, உயரம் : 5' 5"
REF:SLF164

யாழ் இணுவிலைச்சேர்ந்த 39 வயதுடைய கணினித் துறை ஆசிரியராகப் பணிபுரியும் பெண்ணுக்கு UK/ Canada-Visa வுடன் கூடிய மணமகன் தேவை.
நட்சத்திரம் - பூராடம், உயரம் : 5' 5"
REF:SLF162

யாழ் நல்லூர் - ஆசிரியராக பணிபுரியும் 39 வயதுடைய பெண்ணுக்கு UK-Visa வுடன் கூடிய மணமகன் தேவை.
நட்சத்திரம் - பூராடம், 2இல் செவ்வாய், உயரம் :5' 4"
REF:SLF159

பிரித்தானியாவில் 6 வருடங்களாக இருக்கும் 26 வயதுடைய தற்போது AAT படித்துக்கொண்டிருக்கும் பெண்ணுக்கு UK-Visa வுடன் கூடிய மணமகன் தேவை.
நட்சத்திரம் - உத்தராடம், உயரம் :5' 5"
REF:UKF158

கொழும்பில் உயர்கல்வி படித்துக்கொண்டிருக்கும் 22 வயதுடைய பெண்ணுக்கு UK-Visa வுடன் கூடிய மணமகன் தேவை.
நட்சத்திரம் - ஆயிலியம், உயரம் : 5' 4"
REF:SLF154

யாழ். வட்டுக்கோட்டையை சேர்ந்த, பிரித்தானியவில் 7 வருடங்களாக இருக்கும் 28 வயதுடைய உதவிக் கணக்காளராக வேலைபார்க்கும் பெண்ணுக்கு UK-Visa வுடன் கூடிய அலுவலகத்தில் வேலைபார்க்கும் மணமகன் தேவை.
நட்சத்திரம் - ரேவதி, 7இல் செவ்வாய், உயரம் :4' 5"
REF:UKF155

யாழ். கோப்பாயைச் சேர்ந்த 46 வயதுடைய, பெண்ணுக்கு UK, அல்லது ஐரோப்பாவில் விசாவுடன் கூடிய மணமகன் தேவை.
நட்சத்திரம் - உத்தராடம், உயரம் : 5' 4"
REF:SLF156

இலங்கையில் வசிக்கும் 21 வயதுடைய (A/L) படித்த முடித்த பெண்ணுக்கு ஐரோப்பாவில் விசாவுடன் கூடிய மணமகன் தேவை.
நட்சத்திரம் - சுவாதி, உயரம்: 5' 5"
REF:SLF146

Solicitors Form இல் வேலைபார்க்கும் பிரித்தானியாவில் பிறந்த 31 வயது பெண்ணுக்கு படித்த மணமகன் தேவை. UK விரும்பத்தக்கது.
நட்சத்திரம் - மிருகசீரிடம், உதயத்துச் செவ்வாய், உயரம் : 5' 5"
REF:SLF147

யாழ்-அராலி 23 வயதுடைய கலைத்துறையில் உயர் கல்வி பெற்ற பெண்ணுக்கு UK இல் விசாவுடன் இருக்கும் மணமகன் தேவை. நட்சத்திரம் -ஆயிலியம், உயரம் : 5' 0"
REF:SLF140

யாழ். மானிப்பாயைச் சேர்ந்த, தற்போது இலண்டனில் நிறுவன உதவி முகாமையாளராகப் பணிபுரியும் பிரித்தானியக் குடியுரிமை பெற்ற 27 வயதுடைய பெண்ணுக்கு நன்றாக ஆங்கிலம் கதைக்கத் தெரிந்த 32 வயதுக்குட்பட்ட மணமகன் தேவை. நட்சத்திரம் - பூரட்டாதி, உயரம்: 5'4"
REF:UKF128

யாழ்-மல்லாகத்தைச் சேர்ந்த, கொழும்பில் IT வர்த்தகத்துறையில் கல்விகற்குக் கொண்டிருக்கும் 28 வயதுடைய பெண்ணுக்கு ஐரோப்பாவில் விசாவுடன் இருக்கும் மணமகன் தேவை. நட்சத்திரம் - அச்சுவினி, உயரம்: 5'6"
REF:SLF129

கொழும்பில் ஆங்கில மொழியில் கணினித்துறையில் படித்துக்கொண்டிருக்கும் 20 வயதுடைய கிறிஸ்தவப் பெண்ணுக்கு, கனடா அல்லது ஐரோப்பாவில் விசாவுடன் இருக்கும் மணமகன் தேவை. உயரம் : 5'2"
REF:SLF130

கொழும்பில் Sofware Engineering படித்து முடித்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 30 வயதுடைய பெண்ணுக்கு ஐரோப்பாவில் அல்லது கனடாவில் விசாவுடன் இருக்கும் மணமகன் தேவை. நட்சத்திரம் பூசம், உயரம்: 5'2"
REF:SLF134

யாழ். கந்தர்மடம். இந்தியாவில் 13 வருடங்களாக இருக்கும் மின்னியல் பட்டதாரி தேர்ச்சி பெற்ற 25 வயதுடைய பெண்ணுக்கு UK அல்லது ஐரேப்பாவில் விசாவுடன் கூடிய மணமகன் தேவை. நட்சத்திரம் - அனுசம், உயரம்: 5'5"
REF:INF137

## மணமகள் தேவை

யாழ்-மீசாலை, நிதிநிறுவனத்தில் விற்பனை முகாமையாளராக வேலைபார்த்துக்கொண்டு பிரித்தானியாவில் 7 வருடங்களாக இருக்கும் 29 வயதுடைய ஆணுக்கு UK-Visa வுடன் இருக்கும் மணமகள் தேவை.
நட்சத்திரம் - மகம் 2ம் பாதம், உயரம் :6'
REF:UKM166

யாழ். மாவிட்டபுரம் - Store Manager ஆக வேலைபார்க்கும், 12 வருடங்களாக பிரித்தானியாவில் இருக்கும் 39 வயதுடைய ஆணுக்கு UK ஐரோப்பா, கனடா, அவுஸ்திரேலியாவில் விசாவுடன் கூடிய மணமகன் தேவை.
நட்சத்திரம் - பூரட்டாதி, உயரம் :5' 8"
REF:UKM160

பிரித்தானியாவில் நிரந்தர விசாவுடன் இருக்கும் 38 வயதுடைய ஆணுக்கு இலங்கையில் (A/L) படித்த மணமகள் தேவை.
நட்சத்திரம்: அத்தம், ராசி - கன்னி, உயரம்: 5'5"
REF:UKM157

பிரித்தானியாவில் இருக்கும் 34 வயதுடைய இலங்கை Bsc பட்டதாரிக்கு மணமகள் தேவை.
நட்சத்திரம்: திருவாதிரை, உயரம்: 5'7"
REF:UKM153

சொந்த Supermarket/ House வைத்திருக்கும், 10 வருடமாக பிரித்தானியாவில் முகாமையாளராக பணிபுரியும் 35 வயதுடைய ஆணுக்கு குடும்ப பெண்ணான மணமகள் தேவை. நட்சத்திரம்: பூரட்டாதி 4ஆம் பாதம், உயரம்: 5'11"
REF:UKM152

Parmacy இல் பணிபுரியும் பிரித்தானியாவில் 5 வருடங்கள் இருக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 34 வயதுடைய ஆணுக்கு 31 வயதுக்கு உட்பட்ட மணமகள் தேவை.
நட்சத்திரம்: உத்தராடம், உயரம்: 5'6"
REF:UKM151

Electronic Company இல் பணிபுரியும் பிரித்தானியக் குடியுரிமை பெற்ற 25 வயதுடைய ஆணுக்கு A/L படித்த மணமகள் தேவை.
நட்சத்திரம்: பூரம், உயரம்: 6'0"
REF:UKM150

Supermarket முகாமையாளராக பணிபுரியும் பிரித்தானியக் குடியுரிமை பெற்ற 31 வயதுடைய ஆணுக்கு A/L படித்த மணமகள் தேவை.
உயரம்: 5'5"
REF:UKM148

UK இல் சொந்தக்கடை வைத்திருக்கும் 24 வயதுடைய ஆணுக்கு UK, ஐரோப்பா அல்லது கனடாவில் விசாவுடன் இருக்கும் மணமகள் தேவை.
நட்சத்திரம்: மிருகசீறிடம், 7இல் செவ்வாய், உயரம்: 5'8"
REF:UKM145

பிராண்ஸ் இல் Perfume factory இல் வேலைபார்க்கும் 38 வயதுடைய ஆணுக்கு இலங்கையில் அல்லது ஐரோப்பாவில் இருக்கும் மணமகள் தேவை.
REF: FRM131



யாழ். சாவகச்சேரியை சேந்த பிரித்தானியாவில் 10 வருடங்களக வசிக்கும் சொந்த Supermarket வைத்திருக்கும் 28 வயதுடைய ஆணுக்கு மணமகள் தேவை. நட்சத்திரம்: அவிட்டம், உயரம்: 5'6"
REF: UKM139

யாழ்-நல்லூர், நோர்வே நாட்டுப் பிராஜ உரிமைபெற்று, அங்கு ஆசிரியராகப் பணிபுரியும் 44 வயதுடைய ஆணுக்கு மணமகள் தேவை. நட்சத்திரம்: உத்தராடம்.
REF:UKM125

பிரித்தானியக்குடியுரிமை பெற்ற 35 வயதுடைய இலத்திரனியல் பொறியியலாளருக்கு ஆங்கில மொழியில் பட்டதாரி முடித்த மணமகள் தேவை. நட்சத்திரம் - ரேவதி
REF: UKM118

**மேலதிக விபரங்களுக்கு**
**தமிழ் உலகம் சஞ்சிகையுடன்**
**தொடர்பு கொள்ளவும்.**
**தொலைபேசி இல. 0044 20 8455 9001**

**மணமக்களை இணைப்போம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிஸ்மாநகரில் கிழக்தேயவாசனையில்
சைவ, அசைவ உணவுவகைகளை
அதிஉயர்தர சுவையுடன் வழங்கும்
ஒரே உணவகம் கிருஷ்ணா பலெஸ்



சுத்தம்
சுவை
தரம்



PALAIS DE KRISHNAA
RESTAURANT INDIEN
Spécialités Indiennes
Curry & Grillades Tandoori

16, Rue du Père Guérin
75013 Paris
Tél. : 01 45 88 69 92
Métro : Place d'Italie






# K.T. COLOMBO TASTE

Srilankan & South Indian Cuisine



100 இடியப்பம் சொதி, சம்பலுடன் £14 மட்டுமே
அத்துடன் உடன் றொட்டிக்கும் நாடுங்கள்

கொழும்பு சுவையகம்



Proprietor
C.Mohan
Telephone
020 8991 6834
Mobile:
07958 938 939

5 Bilton Road, Perivela, Greenford, Middx
UB6 7AY, England



# KAMALAM'S
SALE CENTRE



இலங்கை, இந்தியா, தாய்லாந்து
மற்றும் உலகின் பல பாகங்களில்
இருந்தும் இறக்குமதி
செய்யப்படும் உடன்
மரக்கறி வகைகள்!

கடலுணவுப்பொருட்கள்:-
மீன், இறால், நண்டு, கணவாய்



பத்திரிகைகள், வார சஞ்சிகைகள்,
புதிய, பழைய திரைப்படங்கள்
Audio, Video, CD, DVD

அனைத்தையும் பெற்றுக்கொள்ள
பேர்லின் மாநகரில் ஒரே ஸ்தாபனம்
கமலம் வர்த்தக நிலையம்

All international calling cards
Available for retail & whole sale

KAMALAM'S
Sale Centre
Fulda Str-12
12045 Berlin
Germany
Te: 030 623 9362
Fax: 030 623 7126






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UTHAYAM BUSINESS DIRECTORY
உதயம்

FAST PRINT
PRINTING & COPY SPOT
2641 Eglinton Ave, E. Scarborough, ON. M1K 2S2 (Brimly & Eglinton)

We Provide Complete Printing Services

- Signs
- Rubber Stamp
- Typesetting
- Resume
- Cerlux Binding
- Fax Services
- Flyers
- Booklets
- Menus
- Labels
- Brochures
- Invitations
- Lamination
- Letter Heads
- Business Cards
- Certificates
- Report Cards
- Price Lists

அனைத்து விதமான அச்சுத்தேவைகளுக்கும் ஒரே இடம்

Contact:
Kan Kodeeswaran - Canada
Tel: (416) 265-4605
Fax: (416) 265-3915

MORELAND
Land & Development
M
CONSTRUCTION & CONTRACTS DIVISION

- Architectural & Engineering Services.
- Council Submissions & Negotiations
- Construction Contracts.
- Refurbishments.

LOWEST COST
HIGHEST QUALITY
TIMELY COMPLETION

* Extensions.
* Loft conversions.
* Conservatories.
* Roofing & Carpentry.
* Painting & Interior decorations.
* Electrical, Plumbing & Heating.
* General maintenance.

- Supervisions & Co-Ordination of Specialised Contractors.
- Contract & Project Management.
- Building Regulations & Control works.

உங்கள் சகல கட்டட மற்றும் அனைத்து வீட்டு வேலைகளையும் குறைந்த செலவுடன் உயர்தர வேலைகளை குறித்த நேரத்தில் முடித்துக்தரக் காத்திருக்கும் ஒரே நிறுவனம்

Moreland Land & Development
தொடர்புகளுக்கு பாலா: 020 8455 9001 (London)



CAAVERI PRODUCTS
80 Mark house Road
Walthamstow
London E17 8DG
England
Tel: 0044 20 8520 1923
Mobile: 0044 79 8445 6987
Fax: 0044 20 8509 7497
சர்வதேச ஏற்றுமதியாளர்கள்






உங்களுக்குத்தேவையான சகல மளிகைப்பொருட்கள் இலங்கை, இந்திய, தாய்லாந்து நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கடலுணவு வகைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

மளிகைப்பொருட்கள், மரக்கறிகள்,
கடல் உணவுப்பொருட்கள், சஞ்சிகைகள்

உலகின் சகல நாடுகளுக்கும் துரித கெதியில் பணமாற்றுச்சேவையா? உடன் நாடுங்கள்
020 8905 7765

VIDEO
AUDIO
CD, VCD,
DVD
MARUTHI VIDEO

MARUTHI CASH & CARRY
15-17 Queensbury Station Parade, Queensbury, Middlesex HA8 5NR, England.
Tel: 020 8952 6655 www.maruthi.co.uk




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GLOBAL TOWERS

Colombo - 6





12 மாடிகளைக்கொண்ட Global Tower யூலை 2004 இல் வேலைகள் முடிவடைகிறது.

கொழும்பு - வெள்ளவத்தை கடலோரப் பகுதியில் அதிஉயர் தரத்துடன் அமையும் மூன்று அறைகள் கொண்ட இவ் வீடுகள் கண்குளிர் கடல் முன் நகர்புறங்களையும் காட்டி நிற்கிறது.

தற்போது 3 வீடுகள் மட்டுமே விற்பனைக்கு உண்டு. இவ்வீடுகளை நீங்களும் வாங்கி உங்கள் முதலீட்டைப் பெருக்கிக்கொள்ள வேண்டுமா?

வாங்குபவர்களுக்கு :- 50% வீட்டுக் கடன் வழங்கப்படும் அத்துடன் 10% வாடகை வருமானத்திற்கும் உத்தரவாதம் உண்டு.


Kitchen


Main bathroom


Bathroom 2 & 3




Bedroom Floor


Living room


Balcony

மேலதிக தொடர்புகளுக்கும் பதிவுகளுக்கும்

Tel: 0044 20 8455 9001

London


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Yaalini Europe Ltd

## New Fashion Tamil Trader

The UK's No.1 and Europe's leader in imports, exports and wholesale of quality Srilankan and Indian products including fresh vegetables

We supply many more leading brands

MDI LARICH LION Elephant Soft Drinks

The No.1 Brand for Tamil Foods

Our own products include:
Yaalini products, Thiru products, Yaalsea products and Yaalini Frozen Foods

The No.1 Brand for Tamil Foods

## J&K Group

unit 10, Kimpton Business Centre, Minden Road
Sutton, Surrey SM3 9PF,UK

Tel : 020 8641 1161 (10 lines) Fax : 020 8641 8668




# T K Siya Bhavan

SRI LANKAN & SOUTH INDIAN CUISINE

*We cater for all occasions*



திருமணம், பிறந்தநாள் மற்றும் அனைத்து விசேட நிகழ்வுகளுக்கும் குறித்த நேரத்தில் தரமான பல்சுவை உணவு வகைகளை வழங்கும் ஒரே நிறுவனம் T K Siya Bhavan

கலை, கலாசார, பண்பாட்டு நிகழ்வுகளுக்கான அழைப்புகளுக்கு அதி விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறார்கள்.

7 THE PARADE, SUDBURY HEIGHTS AVENUE,
GREENFORD, MIDDLESEX, UB6 OLZ, ENGLAND

**Tel : 020 8902 8083**

Mobile : 07958 31 95 63

'தமிழ் உலகம் - LONDON' ஐப் படிக்க இத்தனை சிரமப்படுவானேன்!



**நீங்கள் ஏன் சந்தாதாரராக வேண்டும் ?**

* கடைக்குப்போய் வரும் நேரம் மிச்சம்
* பிரதிக்கு முண்டியடிக்கும் அசௌகரியம் இல்லை
* பிரதிகள் முடிந்து விடும் என்ற அவதியில்லை!

**'தமிழ் உலகம் - LONDON' சந்தாதாரராகுங்கள்**

சிரமமின்றி பிரதிகள் வீடு வந்து சேரும்

**அது மட்டுமா?**

நீங்கள் இலண்டனில் வசிப்பவராயின் £5 மட்டுமே செலுத்தி இலங்கையிலுள்ள உங்கள் உறவினர்களுக்கு வருடம் முழுதும் **'தமிழ் உலகம்** - LONDON' அவர்கள் வீடு சேர வழி செய்யும் வாய்ப்பு! இன்றே சந்தாதாரராகுங்கள்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MORELAND International

M

## Land and Development

**வீடுகள், காணிகள் விற்பனைக்கு (கொழும்பு)**

| | | | |
|---|---|---|---|
| Colombo - 06<br>House -13 per<br>(Upstair House)<br>4-B/Room<br>2 Parking<br>Vaverset Place -21 Mil | Dehiwela<br>House - 22 Per<br>4 B/Room - 3 Bath<br>Parking/Garden<br>16 Mil | Colombo - 6<br>3B/Room Apartment<br>with 4 shops in<br>Facing Manning Place<br>20 Mil | Colombo - 06<br>Land<br>12.6 Per<br>Facing Marrine Drive<br>2.0 Mil (Nego) |
| Colombo - 03<br>Land - 30 Per<br>10 th Lane<br>(close to the beach)<br>14 LKS P.P | Colombo - 03<br>Land 20 Per<br>10 th Lane<br>(Close to the beach)<br>12.5 LKS P.P | Colombo - 04<br>Rest House in 22 Per<br>15 B/Room - 15 Bath<br>9 Car park<br>Lauries Road - 45 Mil | Colombo - 04<br>Apartment (Super Luxury)<br>1st Floor<br>(Facing Road)<br>1000 sq/ft - 3 B/R- 2 Bath<br>Swimming Pool/GYM<br>7.5 Mil (Nego) |

# SATHIY STORE

Basel

Indian Bazaar

உலகின் சகல நாடுகளுக்கும் துரித கதியில் பணமாற்றுச்சேவை! அவசர தேவைகளை முன்னிட்டு சில மணி நேர சேவை



**நம்பகமான - பாதுகாப்பான - விரைவான**

**துரித சேவைக்கு நாடுங்கள் சக்தி தமிழ்க்கடை**



**Fast cash - Send today - Collect with in 1 hour**

K.SATHIY
SATHIY STORE
INDIAN BAZAAR
ELISABETHENONLAGE-11
4051 BASEL
SWITZERLAND

TEL : 061 383 8686
FAX : 061 383 8688
H.P : 079 669 4207

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிஉயர் தரத்துடன் அழகுறவே அமையும் வீடுகளை கொழும்பில் வாங்க விரும்புகிறீர்களா?

படுக்கை அறைகள் - 2
சமையல் அறை - 1
வரவேற்பு/சாப்பாட்டு அறை- 1
குளியல் அறைகள் - 2
குளிரூட்டிகள் (Air Conditioned)
வாகனத்தரிப்பிடம் (Car park)
அளவு : 1000 சதுர அடி
விலை : ரூபா 78 லட்சம்

**Gomes Pathe Apartments**
Colombo (Duplication Road) De fonseka Road

70% வரை வீட்டுக்கடன் வசதிகள் உண்டு
தொடர்புகளுக்கு Krishna (London)

**020 8455 9001**

# SAI TRADER GmbH

Fresh, Frozen and Dry Foods Importers & Wholesalers

உடன் மரக்கறி, பழ வகைகள், குளிர்-அதிகுளிரூட்டப்பட்ட உணவு வகைகள், இலங்கை மதுபானம் போன்றவற்றின் நேரடி இறக்குமதியாளர்களும் மொத்தவிற்பனையாளர்களும்.

இலங்கை, இந்தியா, தாய்லாந்து, மலேசியா, கனடா, டொமினிக்கா போன்ற நாடுகளிலிருந்து உடனுக்குடன் இறக்குமதி செய்யப்பட்டு சுவிஸ் தமிழ் வர்த்தக நிலையங்களுக்கு அதி துரித கதியில் விநியோகம் செய்கின்றோம்

SAI TRADER GmbH
Raaterstrasse 24
8175 Windlach
Zurich
Switzerland
**Tel: 0041 1 885 86 50**
**Fax: 0041 1 885 86 51**






# SEKAR SWISS

சேகர் தமிழ்ப் பதிப்பகம்
&
தருஷ் காட் சுவிஸ்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Net Try
SUPERMARKET
புதிய நிர்வாகத்தின் கீழ்

சகல விதமான இலங்கை, இந்திய,
தாய்லாந்து மரக்கறி வகைகள்
மளிகைப்பொருட்கள்
அனைத்து மீன்வகைகள்
தமிழ், ஹிந்தித் திரைப்படங்கள்
OFF - LICENCE

உலகின் சகல நாடுகளுக்குமான பணமாற்றுச்சேவையுடன்
அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

Net Try Supermarket
27 WATLING AVENUE
BURNT OAK, EDGWARE
MIDDX HA8 0LF, ENGLAND

TEL: 020 8952 5959

வெம்பிளியில் ஓர் திரைப்படக் களஞ்சியம்!



# Maruthy Entertainment
மாருதி என்டர்டெய்மென்ட்

DVD Player
Only £ 99 & 10 DVD free



தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் - நாடகங்கள்,
பட்டி மன்றங்கள், அரட்டை அரங்கம், மற்றும்
Devotional CD's, Carnatic CD's & Sinhala CD's
உலகின் சகல நாடுகளுக்குமாக பணமாற்று
சேவையுடன் Money Transfer Service for all
countries

'மாருதியில் இல்லை என்ற பேச்சுக்கே இடமில்லை'

Special Offers
Original Tamil, Hindi, Malayalam & Telugu
DVD, VCD, CD's, Audio,
Video & MP3
For Wholesale & Retail



மேலதிக தொடர்களுக்கு:
K. Sundar
Maruthy Entertainment
44A, 1st Floor,
Ealing Road
Wembley HA0 4TL
England
Tel: 020 8902 2663
Mobile: 079 8539 9521

புதிய திரைப்படங்கள்
10 for £10

Sri Lanka Branch
Symphony Music Corner
257E, Galle Road,
Wallawata, Colombo-6,
Sri Lanka
Tel: 0094 112 505 733

# Vahizan Disc World



Get up to 10% off !!! From our online shopping!!!



வாகீசன் டிஸ்க் வேள்ட்

எம்மிடம் மிகப் பழைய காலத்து படங்கள் தொடக்கம் இன்றுவரையுள்ள வீடியோ பிரதிகள், வீடியோ சீடிகள், டீவிடிகள் என்பன வாடகைக்கு அல்லது மிகக்குறைந்த விலையில் சில்லறையாகவோ அல்லது மொத்தமாகவோ விற்பனைக்குண்டு.
இவற்றை விட சகலவிதமான பக்திப்பாடல்கள், கர்னாடகப்பாடல்கள், கர்னாடகவாத்தியஇசைகள் யாவும் MP3,AUDIO CD, CASSETTE ஆகியவற்றில் பெற்றுக்கொள்ளலாம்

WE SELL TITLES FROM INRECO,GEETHANJALI,VEDU,
RPG,AHUDAN AND FROM MANY OTHER FAMOUS COMPANIES!

Vahizan Disc World
52B Ealing Road, Wembley
Tel: 020 8902 8828
Email : Vahizan@aol.com
www.vahizan.com



Vmpv Video Ltd
537 High Road, Wembley
Tel:020 8902 5055
Email:Videovmpv@aol.com

# RATHY JEWELLERS



நாள் தோறும் புத்தம் புது வடிவங்களுடன்
எப்போதும் மலிவு விலை

28 Ealing Road,Wembley
Middlesex HA0 4TN,England
Tel: 020 8903 3063 Fax: 020 8903 9711


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GLOBAL TOWERS
## HOTEL

COLOMBO - SRI LANKA

உங்கள் விடுமுறை நாட்களின்
உல்லாச சுகத்தைத் தருவது
Global Tower Hotel மட்டுமே









* நீச்சல் தடாகம்
* உணவகம் (சிற்றுண்டிச்சாலை)
* 24 மணிநேர அறை பராமரிப்பு
* நீராவிக்குளியலறைகள்
* 24 மணிநேர பாதுகாப்பு
* உடற் பயிற்சி நிலையம்
* திருமண மண்டபம்

**வீடுகளின் தராதரங்கள்**

முழுமையான சமையல் அறைகள்
3 இரட்டை படுக்கை அறைகள்
3 குளியல் அறைகள்
முழுமையான சேவை வசதிகள்
மத்திய குளிரூட்டி வசதிகள்
முழுமையான தளபாட வசதிகள்
பளிங்குக்கல் கொண்ட நிலம்

1. Double Rooms from $ 45/day

உல்லாச விடுதி யூலை மாதம் 2004 இல் திறக்கப்படும்

For all the facilities of a prestige hotel with the privacy and comfort of your own high specification apartment, rent an apartment at Global Towers for any period of time . . .
From a short overnight stay to a year-long lease, the apartments can cater for up to 8 people and also offers single occupancy rates

Each fully furnished apartment consists of 3 double bedrooms and 3 bathrooms en-suite.

முற்கூட்டிய பதிவுகளுக்கு அழையுங்கள்

**0044 20 8455 9001** (UK)
**0094 11 259 1000** (Sri Lanka)

www.globallanka.co.uk
E-mail: info@globallanka.co.uk

A Project by Global Lanka

Global Investment Lanka Holdings Limited Finchley Road - London NW11 7PE.UK

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Competitive Rates to All Countries A-Z

Sri Lanka
10p

TM
සිගිරි
சீகிரி
SIGIRI

with a SigiriHome account

from Sri Lanka Telecom



best prices - best connections - best quality

visit www.sigiri.net or call our hotlines on 0800 485 1010 (24 hours) or 020 7094 9494

'Top rate in base on 0207 access numbers, add 1p to 0800 access numbers. Other terms and conditions apply

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org